ஓகஸ்ட் 26, 2001
24 பக்கங்கள்
ரூபா 14.00
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI
வார மலர்



விழுந்து நொருங்கிய விமானம்


## ஜனாதிபதி: சொல்லும் செயலும்

## சட்டம் ஒழுங்கு சீர்குலையும் என அச்சம்



பாவனைக்கு நவீன ரசாயன ஆயுதங்கள்

# 'நொக் அவுட்' போட்டி செப்.7



சுடர் ஒளி நாளிதழ் விரைவில் வெளிவருகிறது

# அரசின் யுத்த முனைப்பும் ரசாயன ஆயுதங்களும்

நோர்வே அரசின் அனுசரணையுடன் நடைபெற்று வந்த சமாதான முயற்சிகள் முடங்கிப் போயுள்ளன.

அரசாங்கத்தின் யுத்த முனைப்பு மேலோங்கி நிற்கிறது.

வடக்கிலும் கிழக்கிலும் யுத்த விமானங்கள் தொடர்ந்து குண்டுமாரி பொழிந்து வருகின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கம் தனது போர்த் தேவைகளுக்காக ரசாயன ஆயுதங்களைக் கொள்வனவு செய்துள்ளது என்ற தகவல் வந்தால் எப்படியிருக்கும்.

நிலத்தில் படுத்தோ அல்லது பங்கருக்குள் புகுந்தோ குண்டுத் தாக்குதலால் ஏற்படக் கூடிய கோர விளைவுகளிலிருந்து ஓரளவு தப்பிக் கொள்ளலாம். ஆனால் ரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டால் எதுவுமே செய்ய முடியாது. நிலவுக்கு ஒளித்துப் பரதேசம் போக முடியுமா?

நல்ல வேளையாக அரசாங்கம் தன்னிடம் ரசாயன ஆயுதங்கள் இல்லை என்று தெரிவித்திருக்கிறது.

அச்சமடைந்திருந்த வடக்கு கிழக்கு மக்கள் அரசு தெரிவித்தது உண்மையாகத்தான் இருக்கும் என்ற நம்பிக்கையில் சற்று ஆறுதல் அடைந்திருக்கிறார்கள்.

ரசாயன ஆயுதங்களினை அரசு கொள்வனவு செய்து வைத்திருக்கிறது என்ற தகவலை ''சண்டே லீடர்'' என்ற ஆங்கிலப் பத்திரிகை வெளியிட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசிடம், ரசாயன ஆயுதங்கள் இருக்கின்றன என்று கூறித் தமிழ் மக்கள் அநியாயமாகப் பாதிக்கப்படப் போகிறார்களே என்று அச்சமும் கவலையும் தெரிவித்தனர்.

புலிகள் தங்களுடைய வன்னிச் செயலகத்திலிருந்து விடுத்த அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தனர்:—

வெடித்துச் சிதறி எரிவூட்டும் ரசாயன ஆயுதங்களை இலங்கை அரசு கொள்வனவு செய்திருக்கிறது என்று செய்தி கிடைத்திருக்கிறது. இது பெரும் கவலை தரும் செய்தி. இந்த ஆயுதங்கள் ரஷ்யாவின் உற்பத்தி. இவை சர்வதேச ரீதியில் தடை செய்யப்பட்ட ஆயுதங்கள்.

இந்த ஆயுதங்களால் வெளியேறும் குண்டுகள் வெடித்துச் சிதறும். உள்ளிருக்கும் நச்சு வாயு எங்கும் பரவி களத்தில் உள்ளவர்களை மட்டுமன்றி வெகு தூரத்திலுள்ள மக்களையும் கடுமையாகப் பாதிக்கும். உயிராபத்தை உண்டு பண்ணும்.

இப்படிப்பட்ட ஆயுதங்களை இலங்கை கொள்வனவு செய்ததன் மூலம் ஈழப் போரை ஆபத்தான ஒரு நிலையினுள் தள்ளிவிட அரசு கங்கணம் கட்டியிருக்கிறது.

ரஷ்ய அரசைத் தவிர உலகில் சகல நாடுகளும் இந்த ஆயுத பாவனையை தடை செய்துள்ளன.

யுத்த நெறி முறைகளுக்குப் புறம்பானதும், விபரீதமான விளைவுகளை உண்டு பண்ணக் கூடியவையுமான ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதில் அரசு எந்தவித தயக்கமும் காட்டவில்லை. இதன் மூலம் அரசு தனது யுத்த வெறியை வெளிப்படுத்தியிருக்கிறது. அத்துடன் இனப் பிரச்சினைக்கு இராணுவ தீர்வில்தான் தனக்கு நம்பிக்கை உண்டு என்பதையும் அரசு தெரிவித்திருக்கிறது.

தமிழர்களின் தொடர்ச்சியான தேசிய பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காணும் முயற்சிக்கு அரசின் இந்தப் புதிய நடவடிக்கை பேரிடியாக விழுந்துள்ளது.

தமிழர் தாயகத்து நகரங்கள், கிராமங்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் வான் படைத் தாக்குதல்கள் ஏற்கனவே சமாதானம் மீதான நம்பிக்கையைச் சிதைத்துவிட்டன.

இப்போது ரசாயன ஆயுதங்கள் வேறு வந்துவிட்டன. ரசாயன ஆயுதங்களைக் கொள்முதல் செய்த இலங்கை அரசை அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், இந்தியா



உட்பட சர்வதேச சமூகம் கண்டிக்க வேண்டும். ஆயுதங்களின் பயன்பாட்டால் ஏற்படும் விளைவுகளைச் சுட்டிக்காட்டி அரசை எச்சரிக்க வேண்டும். இப்படிப் புலிகள் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள்.

புலிகளின் இந்த அறிக்கைக்கு அரசாங்கம் மறுப்புத் தெரிவித்திருக்கிறது.

ரசாயன ஆயுதங்கள் எதனையும் இலங்கை அரசு கொள்வனவு செய்யவில்லை. செய்யப்போவதுமில்லை. பொய்யான தகவல்களை ஊடகங்களும் விடுதலைப் புலிகளுக்குச் சார்பான இணையத்தளங்களும் வழங்கி வருகின்றன. ஊடகங்கள் இவ்வாறான செய்திகளை வெளியிட வேண்டாம். மீறி நடப்பவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்க தகவல் திணைக்களம் தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

ஆனால் கடந்த 14ஆம் திகதி லண்டன் பி.பி.ஸி வானொலிக்கு வழங்கிய செவ்வியில் இராணுவப் பேச்சாளர் சனத் கருணாரட்ண ரஷ்யாவிடமிருந்து ஆர்.பி.ஓ—ஏ ஷ்மெல் ரொக்கெற் லோஞ்சர்களை (RPO-A Shmel Rocket Launchers) இலங்கை கொள்வனவு செய்தது உண்மை என்றார். ஆயினும் ஓர் ஆயுதம் கொள்வனவு செய்யப்பட்டால் அது பயன்படுத்தப்படும் என்று பொருள்படாது என்றார்.

இது தொடர்பாக அவருடன் தொடர்புகொண்டு கேட்டபோது—

''எனது பி.பி.ஸி செவ்வியில் எந்தத் தவறும் இல்லை. கொள்வனவு செய்யப்பட்டவை ரசாயன ஆயுதங்கள் அல்ல. அத்துடன் அவை சர்வதேச ரீதியில் தடை செய்யப்பட்டவையும் அல்ல'' என்றார்.

அப்படியானால் அந்த ஆயுதங்களைக் கடந்த சில வாரங்களாக இடம்பெறும் விமானத் தாக்குதல்களின்போது பயன்படுத்தினீர்களா என்ற கேள்விக்குப் பதில் கூற அவர் மறுத்து விட்டார்.

அரசின் ரசாயன ஆயுதக் கொள்வனவு தொடர்பாகவும் அதனால் தமிழ் மக்களுக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் பற்றியும் கடந்த 18ஆம் திகதி எதிர்க்கட்சிகளின் தமிழ் முஸ்லிம் எம்.பிக்கள் கூடி ஆராய்ந்தனர்.

இந்தச் சந்திப்பு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமையகத்தில் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் இடம்பெற்றது.

எம்.பிக்களான பி.பி.தேவராஜ், எம்.எஸ்.செல்லசாமி, ஏ.எச்.எம்.அஸ்வர், பி.சந்திரசேகரன், எம்.அப்துல்மஜீத், மாவை.சேனாதிராஜா, ஏ.அடைக்கலநாதன், ஜோசப்பரராஜசிங்கம், பி.செல்வராசா, கே.ஆர்.குகனேஸ்வரன், ரி.மகேஸ்வரன், வினோ நோகரதலிங்கம், எம்.ஏ.எம். மஹ்ரூப் ஆகியோர் அங்கு ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அரசின் நடவடிக்கை குறித்து பலரும் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

கூட்டத்தின் இறுதியில் தெய்திக் குறிப்பு ஒன்று வெளியிடப்பட்டது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

ஆர்.பி.ஓ—ஏ ஷ்மெல் ரொக்கெற் லோஞ்சர் சர்வதேச ரீதியில் தடைசெய்யப்பட்ட ஆயுதம். அமெரிக்க பாதுகாப்புப் புலனாய்வு ஏஜென்ஸியின் அறிக்கையின்படி இந்த ஆயுதம் அபாயகரமானதும் வெடித்துச் சிதறி நச்சுவாயுவை சூழலில் பரப்பவல்லதுமாகும். இவற்றால் ஏவப்படும் குண்டுகள் குறிப்பிட்ட இடத்தை எரிப்பது மட்டுமல்லாமல் சூழலையும் மாசுபடுத்தும். உயிரினங்களின் நுரையீரலைக் கடுமையாகப் பாதிக்கும்.

''இப்படிப்பட்ட ஆயுதத்தை வான்படையினர் ஏற்கனவே பயன்படுத்தியிருக்கிறார்கள். அதற்கு உரிய சாட்சிகள் (Eye witnesses) உள்ளனர்'' இப்படி அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பிலுள்ள அனைத்து வெளிநாட்டுத் தூதுவர்கள் அரசியல் கட்சிகள், மக்கள் அமைப்புக்கள், சமய ஸ்தாபனங்கள் ஆகியவற்றில் முக்கியஸ்தர்கள் ஆகியோருடன் தொடர்பு கொண்டு இந்த விஷயம் பற்றி பேசுவது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள், ஐ.நா மனித உரிமை அமைப்பு, ஆயுத ஒழிப்புக்கான ஐ.நா அமைப்பு, ரசாயன ஆயுதக் கண்காணிப்புக்கான ஐ.நா அமைப்பு ஆகியவற்றுக்கு அறிக்கை அனுப்புவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

எம்.பிக்களான ரவூப் ஹக்கீம் கல்முனையில் இடம்பெற்ற அரசியல் கூட்டத்துக்குச் சென்றுவிட்டதாலும் அ.விநாயகமூர்த்தி களுத்துறை சென்றிருந்தமையாலும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாமல் போயிற்று என்று அறிவிக்கப்பட்டது.

— எறியன்

# புலிகளின் வீரகாவியம் மடுவில் வீடியோ காட்சி

மடுமாதா தேவாலய உற்சவம் கடந்த ஆறாம் திகதி ஆரம்பமாகி 15ஆம் திகதி முடிவடைந்தது.

ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெள்ளம் அலைமோத உற்சவம் சிறப்பாக நடைபெற்றது.

நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் சென்றவர்கள் படையினரின் இறுதிச் சோதனைச் சாவடியான பிரமணாளங்குள சோதனைச் சாவடியில் பலத்த சோதனைகளின் பின்னர் அனுமதிக்கப்பட்டனர்.

ஆலய உற்சவத்தையொட்டி அதனை அண்டிய பகுதியில் விடுதலைப்புலிகள் கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

தமிழர் வரலாற்றைப் பிரதிபலிக்கும் புகைப்படங்கள், மண்ணுக்காக உயிர் நீத்த போராளிகள், புலிகளின் சில தாக்குதல் படங்கள் ஆகியவை பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

இவற்றைவிட தமது வெற்றிகரமான பல தாக்குதல்களின் வீடியோ காட்சிகளையும் அவர்கள் அகலத்திரையில் காண்பித்தனர்.

மயிர்க் கூச்செறியும் வீர தீர சம்பவங்கள் அவற்றில் இடம்பெற்றிருந்தன.

அந்தப் படக் காட்சியை அடுத்து அங்கு உரையாற்றிய புலிகளின் பிரசாரப் பிரிவு உறுப்பினர் ஒருவர் ''அண்மையில் கட்டுநாயக்க மீதான தாக்குதலில் 14 வான்கலங்கள் முற்றாக அழிக்கப்பட்டன; 23 வான்கலங்கள் பலத்த சேதமாக்கப்பட்டன'' என்றார்.

இது இவ்வாறிருக்க— கட்டுநாயக்க சம்பவம் தொடர்பாக புதுப்புதுத் தகவல்கள் கசிந்து கொண்டிருக்கின்றன.

கடந்த 6ஆம் திகதி பொலிஸ் தலைமையகத்தில் பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு தலைமையில் வாராந்திரக் கூட்டம் நடைபெற்றது.

சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர். பிற்பகல் மூன்று மணி முதல் மாலை 5 மணி வரை கட்டுநாயக்க சம்பவம் தொடர்பான விவாதம் நடைபெற்றது.

சம்பவம் தொடர்பான புலனாய்வுப் பிரிவின் முதற் கட்ட அறிக்கையை டி.ஐ.ஜி புனைய டி சில்வா அங்கு சமர்ப்பித்தார்.

அந்த அறிக்கையின் பிரகாரம், ஜூன் மாதம் 30ஆம் திகதி நீர்கொழும்புப் புலனாய்வுப் பிரிவு நீர்கொழும்பு பொலிஸ்மா அதிபரிடம் ஒரு தகவலை வழங்கி இருந்தது.

''கட்டுநாயக்க விமானத் தளத்தைத் தாக்கப் புலிகள் நீர்கொழும்பு வரை ஊடுருவி விட்டனர். சுத்திகரிப்பாளர்கள் வேஷத்தில் அப்பகுதியில் வழக்கமாக மின் வெட்டு அமுலாகும் நேரத்தினுள் விமானத் தளத்தினுள் ஊடுருவித் தாக்குதல் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர்'' என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

நீர்கொழும்பு பொலிஸ்மா அதிபரும் இது குறித்து சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் மட்டக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக விமானப்படை அதிகாரிகளுக்குத் தெரிவித்தபோதும் அவர்கள் தகவலை அசட்டை செய்து விட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கட்டுநாயக்க தாக்குதலின்போது தென்பகுதியில் முதல் முதலாக 'டொம்பா' (Tomba) எனப்படும் ஆயுதம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இராணுவ வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில் இந்த இயந்திரத் துப்பாக்கி (General Purpose Mechine Gun) 1600 மீற்றர் சுடு வீச்சுக் கொண்டது. ஒரு விநாடியில் 285 ரவைகளை வெளியேற்றக் கூடியது.

புலிகள் கொலன்னாவ எண்ணெய்த் தாங்கிகள், மத்திய வங்கி, கலதாரி ஹோட்டல் மீதான தாக்குதல்களில் ஆர்.பி.ஜி (Rocket Propelled Grenade) ஆயுதத்தை உபயோகித்தனர். கடந்த ஆண்டு இடம்பெற்ற ராஜகிரியக் குண்டுத் தாக்குதலில் கிளைமோர் கண்ணியைப் பயன்படுத்தியிருந்தனர் எனக் கூறப்பட்டது.

கட்டுநாயக்க தாக்குதல் தொடர்பாக பெறப்பட்ட பிறிதொரு அறிக்கையில் பல விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

முற்றாக அழிந்த மூன்று எயார் பஸ்களும் விமானப்படையினரின் பதில் தாக்குதலின்போதே தகர்க்கப்பட்டிருக்கின்றன.

படையினர் நடத்திய தொடர் தாக்குதலில் எயார் பஸ்கள் சல்லடையிடப்பட்டுத் தகர்க்கப்பட்டிருக்கின்றன. சேதமடைந்த எயார் பஸ் சிதைவுகளைப் பகுப்பாய்வு செய்து கொண்டதன் மூலம் எயார் பஸ் மீது தாக்கப்பட்ட ஆயுதத்துக்கும், தாக்குதல்காரர்கள் பயன்படுத்திய ஆயுதத்துக்கும் தொடர்பே இல்லை எனத் தெரியவந்துள்ளது.

விசாரணைகளின் 'வளர்ச்சி' இவ்வாறிருக்க, ஊடுருவல் தாக்குதலால் கடுமையாக அடிவாங்கியிருக்கும் படைத் தரப்பு அவ்வாறான ஊடுருவல் தாக்குதல் ஒன்றை தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுள் நடத்த முற்படலாம் எனப் புலிகள் நம்புகின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டு தமது பகுதிகளினுள் ரோந்துப் பணிகளையும், கண்காணிப்புகளையும் புலிகள் தீவிரமாக்கியுள்ளனர்.

அண்மையில் மடு தேவாலய உற்சவத்துக்காக படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து வந்தவர்கள் புலிகளால் கடுமையாக விசாரிக்கப்பட்டனர். அவர்களின் அடையாள அட்டைகள் நுணுக்கமாக சோதனை செய்யப்பட்டன. இன்னும் சிலரை புலிகள் புகைப்படமும் எடுத்தனர்.

மடுவிலிருந்து எட்டுக் கிலோமீற்றர் தொலைவில் பிரமணாளங்குளம் சோதனைச்சாவடி உள்ளது. இதன் ஊடாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியினுள் சென்றவர்களை புலிகள் மிக அவதானமாகக் கண்காணித்தனர்.

அண்மையில் வன்னியில் பாலக்கேணி என்ற இடத்தில் 28 சக்தி வாய்ந்த கண்ணி வெடிகள் உட்பட 38 கிளைமோர்களை மாங்குளம் மனித நேய கண்ணிவெடி மீட்புக் குழு மீட்டிருந்தது.

இவை ஒரு புறம் இருக்க தென்னகத்தில் அரசியல் சூறாவளியும் அச்சங்களும் ஒருங்கே அரசை உலுப்புகின்றன.

— ஆதித்யன்

# அடுத்தடுத்து அழிவுகள் அட்டமத்தில் சனியனா?

## மிக்—27 ஜெட்டின் இழப்பு மற்றொரு பேரிடி

கடந்த சனிக்கிழமை காலை சுமார் 10.55 மணியளவில் தாக்குதல் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான ரஷ்யத் தயாரிப்பு மிக்—27 ரக மீயொலித் தரைக் குண்டு வீச்சு ஜெட் விமானங்களில் ஒன்று கட்டுநாயக்க விமானப்படைத்தளத்துக்கு அணித்தாகவுள்ள சீதுவ பகுதியில் வீழ்ந்து நொருங்கியது.

ஒரு விமானியை (Single Seater) மட்டுமே காவிச் செல்லக் கூடிய இந்த விமானத்தின் விமானி அந்த இடத்திலேயே கொல்லப்பட்டுள்ளார்.

ரஷ்ய சோஷலிஸக் குடியரசில் இருந்து பிரிந்து சென்ற உக்ரேனிய நாட்டின் பிரஜையான இந்த விமானியின் பெயர் வலாரி.

விமானம் பொதுமக்கள் நெருக்கமாக வாழும் பகுதியில் வீடொன்றின் மேலே வீழ்ந்து வெடித்துச் சிதறியுள்ளது.

இதனால் அந்த வீடு முற்றாக சின்னாபின்னமாகியதுடன் அருகிலுள்ள பல வீடுகளும் பாதிக்கப்பட்டன. இவ்விபத்தின்போது ஏழு பொதுமக்கள் எரிகாயங்களுக்கு உள்ளாகினர். கட்டுநாயக்க நீர்கொழும்பு பிரதான பாதையில் 18—20 மைல்களுக்கு இடைப்பட்ட கடலோரியை அண்டிய பகுதியிலேயே இந்த விமானம் விபத்துக்குள்ளாகியது.

இந்த விபத்துக்குப் பெரும்பாலும் தொழில்நுட்பக் கோளாறே காரணம் என ஊகிக்கும் படைத்தரப்பினர், விமானி விமானத்தை நீர்கொழும்பு கடலோரிக்குள் இறக்க முயன்றிருக்கக் கூடும் என்று கூறுகின்றனர்.

ஆனாலும் இதற்கான பூர்வாங்க விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.


இதைவிட பிரத்தியேகமாக உள்ளார்ந்த விசாரணைகளை மேற்கொள்ள விமானப் படையின் இரண்டாம் கட்டளை அதிகாரி (Chief of Staff) எயர் வைஸ் மார்ஷல் பெரேராவின் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. நான்கு பேரைக் கொண்ட இந்தக் குழுவை விமானப் படைத்தளபதி எயர் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி நியமித்துள்ளார்.

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பதுபோல் ஜூலை 24 ஆம் திகதி அதிரடித் தாக்குதலின் அதிர்ச்சியில் இருந்தும் அழிவுகளில் இருந்தும் மீளவழி தெரியாமல் திணறிக் கொண்டிருக்கும் அரசுக்கும், விமானப் படைக்கும் மிக்—27 ஜெட்டின் இழப்பு மற்றுமொரு பேரிடி.

கடந்த ஒரு மாத காலத்துக்குள் விமானப் படை முற்றாக இழந்த ஒன்பதாவது யுத்த வான்கலம் இதுவாகும். கடந்த ஜூலை 24 ஆம் திகதி கட்டுநாயக்க தாக்குதலின் போது கூடாரத்திற்கு வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இஸ்ரேலியத் தயாரிப்பு கிபிர் ஜெட் விமானங்கள் இரண்டும் மிக்—27 ரக ஜெட் ஒன்றும் இரண்டு எம்.ஐ—17 ரக துருப்புக்காவி ஹெலிக்கொப்டர்களும் மூன்று சீனத் தயாரிப்பு கே—8 ரக பயிற்சி ஜெட் விமானங்களும் உள்ளிட்ட சுமார் எட்டு விமானங்கள் முற்றாக அழிக்கப்பட்டன.

இதனைவிட கூடாரத்தினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் ஐந்து கிபிர் குண்டு வீச்சு ஜெட் விமானங்களும், ஒரு மிக்—27 ரக ஜெட்டும், நான்கு பெல்—414 ஹெலிகளும் துப்பாக்கிக் குண்டுகள்பட்டுச் சேதமாகின.

இவையெல்லாம் தொழில் நுட்ப ரீதியான பரிசோதனையின் (Technical




Proofing) பின்னர் உடனடித் திருத்த வேலைகளுக்கு விடப்பட்டன.

இவற்றில் இரண்டு கிபீர் விமானங்கள் இஸ்ரேலிய விமானப் பொறியியல் நிபுணர்களின் உதவியுடன் திருத்தப்பட்டு தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று உயர் விமானப்படை அதிகாரி ஒருவர் கூறினார். ஏனையவற்றின் மீது திருத்த வேலைகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

ஆனையிறவு படைத்தளத்தை புலிகள் கைப்பற்றிய பின்னர் எழுந்த நிலைமையைச் சமாளிக்கும் பொருட்டு நூறு சத வீதம் துல்லியமாக இலக்குகளைத் தாக்கவல்ல மிக்—27 ரக விமானங்கள் நான்கை இலங்கை அரசு சுமார் 1 கோடி. அமெரிக்க டொலர்கள் செலவு செய்து விமானப் படைக்குக் கொள்வனவு செய்தது.

அப்போது இந்த விமானங்களைச் செலுத்துவதற்கு இலங்கை விமானப்படையில் எவரும் இல்லாதிருந்த படியால் விமானிகளையும், தொழில் நுட்பவியலாளர்கள் மற்றும் பொறியியலாளர்கள் குழுவையும் சேர்த்தே வாடகைக்கு அமர்த்தியது இலங்கை அரசு.




இதனை, புலிகளுக்கெதிராக அந்நிய நாட்டுப் பிரஜைகளை அரசு நேரடியாக பயன்படுத்தியமைக்கான சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம்.

யுத்தச் செய்திகளை வெளியிடுவதற்கான தணிக்கைக் கடுமையாக அமுல்படுத்தப்பட்ட அன்றைய காலப்பகுதியில்கூட சில ஆங்கிலப் பத்திரிகைகள் இதனைச் சுட்டிக்காட்டிய போது, வெளிநாட்டுப் பிரஜைகள் எமது விமானிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காகவே வரவழைக்கப்பட்டனர் என்று அப்போது சொல்லப்பட்டது.

ஆனால் அண்மைய காலங்களில் மிக்—27 விமானங்கள் உள்ளூர் விமானிகளாலேயே செலுத்தப்பட்டு புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது.

ஆனாலும் கடந்த சனிக்கிழமை நடந்த விபத்தின் போது உக்ரேனிய நாட்டு விமானி கொல்லப்பட்டமையால், புலிகளுக்கு எதிராக அரசு இன்னமும் வெளிநாட்டுச் சக்திகளை நேரடியாகவே யுத்தத்தில் ஈடுபடுத்தி வருகிறது என்ற சந்தேகத்தை வலுவாக்கியிருக்கிறது.

அவ்வாறாயின் புலிகள் இலங்கைப் படைகளுக்கு எதிராக மட்டுமல்ல வெளிநாட்டுப் படைகளுக்கெதிராகவும் போராட வேண்டியிருக்கிறதா?

எவ்வாறாயினும், இந்த விமானங்களது வருகையால் கடந்த வருடம் மே மாதம் புலிகளால் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் முயற்சி முறியடிக்கப்பட்டது ஏதோ உண்மைதான்.

ஆனால் கொள்வனவு செய்யப்பட்ட நான்கு மிக்—27 விமானங்களில் இரண்டை விமானப்படை தற்போது முற்றாக இழந்து நிற்கிறது.

மூன்றாவது திருத்த வேலைக்குட்பட்டிருக்கிறது. இதன்படி ஒன்று மட்டுமே நல்ல நிலையில் மீதமாக இருக்கிறது.

ஆனாலும் அதனை உடனடியாக சேவையில் ஈடுபடுத்த இயலாது. காரணம் சாதாரண குண்டு வீச்சு விமானங்களைப் போலல்லாது இவ்வாறான நவீன தொழில் நுட்பங்களையுடைய மீயொலி ஜெட் விமானங்கள் தாக்குதலில் ஈடுபட குறைந்த பட்சம் இரண்டு விமானங்கள் தேவை. ஒன்று நெறிப்படுத்த, மற்றையது தாக்குதலில் ஈடுபடுவதற்கு.

ஆகவே திருத்தப்படும் விமானம் சேவையில் ஈடுபடுத்தப்படும். மிக்—27 ரக விமானங்கள் தாக்குதலில் ஈடுபட முடியாது என்றே கூறவேண்டும்.

மேற்படி விமானம் வீழ்ந்து நொருங்குவதற்கு பல்வேறு காரணங்களைச் சாத்தியப்பாடுகளாகக் கொள்ளலாம்.

1. விமானத்தில் ஏற்பட்டிருக்கக் கூடிய இயந்திரக் கோளாறு அல்லது தொழில் நுட்பக் கோளாறு.
2. விமானியின் தனிப்பட்ட தவறு அல்லது கவனயீனம்.
3. அளவுக்கதிகமாக மீளமீள பாவனையில் ஈடுபடுத்தல்.

இதில் மூன்றாவது காரணி முதல் இரு வழுக்கள் ஏற்படுவதற்கான காரணியாக இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகக் காணப்படுவதை அவதானிக்கலாம்.

கொள்வனவு செய்யப்பட்ட நான்கு மிக்—27 விமானங்களில் அழிக்கப் பட்டதும், சேதமடைந்ததும் போக மீதமுள்ள இரண்டுமே கிபீர் விமானங்களுடன் சேர்த்து பயன்படுத்தப் பட்டுள்ளன:

இதனைவிடப் பயிற்சிக்காகவும் இவற்றினைப் பயன்படுத்தும் போது இவை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத் தப்பட்டவையாக இருக்கக்கூடும். இதனால் இலகுவில் தொழில் நுட்ப கோளாறு ஏற்பட வாய்ப்புக்கள் அதிகமாகவே காணப்பட்டிருக்கும்.

பிந்திக் கிடைக்கும் படைத்தரப்பு தகவல்களின்படி, சம்பவம் நடந்த தினமான ஆகஸ்ட் 18ஆம் திகதியை உக்ரேனியர்கள் தமது "தேசிய விமானப் பறப்புகள் (National Aviation Day) தினமாகக் கொண்டாடுவது வழக்கம்.

இலங்கையில் உள்நாட்டு விமானப் படைக்கு பயிற்றுவிப்பாளர்களாக இருக்கும் உக்ரேனியர்கள் அன்றைய தினம் விமான சாகஸத்தில் ஈடுபட இந்த இரு விமானங்களையும் உயர் அதிகாரியின் அனுமதியுடன் பெற்றுக் கொண்டதாகக் கூறப்படுகிறது. ஆனாலும் அந்த அதிகாரி, அவ்வாறு செய்வதற்கு முன்னர் விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ஜயலத் வீரக்கொடியின் அனுமதியைப் பெறவில்லை என்று தெரிய வருகிறது.

சாதாரணமாக ஜெட் தாக்குதல் படையணியின் நடவடிக்கைகளுக்கு (Jet squadron) விமானப்படைத்தளபதியே பிரத்தியேக பொறுப்பாளராக இருந்து வருகிறார். இந்த விமானங்கள் தாக்குதலில் ஈடுபடும் போது கூட விமானிகளுடன் நேரடியாகத் தொடர்புகளை இவர் கொண்டிருப்பார். ஒவ்வொரு குண்டும் வீசப்படு முன்னர் விமானிகள் விமானப் படைத்தளபதியின் அனுமதியுடனேயே அதனை வீசுகின்றனர்.

இவ்வாறு இலங்கையின் விமானப் படைத்தளபதியின் அனுமதியின்றி இவ்விமானங்களை சாகஸ விளையாட்டில் ஈடுபட அனுமதித்த அந்த மூத்த அதிகாரிக்கு "கல்தா" காத்திருக்கிறதா?

மழை விட்டும் தூவானம் நிற்காதது போல் விமானப்படைத் தளம் மீதும் அருகில் இருந்த சர்வதேச விமானப் படைத் தளம் மீதும் தாக்குதல் நடந்து சுமார் மூன்று வாரங்கள் கழிந்திருந்தும் அவற்றின் தாக்கம் நாட்டின் சகல துறைகளையும் கடுமையாக பீடித்துள்ளது.

சுற்றுலா, விமானத்துறை, கப்பற் போக்குவரத்து, சர்வதேச வியாபாரம் மற்றும் ஹோட்டல் கைத்தொழிற்றுறை போன்ற துறைகள் மிகவும் மோசமான முறையில் பாதிக்கப்பட்டுள்ளன.

விமான டிக்கட்டுக்களுக்கான கட்டணம் அபரிமிதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. சர்வதேச வியாபாரத்தில் ஈடு படும் கப்பல்கள் யுத்த — பீதியைக் காரணம் காட்டி கொழும்புத் துறைமுகத்தை வந்தடைய மறுக்கின்றன.

கொள்கலன்கள் ஒவ்வொன்றுக்குமான காப்புறுதி மற்றும் கேள்விக் கட்டணங்கள் பெரும் தொகைக்களால் அதிகரிக்கப்பட்டுள்ளன. உள்வரும் சுற்றுலாப் பயணிகளை அந்நாட்டு அரசாங்கங்கள் இலங்கைக்குச் செல்ல வேண்டாமென அச்சுறுத்து கின்றன. மொத்தத்தில் இலங்கைக்கான பாரிய வருவாய் துறைகளின் வாயில் மண்ணை அள்ளிப் போட்டிருக்கிறது கட்டுநாயக்க மீதான தாக்குதல்.

ஒட்டு மொத்தத்தில் விமானப் படைக்கு மட்டுமல்ல ஆட்சியில் உள்ள அதிகாரத் தரப்பினருக்கும் அட்டமத்தில் சனி வக்கிரமடைந்துள்ளது.



GERMAN TECHNOLOGY WITH BUILT-IN-BOOSTER
Euromindo Active Antenna.
for Clear Reception
Of all Channels in all Locations
Importers and Suppliers
UKAAYE
190 - 1st Floor, Bodhiraja Mawatha, (Gaswork Street) Colombo - 11.
Tel: 075-370019, Fax: 075-370018

ஆன்டெனா பொருத்துதல்


Get it installed by professionals
TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656 (TEL/FAX)
E-mail : telecave@eureka.lk

பாலியல் பலவீனத்திற்கு
ரிஷி அஜமாமிச லேகியம்
தேவையில்லாத வைகரா நம்பிக்கையுடன் பாலியல் பலவீனத்திற்கும் உடல் சக்திக்கும், ஆண்மைக்கும், வீரிய விருத்திக்கும் ரிஷி அஜமாமிச லேகியம்.
ரூ. 195/=, 360/=
தங்கபஸ்பம் கலந்தது 1360/=
மூல வியாதியா
ரிஷி லேகியம் பாவியுங்கள்
உள்மூலம், வெளிமூலம் இவற்றைச் சுகப்படுத்தும் ரூ. 195/=
ஞானசுந்தரம் வைத்தியசாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
தொலைபேசி: 421398


Eurostar
Sole Distributors in Sri Lanka for
UKAAYE
190 - 1st Floor, Bodhiraja Mawatha, (Gaswork Street) Colombo - 11.
Tel: 075-370019, Fax: 075-370018

அவசர திருத்தங்கள்


Guaranteed repair & service by trained technicians
TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656 (TEL/FAX)
E-mail : telecave@eureka.lk

# சுடர் ஒளி

26 ஒகஸ்ட், 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834
E-mail: sudar@uthayan.com


## இதுதான் ஜனநாயகமா?

ரயில், பஸ் விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. பயணிகள் உயிர் இழக்கிறார்கள்; ஊனம் அடைகிறார்கள்.

கடந்த 18ஆம் திகதி சனிக்கிழமை பதுளையிலிருந்து கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த ''உடரட்ட மெனிக்கே'' கடுகதி ரயில் அளவ்வ புக்கமுவப் பகுதியில் தடம் புரண்டது.

15 பயணிகள் பலியானார்கள். 81 பேர் காயமடைந்தார்கள்.

இதற்கு முன்னர் 16 ஆம் திகதி வியாழக்கிழமை சீதுவை ரயில் கடவை ஒன்றில் பஸ் — ரயில் மோதல் நடந்தது. பஸ் பயணிகள் 10 பேர் உயிர் இழந்தார்கள். 23 பேர் காயமடைந்தார்கள்.

இதே ரயில் கடவையில் இரண்டு நாட்களுக்கு முன்னர் ஆட்டோ ஒன்றை ரயில் மோதியது. அதில் இரு பயணிகள் கொல்லப்பட்டார்கள்.

உடைந்திருக்கும் ரயில்வே கேட் சீராக்கப் படாததால் ஏற்பட்ட அனர்த்தங்கள் இவை.

இவற்றிற்கெல்லாம் யார் பொறுப்பு? ரயில் பஸ் போக்குவரத்தைக் கவனிப்பதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் போக்குவரத்து அமைச்சர் என்ன செய்து கொண்டிருக்கிறார்?

ரயிலையோ, பஸ்ஸையோ அமைச்சர் ஓட்டுவதில்லை. அதனால் ரயில், பஸ் விபத்துக்களுக்கு அவர் நேரடிப் பொறுப்பாளியாகமாட்டார் என்பது உண்மை. ஆயினும் அமைச்சருக்குத் தார்மிகப் பொறுப்பு இருக்கிறது. அதிலிருந்து அவர் நழுவி விடமுடியாது.

ஜனநாயக நாடுகளில் எல்லாம் இப்படியான சோக நிகழ்வுகளுக்கு எல்லாம் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் தார்மிகப் பொறுப்பு ஏற்று பதவியை உடனே ராஜினாமாச் செய்து விடுகிறார்கள்.

தெற்கு ஆசியாவில் ஜனநாயகம் நிலை பெற்றுள்ள நாடுகளில் இந்தியாவும் இலங்கையும் முக்கியமானவையாகக் குறிப்பிடப் படுகின்றன.

இந்தியாவில் இதுவரை எத்தனையோ அமைச்சர்கள் தங்கள் நிர்வாகத்தின் கீழ் நடைபெற்ற முறைகேடுகள் மற்றும் அனர்த்தங்களுக்குத் தார்மிகப் பொறுப்பேற்று அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்திருக்கிறார்கள்.

இலங்கையில் இதுவரை இப்படி எந்த அமைச்சரும் எந்தச் சந்தர்பத்திலும் பதவியை ராஜினாமாச் செய்தது கிடையாது.

இங்கே எல்லோரும் எப்படியும் பதவியில் ஒட்டிக்கொள்ள விரும்புகிறார்களே தவிரப் பதவியை விட்டெறிய அவர்களுக்கு மனம் வருவதில்லை.

போக்குவரத்து அமைச்சர் தினேஷ் குணவர்தன நீண்டகாலம் எதிரணியில் இருந்து கொள்கை உரம் பெற்றவர். அவராவது ஜனநாயக மரபுப்படி நடந்து முன் மாதிரி காட்டுவார் என்று எதிர்பார்த்தவர்கள் ஏமாந்தார்கள்.

எல்லோரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான் என்பது தெளிவாகிவிட்டது.

அதிகம் ஏன்? ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க என்ன செய்கிறார்?

தன்னுடைய பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை இழந்து விட்டதும் எதிரணியினர் அரசாங்கத்தை அமைக்க அவர் வழிவிட்டுக் கொடுத்திருக்க வேண்டும்.

பெரிய மனதுடன் அவர் அப்படிச் செய்தாரா?

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையாக உள்ள எதிரணி உறுப்பினர்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இல்லை என்று பிரேரணை கொண்டு வந்தார்கள்.

அந்தப் பிரேரணை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கே வரமுடியாதபடி நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஒத்தி வைத்து விட்டார் ஜனாதிபதி.

ஜனாதிபதி மீது அரசியல் குற்றப் பிரேரணை கொண்டு வந்து அவரைப் பதவி நீக்கப் போவதாகவும் எதிரணியினர் அறிவித்தார்கள்.

ஜனாதிபதியோ சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி மக்களின் கருத்தை அறிந்து புதிய அரசமைப்பைக் கொண்டு வந்து ஆட்சியில் நீடிப்பதற்கான வழி வகைகளை ஆராய்ந்து கொண்டிருக்கிறார்.

இவை எல்லாம் ஜனநாயகத்துக்கு முரண். சர்வாதிகாரப் போக்கு, அதிகார வெறியின் வெளிப்பாடு என்றெல்லாம் எதிரணியினர் குற்றஞ்சாட்டுகிறார்கள். அது அவருடைய காதில் விழவில்லை. தன்னுடைய பதவியையும் ஆட்சியையும் நிலைக்கச் செய்வதிலேயே உறுதியாக இருக்கிறார்.

ஜனாதிபதி இப்படி முன் மாதிரி காட்டினால் அவர் நியமித்த அமைச்சர்கள் எப்படி இருப்பார்கள்?

அவர்களிடமிருந்து ராஜினாமாவை எதிர்பார்க்க முடியுமா?

எல்லாவற்றிலும் பெயரளவில்தான் இங்கே ஜனநாயகம். நடைமுறை வேறு.

நாட்டையும் நாட்டு மக்களையும் பீடித்த கேடு இது.

# யுத்தம் பற்றி ஜனாதிபதியின் புத்தம் புது ஞான மொழிகள்!

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை இழந்து இன்றைக்கோ நாளைக்கோ என்ற நிலையில் அரசாங்கம் சேடம் இழுத்துக் கொண்டு இருக்கிறது.

இப்படியான அவல வேளைகளில் சிலருக்கு நன்றாகவே ஞானம் பிறக்கிறது.

வடக்கு கிழக்கு யுத்தம் மற்றும் நாட்டு நிலைமை சம்பந்தமாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க காத்திரமான சில கருத்துக்களை இப்போதெல்லாம் வெளியிட்டு வருகிறார்.

சமீபத்தில் சுதந்திரக்கட்சி சட்டத்தரணிகள் சங்கப் பிரதிநிதிகள், அரசாங்கக் கூட்டுத் தாபனங்கள், சபைகள் ஆகியவற்றின் தலைவர்கள் ஆகியோரை ஜனாதிபதி தமது மாளிகையில் சந்தித்து அவர்களுடன் உரையாடினார்.

அப்போது ஜனாதிபதி உதிர்த்த மணியான கருத்துக்களின் சாரம் வருமாறு:—

* உலகில் எந்த ஒரு நாடும் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணாமல் இராணுவ நடவடிக்கையால் மட்டும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததாக வரலாறு கிடையாது.

* இந்த நாட்டில் மட்டுந்தான் யுத்தத்தை இராணுவ நடவடிக்கை மூலம் முடிவுக்குக் கொண்டுவரும்படி சிலர் வலியுறுத்துகிறார்கள். இதை என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

* வட அயர்லாந்துப் பிரச்சினை 73 வருடங்களாக இருந்து வருகிறது. பாலஸ்தீனப் பிரச்சினை 53 வருடங்களாக இருந்து வருகிறது. பலம் மிக்க உலக நாடுகள் இந்தப் பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியாகத் தீர்வுகாண முயன்று வருகின்றன.

* இலங்கை ஒரு வறிய நாடு. நீண்டகாலம் போர் புரிந்து கொண்டு இருப்பதற்கு வேண்டிய பொருளாதார சக்தி இலங்கைக்குக் கிடையாது.

* யுத்தம் காரணமாக நாட்டின் பொருளாதாரத்துக்கும் அரசியல் அடித்தளத்துக்குமே பயங்கர அழிவு ஏற்பட்டுவிட்டது.

இப்படிச் சட்டத்தரணிகளுக்கும் கூட்டுத் தாபனங்கள், சபைகள் ஆகியவற்றின் தலைவர்களுக்கும் ஜனாதிபதி தெரிவித்தார்.

டாக்டர்கள், பாடசாலை ஆசிரியர்கள், விவசாயிகள், கலைஞர்கள், கடல் தொழிலாளர்கள் ஆகியோரையும் ஜனாதிபதி சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பு அலரிமாளிகையில் நடந்தது.

அவர்களிடம் ஜனாதிபதி பின்வருமாறு கூறினார்:—

* கட்டுநாயக்கவில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தைப் புலிகள் தாக்கியதில் மட்டும் 9 ஆயிரத்து 500 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டிருக்கிறது. கடந்த ஏழு வருடங்களாக அரசாங்கம் கல்விக்கு செலவழித்த தொகைக்கு இது சமமானது.

* யுத்தம் தொடருமானால் மக்கள் கேட்கும் உதவிகளை அரசினால் செய்ய முடியாது போகும்.

* வாழ்க்கைச் செலவு உயர்வையும் தடுக்க முடியாது.

* சண்டையை நிறுத்துவதற்குப் பயங்கரவாதிகளைக் கொன்று தீர்க்க வேண்டும் என்று சிலர் வாதாடுகிறார்கள். செய்து முடிக்கக்கூடிய ஒன்று என்றால் இது மிகவும் நல்ல ஆலோசனைதான். ஆனால் உலகில் காசே எல்லாவற்றுக்கும் மேலாகக் கொள்ளப்படுவதால் இவர்கள் சொல்கிறமாதிரிச் சண்டையை முடிவுக்குக் கொண்டுவர இயலாது.

* யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று வாதாடுபவர்களுக்கு நான் ஒன்று கூற விரும்புகிறேன். தயவு செய்து இந்த நாட்டின் எதிர்காலத்தோடு விளையாடாதீர்கள்.

* யுத்தம் வந்ததற்கான காரணங்களை அரசாங்கம் கண்டறிந்துவிட்டது.

* பிரச்சினைகளைத் தீர்த்து யுத்தத்திற்கான காரணங்களை முற்றாக நீக்குவதற்கு அரசாங்கம் பல ஆலோசனைகளை வைத்திருக்கிறது.

இப்படி ஜனாதிபதி தெரிவித்தார்.

எவ்வளவு அருமையான கருத்துக்களை ஜனாதிபதி பட்டவர்த்தனமாக தெரிவித்திருக்கிறார்!

தாம் சொன்னதை எல்லாம் செயற்படுத்த ஜனாதிபதி இதுவரை மனப்பூர்வமாக முயற்சி செய்தாரா? அதுதான் கேள்வி.

1994ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஜனாதிபதி கடந்த ஆண்டில் மீண்டும் தெரிவாகி ஏழு ஆண்டுகளைப் பூர்த்தி செய்து விட்டார்.

எப்பொழுதும் சமாதானம், பேச்சுவார்த்தை என்றெல்லாம் கூறிவருகிறாரே தவிர அவற்றுக்காக உருப்படியான காரியம் ஏதாவது செய்தது உண்டா?

பேச்சுவார்த்தைக்கு எப்பொழுதும் கதவுகள் திறந்திருக்கின்றன. புலிகள்தான் பேசவருகிறார்கள் இல்லை என்று புலிகள் மீது ஜனாதிபதி குற்றஞ்சாட்டி வருகிறார். அதே குற்றச்சாட்டை ஜனாதிபதி மீது புலிகள் சுமத்துகிறார்கள்.

நோர்வேயின் விசேஷ தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் பேச்சுவார்த்தை மேசைக்கு இரு தரப்பையும் கொண்டுவர வருடக்கணக்காக எவ்வளவோ முயன்றார்.

### காண்டீபம்

கடைசியில் அரசாங்கம் அவரையும் ஓரங்கட்டி விட்டது. ஜனாதிபதி இப்போது கூறுவது போல முன்னரும் யுத்தத்தை விடுத்துபேச்சு வார்த்தை மூலம் பிரச்சினைக்குச் சமாதானத்தீர்வு காண விரும்பியிருந்தால் அரசாங்கம் எவ்வளவோ செய்திருக்கலாம்.

புலிகள் 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆந் திகதி முதல் இவ்வாண்டு ஏப்ரல் 24ஆந் திகதி வரை நான்கு மாதங்கள் ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தம் செய்தார்கள். வடக்கு கிழக்கில் மட்டுமன்றி மற்ற இடங்களிலும் கூட எந்தவித மான தாக்குதல்களிலும் அவர்கள் ஈடுபடவில்லை. அப்படிச் செய்ததன் மூலம் அவர்கள் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்திப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில்தான் எவ்வளவு ஆர்வம் கொண்டிருந்தார்கள் என்பதை வெளிப்படையாகக் காட்டினார்கள்.

அரசாங்கம் யுத்த நிறுத்தம் செய்யவில்லை. மாறாக புலிகளின் யுத்த நிறுத்த காலத்தில் அவர்களைத் தேடித் தேடித் தாக்கியது.

பேரினவாத சக்திகள் மற்றும் மகாசங்கத்தினர் ஆகியோரின் பிடிக்குள் சிக்கியிருந்த அரசு புலிகளை அழித்து விட்டால் பிரச்சினை தானாகவே தீர்ந்த மாதிரித்தான் என்று நினைத்தே செயற்பட்டு வந்தது.

புலிகள் இல்லாவிட்டால் தமிழ் மக்களுக்குக் கொடுக்கவேண்டிய உரிமைகளையோ அவர்கள் கேட்கும் நியாயமான உரிமைகளையோ கொடுக்கத் தேவையில்லை. கொடுப்பதை இருகரம் நீட்டி வாங்கிக்கொண்டு தமிழ்மக்கள் இருந்து விடுவார்கள் என்றே அரசு எண்ணியது. ஆனால் போரைத் தொடர்ந்து நடத்துவதும் புலிகளை அழிப்பதும் முடியாத காரியங்கள் என்பதை அனுபவ ரீதியாகக் கண்டதும்தான் ஜனாதிபதிக்கு ஞானம் பிறந்திருக்கிறது என்று புலிகள் தரப்பில் கூறப்படுகிறது.

புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ்ச்செல்வன் அன்றுபோல் இன்றும் தாம் பேச்சுவார்த்தைக்குத் தயாராக கதவுகளைத் திறந்து வைத்துக் கொண்டே இருப்பதாக லண்டன் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் அரசு இப்போது வடக்கு கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதை விடத் தனது ஆயுள் கணக்கைப் பார்க்க வேண்டிய நிலையில் அல்லவா இருக்கிறது!

ஜே.வி.பி என்கிற மக்கள் விடுதலை முன்னணியின் தயவில் தகுதிகாண் அரசாக இன்னும் ஒரு வருடத்துக்கேனும் தொடர்ந்து பதவியில் இருக்கலாம் என்று முயன்று பார்த்தால் அந்த விஷயமும் சரிவராமல் போய்விட்டது.

ஐ.தே.க வோடு கூட்டுச் சேர்ந்து நல்லிணக்க அரசு அமைக்கலாம் என்றால் நாடாளுமன்றம் ஐ.தே.க விடமும் மற்றும் எதிரணிக் கட்சிகளிடமும் கைமாறிவிடும்.

பிரதமர் பதவிகூட ஐ.தே.க வுக்குப் போய்விடும். இப்போது போல அமைச்சர் பதவி எதையும் ஜனாதிபதி வகிக்கமுடியாத நிலை ஏற்படும். அதனால் நல்லிணக்க அரசாங்கம் அமைக்கும் முயற்சியும் கைகூட வில்லை. அடுத்து என்ன செய்வது என்ற ஆலோசனையில் ஜனாதிபதி மூழ்கிப் போய் இருக்கிறார்.

அதற்கிடையில் தனது அமைச்சரவையில் உள்ளவர்கள் சிலரைப் பகைத்தும் கொண்டார்.

தம்மோடு மிகவும் நெருக்கமாக இருந்த அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க அமைச்சர் மகிந்த விஜயசேகர ஆகியோரோடு ஜனாதிபதி கீரியும் பாம்புமாகிவிட்டார். இந்த நிலையில் தான் ராஜினாமா கடித நாடகம் அரங்கேற்றப்பட்டிருக்கிறது. 28 பிரதி அமைச்சர்கள் இதுவரை தாமாகவே முன்வந்து தேதி குறிப்பிடாமல் ஜனாதிபதியிடம் ராஜினாமாக் கடிதங்களைச் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

அமைச்சர் ரெஜிரணதுங்க ராஜினாமாக் கடிதம் கொடுக்க முன்வந்து விட்டார். மற்றவர்கள் பின்னடிக்கிறார்கள். சிலர் கொடுப்பதில்லை என்று முடிவு கட்டி விட்டார்கள். வேண்டாதவர்களை விலக்கிவிடுவதற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கும் சூழ்ச்சி வலையில்தாம் விழத் தயாராக இல்லை என்று அந்த அமைச்சர்கள் கூறுகின்றார்கள்.

ஆக, தனக்குப் பின்னால் தனது அரசாங்கக்கட்சியில் உள்ள அனைவரும் இருக்கிறார்கள் என்று காட்டவும் முடியாத நிலை ஜனாதிபதிக்கு.

# நேரடி மோதலுக்கு எதிரணியினர் தயார்!

## சட்ட ஒழுங்கு சீர்குலைவு, குழப்பநிலை பற்றி அச்சம்

பொதுஜனஐக்கிய முன்னணி தானாக ஆட்சிப் பொறுப்பை விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை.

அதேவேளை எதிரணியினர் நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்றி அரசாங்கத்தைக் கழுத்தில் பிடித்து வெளியே தள்ளிவிடச் சந்தர்ப்பம் அளிக்கவும் விரும்பவில்லை.

அப்படியானால் என்ன செய்யலாம்?

எதிர்வரும் செப்டம்பர் 7ஆம் திகதி ஜனாதிபதி நாடாளுமன்றக்கூட்டத் தொடரை (முன்னர் பிரகடனப்படுத்தியபடி) ஆரம்பித்து வைப்பார்.

ஆரம்பித்தகையோடு மீண்டும் கூட்டத்தொடரை ஒத்திவைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர் விரும்பவும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்திவைக்கலாம் என்று எதிரணியினருக்குத் தகவல் கசிந்திருக்கிறது.

ஆனால் எதிரணியினர் 7 ஆம் திகதி நாடாளுமன்றக்கூட்டத் தொடர் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் உடனடியாகவே ஒத்தி வைக்கப்பட்டாலும் நாடாளுமன்றத்திலேயே இருந்து தொடர்ந்து கூட்டங்களை நடத்தத் திட்டமிட்டு இருக்கிறார்கள்.

அவர்கள் அங்கே இருந்து சபாநாயகர் ஒருவரைத் தெரிவு செய்து அரசின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்றுவார்கள்.

பிரதம நீதியரசர் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிக்கத் தெரிவுக்குழுவை அமைப்பார்கள். தெரிவுக்குழு விசாரணைக்குப் பிரதம நீதியரசரை அழைக்கும்.

இப்படியான காரியங்கள் நடந்தால் நாட்டிலே சட்டமும் ஒழுங்கும் சீர்குலையும். குழப்பம்தான் ஏற்படும். இப்படியான ஒரு நிலைமை வேண்டும் என்றால் ஜனாதிபதி நாடாளுமன்றக் கூட்டத் தொடரை 7ஆம் திகதி மீண்டும் ஒத்திவைக்கட்டும் என்கிறார்கள் எதிரணியினர்.

அரசாங்கம் தனது தோல்வியை ஒப்புக் கொள்ளாவிட்டால் இம்மாதம் 13 ஆந் திகதி அரசாங்கத்துக்கு எதிராகப் பொதுஜன ஆர்ப்பாட்டம் ஒன்றைப்பெரிய அளவில் நடத்துவது என்றும் முடிவு செய்திருக்கிறார்கள். கடந்த 13ஆம் திகதி எதிரணிக் கட்சிப் பிரமுகர்கள் கூடி கலந்தாலோசனை நடத்தினார்கள். ஐ.தே.க வின் ரணில் விக்கிரமசிங்க, கருஜயசூரிய, டபிள்யு. ஜே.எம். லொக்கு பண்டார, டிரோன் பெர்னாண்டோ; ஜோன் அமரதுங்க, மகிந்த சமரசிங்க, ஜே.வி.பி யைச் சேர்ந்த விமல் வீரவன்ச, நந்தன குணதிலக்க, முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ரவூப் ஹக்கீம் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஆனந்தசங்கரி, டெலோவைச் சேர்ந்த அடைக்கலநாதன், தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த அப்பாத்துரை விநாயகமூர்த்தி, சிஹல உறுமயவைச் சேர்ந்த சம்பிக ரணவக்க ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இவர்கள் எல்லோரும் எம்.பிக்கள்.

கடந்த 17 ஆம் திகதி எதிரணி எம்.பிக்கள் அனைவரும் நாடாளுமன்றம் சென்று அங்கே குழு அறை ஒன்றில் கூடிப் பல தீர்மானங்களை நிறைவேற்றினார்கள் அல்லவா?

அந்தக் கூட்டத்துக்கான முன்னேற்பாடுகளைச் செய்யவே ஆகஸ்ட் 13ஆம் திகதி மேலே குறிப்பிட்ட பிரமுகர்கள் கலந்தாலோசனை நடத்தினார்கள்.

அந்தக் கூட்டத்தில் ஜே.வி.பியின் விமல் வீரவன்ச தாம் ஜனாதிபதியுடன் தகுதிகாண் அரசு அமைப்பது பற்றிப் பேசியபோது என்ன நடந்தது என்பதை விவரித்தார்.

ஆனந்தசங்கரி குறுக்கிட்டு விமல் வீரவன்சவிடம் ஒரு கேள்வி கேட்டார். அதிகாரப் பரவலாக்கல் பற்றி ஜனாதிபதி ஏதாவது உறுதி மொழி அளித்தாரா என்று அவர் கேட்டார்.

அதற்கு வீரவன்ச பதில் அளிக்கையில், அதிகாரப்பரவலாக்கல் இல்லை என்று தம்மால் பகிரங்க அறிக்கை விட முடியாது என்றும் இன்னும் ஒரு வருடத்துக்குள் அதிகாரப் பரவலாக்கல் நடத்தமுடியாது என்று ஜனாதிபதி தெரிவித்தார் என்றும் சொன்னார்.

உடனே ஆனந்தசங்கரி ''இதனால்தான் இந்த அம்மணியை எங்களால் நம்பமுடியவில்லை.

கடந்தவாரம் நாங்கள் அவரைச் சந்தித்தபோது வேண்டுமானால் அடுத்த நாளே வடக்கு கிழக்கிற்கு அதிகாரத்தைப் பரவலாக்கத் தாம் தயார் என்றும் ஆனால் ஐ.தே.க தான் தம்மைத் தடுக்கிறது என்றும் ஜனாதிபதி சொன்னார்'' என்று கூறினார்.

மொத்தத்தில் யுத்தநிறுத்தமும் இல்லை. அதிகாரப்பரவலாக்கலும் இல்லை. சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து குழப்பநிலைதான் ஏற்படப் போகிறது. எல்லாம் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சி பீடத்தில் தொடர்ந்து தான் இருக்க வேண்டும் என்று விரும்புவதால்!

அதிகாரம் யாரை விட்டது? Power corrupts என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். அதிகாரம் ஆட்களைக் கெடுத்து விடுகிறது என்பது அதன் பொருள்.

# ஆட்டிப்படைக்கும் படையினர் வாடி வதங்கும் பொதுமக்கள்

## மட்டு. மாவட்டம் புதுக்குடியிருப்பில் தொடரும் நெருக்கடிகள்

வடக்கு–கிழக்கு மாகாணத்தில் இன அழிப்புக்கள், அடக்குமுறைகளுக்குள் சிக்கிவிட்ட கிராமங்களில் ஒன்றுதான் புதுக்குடியிருப்பு.

மட்டக்களப்பு நகரிலிருந்து தெற்காக 12 கிலோ மீற்றருக்கு அப்பால் புதுக்குடியிருப்புக் கிராமம் உள்ளது. சுமார் 800 குடும்பங்களைக் கொண்ட இக்கிராமத்தின் பிரதான தொழில் மீன்பிடி. சிலர் விவசாயத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

இந்திய இராணுவத்தினராலும் 1990 ஆம் ஆண்டுக்குப் பின் ஸ்ரீலங்கா இராணுவத்தினராலும் இக்கிராமம் பல தடவைகள் துவம்சம் செய்யப்பட்டிருந்தது.

புதுக்குடியிருப்பு கிராமத்தில் இப்போது விசேட அதிரடிப்படையினர் நிலை கொண்டுள்ளனர். இங்கு நடைபெறும் அத்துமீறல்கள், கொடுமைகள், தொல்லைகளைக் கண்டு எதிர்க்கவும் முடியாமல் வெளியில் சொல்லவும் முடியாமல், இந்தக் கிராம மக்கள் வாயில்லாப் பூச்சிகளாக வாழும் பரிதாபத்தைத் தான் காணமுடிகிறது.



கொலையுண்ட 17 பேர் நினைவாக அமைக்கப்பட்டுள்ள 17 அடி உயரமான தூபி.

இக்கிராமத்திற்குச் சென்ற நாம் படையினரால் மக்கள் படும் இன்னல்கள் பற்றிக் கேட்டோம். அதைச் சொல்வதற்கு பலர் தயங்கினார்கள், சொன்னால் என்ன ஆபத்து வருமோ என்று அஞ்சினார்கள். ஒரு சிலர் தங்களின் பெயர்களை வெளியிடவேண்டாம் என்ற வேண்டுகோளுடன் தாங்கள் அனுபவித்து வரும் துன்பங்களைச் சொன்னார்கள்.

மீனவர் ஒருவர் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி விவரித்தார்.

''கிராமத்தில் பெரும்பாலான குடும்பங்கள் மீன்பிடித்தொழிலையே நம்பி வாழ்கின்றன. இரவில் மீன் பிடிக்கச் சென்று காலையில் திரும்பி வரும் போது விசேட அதிரடிப் படையினருக்கு நல்ல மீனைக் கொடுத்து விட்டு மிகுதியைத்தான் விற்க முடியும். அவர்கள் எடுக்கும் மீனுக்குப் பணம் தரமாட்டார்கள்.

''படையினருக்கு மீனைக் கொடுக்காமல் இங்கு இருக்க முடியாது. அவர்கள் எங்களை பழிவாங்குவார்கள். மீனைக் கொடுக்க மறுத்தவர்கள் சுற்றிவளைப்பு தேடுதல்களின் போது திட்டமிட்டு பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள். நாங்கள் இரவிரவாக நித்திரை விழித்து கடலில் இருந்து மீன் பிடித்துக் கொண்டு வருகிறோம். நாங்கள் படும் கஷ்டத்தை உணராது எங்களை அடிமைகளைப் போல நினைத்து மீனைப் பறித்துக்கொண்டு செல்கிறார்கள்'' இப்படி அந்த மீனவர் சொன்னார்.

''இரவிரவாக கடலில் நித்திரை விழித்து மீன்பிடித்துவிட்டு வரும் போது மீனைப் பறிமுதல் செய்யும் விசேட அதிரடிப்படையினர் பகலிலும் அவர்களை ஓய்வெடுக்க விடுவதில்லை. கடலிலிருந்து வந்ததும் முகாமுக்கு வருமாறு உத்தரவிடுவார்கள். அங்கு சென்றதும் பொதுமக்களை கூட்டிச் சென்று வாவிக் கரையோரம் இருக்கும் கண்ணாமரங்களை வெட்டுமாறு பணிப்பார்கள்.

''வாவி ஓரங்களில் மீன் விருத்திக்கும், சூழலுக்கும் உகந்ததாக இருக்கும் கண்ணாக்காடுகளை பொதுமக்களைக் கொண்டு முற்றாக அழித்து வருகிறார்கள்.

''விடுதலைப்புலிகள் அங்கு மறைந்திருந்து தாக்குவார்கள் என்ற அச்சத்தில் படையினர் காடுகளை அழித்து வருகிறார்கள். வீதியோரம் இருக்கும் காடுகள், மரங்கள் என்பனவற்றையும் பொதுமக்களைக் கொண்டு படையினர் அழித்து வருகிறார்கள். முதல்நாள் மாலையில் வந்து அடையாள அட்டைகளை வாங்கிக் கொண்டு காலையில் முகாமுக்கு வருமாறு உத்தரவிட்டுச் செல்வார்கள்.

''காலையில் முகாமுக்கு செல்பவர்களை காடுவெட்டும் வேலைகளிலும் தமது முகாமை துப்புரவு செய்யும் வேலைகளிலும் ஈடுபடுத்துகிறார்கள்.

''தமக்கு ஏதாவது பொருட்கள் தேவைப்பட்டால் அதை பொதுமக்களைக் கொண்டே வாங்கிக் கொள்கிறார்கள்.''

''அண்மையில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் தலைக்கவசத்தை கையில் கொண்டு வந்தார். தலையில் அணியாததற்காக அதைப்பறித்து வீதியில் போட்டு உடைத்துவிட்டு ஒரு பைக்கட் சீமெந்து வாங்கிக் கொண்டு வந்து முகாமில் தருமாறு உத்தரவிட்டுச் சென்றனர். தலைக்கவசத்தை இழந்த நஷ்டம் ஒருபுறம் சீமெந்து பைக்கட்டும் வாங்கிக்கொடுக்க வேண்டியதாயிற்று'' இப்படி அவர் மேலும் கூறினார்.

''படையினருக்கு காப்பரண்கள் அமைப்பதற்கும் முகாம்கள் அமைப்பதற்கும் மரங்கள் தேவைப்பட்டால் வீடுகளில் உள்ள வேம்பு, தென்னை, பனை மரங்களை அங்குள்ள மக்களைக் கொண்டே தறித்தெடுத்துச் செல்வார்கள்.

''பிள்ளையார் ஆலயத்தில் விலைமதிப்பு மிக்க மரங்கள் கோவில் புனரமைப்புப் பணிக்காக வைக்கப்பட்டிருந்தன. அவற்றைக்கூட படையினர் எடுத்துச்சென்று விட்டனர்'' என சொன்னார் ஆலய நிர்வாக சபை உறுப்பினர் ஒருவர்.

### தோணிகள் பறிமுதல்

வேலை செய்வதற்காக விசேட அதிரடிப்படையினர் அழைக்கும் போது செல்லாதவர்களின் மீன்பிடித் தோணிகள் பறிமுதல் செய்யப்படுகின்றன. கிரான் குளத்தைச் சேர்ந்த மீனவர்களின் மூன்று தோணிகள் இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. முகாமிற்குச் சென்று வேலை செய்யாததற்கு பழி வாங்கும் முகமாக தோணிகளைப் பறிமுதல் செய்துவிட்டு ''புலிகளுக்கு உதவுகிறார்கள். அதனால் தோணிகளைப் பறிமுதல் செய்தோம்'' என்று காரணம் சொல்கிறார்கள்.

படையினருக்கு மோட்டார் சைக்கிள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி, டெக் தேவைப்பட்டால் கிராமத்திற்கு வந்து எடுத்துச் செல்வார்கள். கொடுக்கா விட்டால் பழிவாங்குவார்கள் என்ற அச்சம் அந்த மக்களுக்கு.

நாங்கள் அக்கிராமத்தில் நின்றபோது கண்காட்சி ஒன்று இடம்பெற்றது.

படையினர் எப்படி பொதுமக்களை அடிமைகளைப்போல வைத்திருக்கிறார்கள் என்பதற்கு சாட்சியாக அமைந்திருந்தது அது.

வெளிநாட்டிற்குச் சென்று வேலை பார்த்துவிட்டு இங்குவருபவர்களை அழைத்து கோழி மற்றும் மதுபானங்கள் வாங்கி வரும்படி உத்தரவிடுவார்கள். சிலரிடம் பெருந்தொகை பணத்தையும் அவர்கள் வசூலித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

1990 ஆம் ஆண்டுக்குப் பின் கிழக்கில் பல கிராமங்களில் தமிழ் மக்கள் வகைதொகையின்றி வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இராணுவத்தினருடன் சேர்ந்து முஸ்லிம் ஊர்காவல் படையினர் இந்த படுகொலைகளை நடத்தியிருக்கிறார்கள். இந்த படுகொலைகளிலிருந்து புதுக்குடியிருப்பு கிராமமும் தப்பவில்லை.

1990 ஆம் ஆண்டு செப்டெம்பர் 21ஆம் திகதி நள்ளிரவு வேளையில் ஆயுதங்களுடன் வந்தவர்கள் வீடுவீடாகச் சென்று மக்களை எழுப்பி கடற்கரைக்கு கொண்டு சென்றனர். இராணுவத்தினரின் உதவியுடன் முஸ்லிம் ஊர்காவல் படையினரே இப்படுகொலைகளைச் செய்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். அங்கு வைத்து 17 பேர் வெட்டிக்கொலை செய்யப்பட்டனர்.

அச்சம்பவத்தில் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி காயமடைந்து உயிர்தப்பிய இளைஞர் ஒருவரை சந்தித்தோம். இப்போது அந்த இளைஞனுக்கு 21 வயது. பத்து வயதாக இருக்கும் போது தனக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவம் பற்றி அவன் விவரித்தான்.

''இரவு வீட்டில் படுத்திருந்தபோது நன்றாக சிங்களம் தெரிந்த ஒருவர் எங்களைக் கூப்பிட்டார். இராணுவத்தினர் வந்திருக்கின்றனர். தேடுதல் நடத்தப்போகிறார்கள். பொதுமக்கள் எல்லோரும் கடற்கரைக்குச் செல்ல வேண்டும் என கூறினார். நாங்கள் எல்லோரும் அவர்கள் கூறிய இடத்திற்குச் சென்றோம்.



புதுக்குடியிருப்புக் கடற்கரையில் மீனவர் வள்ளங்கள்

''கடற்கரையில் மணல் எடுத்த பெரியதொரு மடுவிற்குள் எல்லோரையும் இருக்குமாறு கூறினர். விசாரணை செய்ய வேண்டும் என கூறி 6 பேரை முதலில் கண் ணையும் கையையும் கட்டி கூட்டிச் சென்றனர்.

''அதன் பின் 6 பேரை கூட்டிச் சென்றனர். இவ்வாறு கூட்டிச் செல்பவர்களுக்கு ஏதோ விபரீதம் நடக்கிறது என்பதை ஊகித்துக் கொண்ட சிலர் அங்கிருந்து தப்பி ஓடத் தொடங்கினர். அதனையடுத்து எங்களில் சிலரை வெட்டி விட்டு துப்பாக்கியால் சுட்டுவிட்டுச் சென்றனர்.

''விசாரணைக்கென கொண்டு செல்லப்பட்டவர்கள், கடற்கரையில் வெட்டி கொலை செய்யப்பட்டார்கள் என்பதை பின்னர் அறிய முடிந்தது'' இப்படி அந்த இளைஞர் சொன்னார்.

காயமடைந்தவர்கள் பின்னர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதால் உயிர் பிழைத்தனர். இந்தப் படுகொலைகளில் அக்கிராமத்தை சேர்ந்த 17 பேர் ஒரே இரவில் உயிரிழந்தனர். அது தவிர அதன் பின்னர் பல தடவைகளில் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி பலர் பலியாகியுள்ளனர்.

1995ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் திகதியும் இக்கிராமத்தில் சுமார் 25க்கு மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். புதுக்குடியிருப்பு விசேட அதிரடிப்படை முகாம் மீது விடுதலைப் புலிகள் தற்கொலைத் தாக்குதலை நடத்தினர். இதனையடுத்து பிரதான வீதியால் வாகனங்களில் சென்று கொண்டிருந்த பிரயாணிகள் மீதும் இக்கிராமத்தில் உள்ள பொதுமக்கள் மீதும் துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டது. அப்பொழுதே 25க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் சடலங்களை மூன்று தினங்களின் பின்னரே எடுப்பதற்கு படையினர் அனுமதித்தனர்.

தாம் நினைத்ததை சட்டமாக்கிக்கொண்டு அக்கிராம மக்களை அடிமைகளாக நடத்துகின்ற அத்துமீறல்களை கண்டும் மனித உரிமை அமைப்புக்கள் மௌனம் சாதிப்பது ஏன்?

— துவாரகன்


Best wishes for the people of the India and the Government of India

Sole Agents For

bajaj FANS, Hot Water, Geyzers, Irons, Water Filters, Household bulbs, Fluorescent Tubes and Electrical Appliances.


The range of Bajaj




Home appliances

SUPREME STAINLESS STEEL WATER FILTERS.

Capacity 16,18,20 & 26 Litres.



POPULAR LIGHT WEIGHT IRON



Thermal fuse for aditional safety.
Special non-stick coating of Akzo-Noble of italy on the sole plat for extra- smooth gliding.

EXHAUST FANS



Low power consumption.
Heavyduty Industrial Fans.
1 year guarantee (on motor only)
Sizes 12",15", 18"& 24"
Power - single phase.

Sole Agents
Capricorn Enterprises
50-1/12, Galle Road, Wellawatte, Tel:592919, 508152
Fax: 592477, E-mail: capricon@sri.lanka.net

சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத மாணிக்க விநாயகர் ஆலயம்

# மஹா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துக்கள்


எமது நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பேராதரவு நல்கிய வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது நிறுவனத்தின் அரையாண்டு நிறைவை முன்னிட்டு

ஆகஸ்ட் 20 முதல்

மாபெரும் மலிவு விற்பனை

உங்கள் மனங்கவர் டிசைன்களில் புதிதாக இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சல்வார் கமீசுகள், ஷோல்கள் என்பன பெரியோர்களுக்கும் விசேடமாக சிறுவர்களுக்குமாக எங்கும் பெற முடியாத விலைகளில் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்


மற்றும் கண்கவர் ஷோல்களும் தனியாக பெற்றுக்கொள்ளலாம்.

உடனே விரையுங்கள்.

**SHALWAR PARADISE**

*73C, MANNING PLACE*
*WELLAWATTA*
*TEL: 072410154*




**சிவா டெக்ஸ்டைல்ஸ்**

எல்லா விதமான
ஆடைத் தெரிவுகளுக்கும்
உகந்த இடம்

இல.172, மெயின் வீதி,
கொழும்பு-11
தொ. பே. 422523





**சிவசக்தி ஸ்டோர்ஸ்**

**Commission Agents**

மற்றும் உள்ளூர்
உற்பத்தி விற்பனையாளர்கள்


இல.240, Keyzer Street,
Colombo -11.
T.P: 421636

**ஸ்ரீ Jayalalitha Jewellery Mart**

அசல் 22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக் கொள்ள......

**ஜெயலலிதா ஜுவலரி மார்ட்**

இல. 65, செட்டியார் தெரு, கொழும்பு - 11 தொ.பே: 449177, 422548




**New Feminah Tex**

**Esses Groceries**

முழுக்குடும்பத்துக்குமான
ஆடைத் தெரிவுகளுக்கு
நீங்கள் நாட வேண்டிய
ஆடைகளின் சோலை.

**New Feminah Tex**

272, Bambalapitiya Govt.Flats
Galle Road, Colombo -04.
T.P : 594756, 597106, 555617





**கற்பகம்**

**பாம்லீப் ரெஸ்டுரண்ட்**

பாலப்பம்
தோசை, இடியப்பம்,
பிட்டு மற்றும் அனைத்து வகை
அருசுவை உணவுகளையும்
உண்டு மகிழ அருமையான இடம்.

* மதியம் சாப்பாடும் எம்மிடம் உண்டு.
* காலை 7.00மணி முதல் மாலை 9.00வரை

No.244, Galle Road, Colombo -04.
Tel : 074-510865, 077-345529





**Bambalapitiya**

**GOWRI JEWELLERS**

நித்தம் நித்தம் மாறுகின்ற
தங்க ஆபரணங்களை சித்தம்
மகிழ புதிய டிசைன்களில்
அணிந்து அழகு சேர்க்க

பம்பலப்பிட்டிய கவ்ரி ஜுவலர்ஸ்
No.163/A, Galle Road, Colombo -04.
Tel: 593488





**மயிலோன் டிரேடர்ஸ்**

உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள்

இல. 225, டாம் வீதி, கொழும்பு – 12.

*Tel: 445563, Tel/Fax : 321422*

*E-mail - mylon@isblanka.lk*





**VATHSALA**

**வத்சலா டிரேட் செண்டர்**

*Trade Centre*

உங்கள் இல்லங்களுக்கும் உணவு விடுதிகளுக்கும் இலகுவில்
தோசை, வடை, சட்னி என்று உடன் தயாரிக்க சிரமப்பட தேவையில்லை.
இதோ எம்மிடம் லக்ஷ்மி வெட்கிரைண்டர் சாய்வு வகை கிரைண்டர், பத்து நிமிடத்தில் அரைத்து தருகிறது. மிகுந்த கவனத்துடன் தயாரிக்கப்பட்ட இது உங்களின் எல்லாத் தேவைகளையும் மனதில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.
இவை யாவற்றிற்கும் மேலாக ஒரிஜினல் AUE மோட்டர் பொருத்தப்பட்டுள்ளது. ஒரு வருட உத்தரவாதமும் உண்டு
2 லீற்றர் முதல் 5 லீற்றர் வரை உள்ளடக்கத்தை கொண்டது.

"லக்ஷ்மி வெட் கிரைண்டர்" புதுமையின் வசதிகளையும் பழமையின் பக்குவத்தையும் ஒருங்கே கொண்டது.

"லக்ஷ்மி வெட் கிரைண்டர்" புதுமையின் வசதிகளையும்
பழமையின் பக்குவத்தையும் ஒருங்கே கொண்டது

182,Sea Street, Colombo -11. Tel: 471421, 074-717901




# மத்திய அரசுடன் மோதுவதற்கு ஜெயலலிதா தயாராகிறார்!

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளாகியிருக்கிறார். அவருக்கு எந்த விதத்திலும் அழிவைத் தந்து விட வேண்டும் என்ற துடிப்புடன் சிலர் முயன்று வருகிறார்கள். மத்திய அரசின் தலையீட்டுடன் ஜெயலலிதாவின் ஆட்சியைக் கலைத்து விட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய சூழ்நிலையில் ஜெயலலிதா தமது வழமையான அதிரடிப் போக்கைக் கடைப்பிடித்தால் அவருக்கு அதனால் எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை. மாறாக ஆபத்து தான் தேடிவரும். எனவே மத்திய அரசுடன் இணங்கிப் போக ஜெயலலிதா முயலுவார் என்று எதிர்பார்க்கப் பட்டது.

ஜெயலலிதா பிரதமர் வாஜ்பாயுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள முயன்றார். ஆனால் புதுடில்லிக்குச் சென்று தமது வழமையான அதிகாரப் போக்குடன் நடந்து கொள்ளும் நிலையில் ஜெயலலிதா இல்லை. புது டில்லி என்றாலே ஜன்னிக்காய்ச்சல் வந்து விடும் நிலையில் ஜெயலலிதா இருக்கிறார் இன்று.

முன்னொரு தடவை வாஜ்பாய் பிரதமராக வந்த போது அவருக்கு ஜெயலலிதாவின் பக்கத்துணை தேவைப் பட்டது. ஜெயலலிதா தனது போயஸ்கார்டன் மாளிகையிலிருந்து பிறப்பித்த உத்தரவுகளையெல்லாம் பிரதமர் வாஜ்பாய் சிரமேற் தாங்கி நிறைவேற்றி வைத்தார். அப்போது ஜெயலலிதா ஆட்சியில் இருக்கவில்லை.

இன்றோ அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியில் இருக்கிறார் ஜெயலலிதா. ஆனால் அவரை உதாசீனம் செய்யும் திடமான உள்ளம் வாஜ்பாய்க்கு இருக்கிறது.

ஜெயலலிதா புதுடில்லியில் மாநில அரசுகளுக்கு நிதி ஒதுக்குவது சம்பந்தப்பட்ட திட்ட கமிஷன் கூட்டத்தில் கலந்து கொள்ளவிருந்தார். அவ்வேளையில் பிரதமர் வாஜ்பாயைச் சந்திப்பதற்கு காலநேரம் கேட்டிருந்தார். ஆனால் கிடைக்கவில்லை. இதனால் நிதி அமைச்சர் பொன்னையனை புது டில்லிக்கு அனுப்பிவிட்டு சென்னையிலேயே தங்கிவிட்டார்.

மத்திய அரசு ஜெயலலிதாவுக்கு சில உத்தரவுகளைப் பிறப்பித்தது. கருணாநிதியைத் தாக்கிய பொலிஸ் அதிகாரிகளைத் தண்டிக்கும்படி கேட்டது. ஆனால் ஜெயலலிதா அது விடயத்தில் கதிகலங்கிப் போய் இருக்கிறார்.

இவ்வேளையில் ஜெயலலிதாவின் உத்தரவுகளை தலைமேல் தாங்கி நிறைவேற்றும் மூன்று பொலிஸ் அதிகாரிகளை மத்திய அரசின் பணிகளுக்கு அனுப்பும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தலைமைப் பொலிஸ் அதிபர் முத்துக்கறுப்பன் மற்றும் அவரது சகாக்கள் இருவர் ஆகியோரை டில்லிக்கு இடமாற்றம் செய்ய ஜெயலலிதா மறுத்து விட்டார்.

எக்காரணம் கொண்டும் தமது பொலிஸ் அதிகாரிகளை மத்திய அரசு சேவைக்கு அனுப்ப ஜெயலலிதா தயாராக இல்லை. மத்திய அரசுடன் மோதுவதற்கு அவர் தயாராகி விட்டார்.

## விசாரணைக் கமிஷன்

ஜெயலலிதா தமிழக முதலமைச்சராக முன்னர் பதவி வகித்த காலத்தில் ஊழல் வழக்குகளில் சம்பந்தப்பட்டார். அத்துடன் விசாரணைக் கமிஷன் நியமிக்கும் விடயத்திலும் அவர் சாதனை செய்திருந்தார்.

ஜெயலலிதா நியமித்த விசாரணைக் கமிஷன்களில் சரியான முறையில் இயங்கியவை எத்தனை என்பது தெரியாது.அவ்விதம் இயங்கிய விசாரணைக் கமிஷன்கள் வெளியிட்ட அறிக்கைகளுக்கு என்ன நடந்தது என்பதும் தெரியாது.

நெருக்கடிகளுக்கு மத்தியில் மீண்டும் பதவிக்கு வந்த ஜெயலலிதா அரசியல் ரீதியில் அல்லாடிப் போய் இருக்கிறார். ஆயினும் புதிது புதிதாக விசாரணைக் கமிஷன்களை நியமிக்கும் நிலையிலிருந்து அவர் மீளவில்லை என்பது புலப்படுகிறது.

கருணாநிதியை நள்ளிரவில் வேட்டையாடும் முயற்சியில் ஈடுபட்டு அதனால் முகத்தில் கரி பூசிக் கொண்டார் ஜெயலலிதா. பொலிஸாரைத் தூண்டிவிட்டு அவர்கள் காட்டு மிராண்டித்தனமாக நடந்து கொள்வதற்குக் களம் அமைத்துக் கொடுத்தார்.

தமிழகப் பொலிஸார் வரம்பு மீறி நடந்து விட்டார்கள் என்று மத்திய அரசு குற்றம் சுமத்தியது. சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கும்படி ஜெயலலிதாவுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.

அவ்வேளையில் ஜெயலலிதா ஒரு விசாரணைக் கமிஷனை நியமித்தார். அந்தக் கமிஷன் தனது அறிக்கையை மூன்று மாதங்களுக்குள் வெளியிட வேண்டும் என்று காலக்கெடு விதித்தார். அந்தக் கமிஷன் வெளியிடும் அறிக்கையின்படி பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்தார்.

அந்தக் கமிஷன் தனது விசாரணையை ஆரம்பித்து விட்டதா என்பது தெரியவில்லை. ஆயினும் மத்திய அரசின் நெருக்குதல்களிலிருந்து விடுபட ஜெயலலிதாவுக்கு சிறிது அவகாசம் கிடைத்திருக்கிறது.

அந்த விசாரணைக் கமிஷனை நியமித்த சிறிது காலத்திற்குள்ளாகவே மற்றொரு விசாரணைக் கமிஷனையும் நியமிக்க வேண்டிய கட்டாயம் ஜெயலலிதாவுக்கு ஏற்பட்டது.

பொலிஸாரினால் கருணாநிதி தாக்கப்பட்ட சம்பவத்திற்குக் கண்டனம் தெரிவிக்கும் விதத்தில் தி.மு.க வினர் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை சென்னையில் நடத்தினர்.

பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். தி.மு.க கண்டனப் பேரணி குழப்பப்பட்டது.

இந்த ஓசைகள் யாவும் எதிரொலித்து அடங்குவதற்கு முன்னரே புதிதாக ஒரு விசாரணைக் கமிஷனை நியமித்துவிட்டார் ஜெயலலிதா. தி.மு.க கண்டனப் பேரணியின் நோக்கம் என்ன? அதன் பின்னணியில் நடைபெற்ற மர்மங்கள் எவை? — இவைபற்றியெல்லாம் விசாரணை நடத்தும்படி ஜெயலலிதா பணித்துள்ளார். அத்துடன் கமிஷன் தனது அறிக்கையை மூன்று மாதங்களுக்குள் வெளியிடவேண்டும் என்றும் ஜெயலலிதா கேட்டிருக்கிறார்.

ஆறு மாதங்களுக்குள் சட்டசபைக்கு உறுப்பினராக வந்து விட வேண்டும் என்ற காலக்கெடுவுடன் முதலமைச்சர் பதவியை ஏற்றவர் ஜெயலலிதா. அந்தக் காலக்கெடுவின் பாதி நாட்கள் கழிந்துவிட்டன. எஞ்சியுள்ள மூன்று மாதங்களையும் ஜெயலலிதா பூரணமாகப் பூர்த்தி செய்வாரா என்பது கேள்விக் குறியாகவே இருக்கிறது.

—கதாசி




## கிணறு வெட்ட பூதம்

கிணறு வெட்டப் போய் பூதம் கிளம்பிய கதை பலருக்குத் தெரியும். அதிகார அம்மணியின் ஒரு நடவடிக்கையின் கதையும் அதைப் போலத்தான் என்று முஸ்லிம் அமைச்சர்ஒருவர்நையாண்டிசெய்கிறாராம்.

இரண்டு எழுத்து இயக்கக்காரர்களை இன்னுமொரு புதிய நாடும் தடைசெய்ய வேண்டும் என்று அதிகார அம்மணியும், அவருக்குப் பூரண ஆதரவு அளித்துவரும் இன்னுமொரு அமைச்சரும் தீட்டிய திட்டம் பிசுபிசுத்துப் போனதாம். அமைச்சரின் நையாண்டிக்கு இதுதான் காரணம் என்று கூறப்படுகிறது.

அந்தப் புதிய நாட்டுக்குள் நுழைய இரண்டெழுத்து இயக்கப் புள்ளிகளுக்குத் தடை விதிக்கப்பட்டு விட்டதாக செய்தி வரச்செய்தது அதிகாரத் தரப்புதானாம். ஆனால் அந்த நாட்டுத் தூதரகம் இங்கே அதனை மறுத்துவிட்டதாம்.

அந்த நாட்டிலும் இரண்டெழுத்துக் காரர்களை தடை செய்துவிட எடுத்த முயற்சி முளையிலேயே கருகிவிட்டதாக முஸ்லிம் அமைச்சர் தன் சகாக்களுக்கு தெரிவித்தாராம்.

"பொய்யான தகவல் பரப்பப் போய் இரண்டெழுத்துக்காரர்களை அந்த நாடு மறைமுகமாக அங்கீகரிக்கும் நிலையை உருவாக்கி விட்டிருக்கிறார்கள். இரண்டெழுத்து இயக்கக்காரர்களுக்கு எதிராக மனோதத்துவ தாக்குதல் நடத்தப்போய், அந்த நாட்டின் ஊடாக இரண்டெழுத்து இயக்கக்காரர்களுக்கு இங்குள்ள அதிகாரத்தரப்பாரே அங்கீகாரம் பெற்றுக் கொடுத்திருக்கிறார்கள்" இப்படி அந்த முஸ்லிம் அமைச்சர் கூறினாராம்.

அவர் இப்படிக் கூறியதுக்குக் காரணமும் அவருக்கு அம்மணி மேல் ஏற்பட்டுள்ள அதிருப்திதானாம்.

## நோட்டம் விடும் கண்கள்

இரண்டுஎழுத்தால்செல்லமாக அழைக்கப்படும் அமைச்சர் அவர். சட்டத்துறையில் நிபுணத்துவம்பெற்றவர். அவருக்கும் அதிகார அம்மணிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள 'லடாய்' காரணமாக அதிகார அம்மணி அவர் மீது ஒரு 'கண்' வைத்திருக்க உத்தரவிட்டிருக்கிறாராம்.

அமைச்சரின் இல்லமருகில் அதிகார அம்மணியின் பாதுகாப்பு பிரிவினர் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதை அந்த அமைச்சரின் பாதுகாப்பு அதிகாரிகள் அறிந்து உரியவர்களுக்குதகவல் அனுப்பினார்களாம்.

"ஏன் இங்கு நிற்கிறீர்கள் என்று அதிகார அம்மணியின் பாதுகாப்பு பிரிவினரிடம் கேட்டதற்கு அம்மணி இவ்வழியால் போகவுள்ளதால் நிற்பதாக தெரிவித்தார்களாம். ஆனால் கடைசி வரை அவ்வழியால் அம்மணி போகவில்லையாம்.

இரண்டெழுத்து அமைச்சரிடம் யார் யார் போகிறார்கள் என்று அறிவதுதான் அம்மணியின் நோக்கமாம்.

இதனை அறிந்து கொண்ட சில அமைச்சர்கள் அதிகார அம்மணி மீது ஆத்திரம் அடைந்துள்ளார்களாம்.

அவசரமாகக்கூடி முடிவு எடுத்த அந்தச் சில அமைச்சர்கள் மேலும் சில பரிவாரங்களுடன் அமைச்சரின் இல்லத்துக்குச் சென்றார்களாம். நீண்ட நேரம் அங்கு தங்கியிருந்தார்களாம்.

நாங்கள் தான் போனோம் என்று அதிகார அம்மணிக்குத் தெரியப்படுத்துவதற்காகத்தான் இவர்கள் இப்படி வேண்டுமென்றே நடந்து கொண்டார்களாம்.

இப்போது அதிகார அம்மணியுடன் முரண்பட்டுள்ள இந்த அமைச்சர்களுக்கு தொல்லை கொடுக்கும் விதத்தில் அதிகார அம்மணியும் பதில் நடவடிக்கை எடுத்திருக்கிறாராம்.

அந்த அமைச்சர்கள் செய்த தகுதியற்ற நடவடிக்கைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு தீரவிசாரிக்கும் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறாராம்.

## ஆள் தேடும் படலம்

அந்தத் தமிழ்க் கட்சியின் தலைவரும், செயலரும் புதிய தேர்தலின் போது வடக்கில்தான் போட்டியிடுவார்களாம். கொழும்பில் கடந்த காலங்களில் பெற்ற அனுபவங்களே இத்தீர்மானத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறதாம்.

இதன் காரணமாக வடக்கில் தேர்தலில் போட்டியிடுவதற்கான நடவடிக்கைகளை அந்தத் தமிழ்க் கட்சி இப்போதே தொடங்கி விட்டதாம். வடக்கில் கட்சியின் சார்பாக போட்டியிடக் கூடியவர்கள் யார் என்று அறிவதில் இப்போது கூடுதலான கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அதன் செயலர் கூறி வருகிறாராம்.

அப்படியானால் அத்தமிழ்க்கட்சி கொழும்பில் போட்டியிடாதா என்று கேட்டால் நிச்சயமாக இல்லை என்று அடித்துக் கூறுகிறாராம். கொழும்பில் என்ன செய்வதாக உத்தேசம் என்று கேட்டால் அதற்கும் ஏற்பாடு இருக்கிறதாம்.

மனோகரமானவரின் மேற்கு மாகாண முன்னணியுடன் அத்தமிழ்க் கட்சியின் செயலரும் முக்கியஸ்தர்களும் நிச்சயமாக இணைந்து கொள்வார்களாம். அந்த முன்னணியுடன் இணைந்து கொள்ளும் பல அமைப்புகளுடன் இத்தமிழ்க் கட்சியும் இணைந்து மேற்குத் தமிழ் மக்களுக்காக போராடிச் சேவை செய்வதுதான் இத்தமிழ்க் கட்சியின் முடிவாம்.

அதே நேரம் இத்தமிழ்க் கட்சி, கிளைகளை அமைப்பதிலும் கூடிய கரிசனை காட்டி வருகிறதாம். ஏற்கனவே அமைக்கப் பட்டுள்ள கிளைகள் திருப்திகரமாக செயற்பட மட்டக்களப்பு கிளையில் செயற்பாடுகள் திருப்திகரமாக இல்லையாம்.

எல்லாவற்றுக்கும் ஆள்தேடும் படலம் தொடர்கிறதாம்.

சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத மாணிக்க விநாயகர் ஆலயம்

மஹா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துக்கள்

ராகவி ஜுவலரி

தங்க நகை உலகில் மங்கா புகழ் பெற்ற ஸ்தாபனம் அன்றும் இன்றும் என்றும் 22 கரட் நகைகளுக்கு

RAGAVI JEWELLERY
430/4, Mayura Place, Havelock Road,
(Opp. Mayurapathi Amman Kovil
Colombo-06. Tel: 077-764459

சங்கீதா ஜுவல்ஸ்

வெள்ளவத்தையில் பல வருடங்களுக்கு மேலாக மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஒரே ஸ்தாபனம்

Sangeetha JEWELS
Dealers in 22 kt. Gold Jewellery
Credit Card Accepted.
335C, Galle Road, Wellawatte,
Colombo - 06. Tel: 500682, 585321

MARUTHI SERVICES
Reception Hall
Hall Arrangements
Meals (Indoor & Outdoor)
For all Occations
Orchard Building (Opp. Savoy),
7-2/9, Galle Road, Colombo - 06, Sri Lanka.
Tel: 584191, 591812 Fax: 94-1-591812

# தலவாக்கொல்லை பிரச்சினை விளைவு கூண்டோடு இடமாற்றச் சிபாரிசு

## ஏட்டிக்குப் போட்டியாக துண்டுப்பிரசுரப் போராட்டம்

* தலவாக்கொல்லை தமிழ் மகாவித்தியாலய நிர்வாகம் முற்றிலும் மறுசீரமைக்கப்பட வேண்டும்.

* பிரச்சினைகளை உரிய முறையில் கையாளத் தவறிய அதிபரும், உப அதிபரும் இடமாற்றம் செய்யப்பட வேண்டும்.

* பிரச்சினைகளுக்குக் காரணமானவர்கள் என்று கருதப்படும் ஐந்து ஆசிரியர்களும் தலவாக்கொல்லை பிரதேசத்துக்கு வெளியே இடமாற்றம் செய்யப்பட வேண்டும்.

மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர் வி.இராதா கிருஷ்ணனால் அமைக்கப்பட்ட விசாரணைக் குழு இவ்வாறு சிபாரிசு செய்துள்ளது.

தலவாக்கொல்லை தமிழ் மகாவித்தியாலய நிர்வாக சீர்கேடுகள், உயர் வகுப்பு மாணவன் இளைய கண்ணாவின் தற்கொலை, அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற அசம்பாவிதங்கள் ஆகியவை தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு இந்தக் குழு பணிக்கப்பட்டிருந்தது.

நுவரெலியா மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பாளர் ஜோசப் தலைமையில் குழு விசாரணைகளை நடத்தியது.

இப்பாடசாலையில் அண்மைக்காலங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து குழுவினர் விசாரணை செய்தனர்.

நலன் விரும்பிகள், பெற்றோர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்கள் என பலருடைய கருத்துக்களும் பெறப்பட்டன.

இவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இறுதி அறிக்கையே தற்பொழுது அமைச்சர் இராதா கிருஷ்ணனிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

பாடசாலையின் நலன்கருதி அவர் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் வளர்ந்துவரும் பாடசாலைகளில் ஒன்றான இப்பாடசாலை அபிவிருத்தி செய்யப்படும்.

இதற்கு ஏற்ப இப்பாடசாலை கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு என இரு பிரிவுகளாக்கப்படும். இரு பிரிவுகளும் தனித்தனி அதிபர்களின் கீழ் நிர்வகிக்கப்படும்.

தற்பொழுது கடமையில் இருக்கும் அதிபரும், உப அதிபரும் மேற்கொண்ட நடவடிக்கைகளும் அணுகுமுறைகளும் பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்குப் பதிலாக உக்கிரமடையச் செய்து விட்டன. இதனால் இவர்கள் இருவருமே வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப் படுவர்.

பிரச்சினைக்குரிய ஆசிரியர்கள் ஐந்து பேரும் தலவாக்கொல்லை பிரதேசத்துக்கு வெளியே இடமாற்றம் செய்யப்படுவார்கள். ஏனைய ஆசிரியர்கள் விரும்பினால் முறைப்படி விண்ணப்பம் செய்து இடமாற்றங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பாடசாலை வளவுக்குள் மதுபானம் மற்றும் சிகரெட் வகைகளைக் கொண்டுவந்தவரும் கடமையை முறையாகச் செய்யத்தவறியவருமான பாடசாலை காவலாளி இடமாற்றம் செய்யப்படுவார்.

முறைகேடான சம்பவங்கள் இடம்பெறுவதற்கு மையமாக இருந்த பாடசாலை கண்டீன் உடனடியாக மூடப்படும்.

பாடசாலைக் கட்டடத்தில் இயங்கி வந்த கோட்டக் கல்வி அலுவலகம் இடம் மாற்றப்படும்.

கல்வித் திணைக்களத்தின் அனுமதி இன்றி மாணவர்கள் பாடசாலைக் கட்டடத்தில் தங்கி இருப்பது தடை செய்யப்படும்.

கல்வித் திணைக்கள அதிகாரிகளின் முன்னிலையில் திறமையும், அனுபவமும், பக்குவமும் கொண்ட ஓர் ஆசிரியரின்



தலவாக்கொல்லை தமிழ் மகாவித்தியாலய மாணவன் இளைய கண்ணாவின் தற்கொலைக்குக் காரணமானவர்களைக் கண்டித்து பொகவந்தலாவ சென். மேரிஸ் மத்திய மகாவித்தியாலய மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

தலைமையில் ஒழுக்காற்றுக் குழு ஒன்று அமைக்கப்படும். அதன் பதிவுகள் முறையாக பாதுகாக்கப்படும்.

இப்பாடசாலையில் கல்வி பெறும் மாணவர்களின் நிர்வாக நலன் கருதியே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாக அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இதேவேளை தலவாக்கொல்லை தமிழ் மகாவித்தியாலய மாணவனின் தற்கொலையின் பின் அங்கு இடம்பெறும் சம்பவங்கள் வரவேற்கத் தக்கவையாக இல்லை.

ஆசிரியர்கள் சார்பாகவும், மாணவர்கள் சார்பாகவும் அன்றாடம் வெளியிடப்படும் துண்டுப் பிரசுரங்களும் சுவரொட்டிகளும் இப்பிரதேசத்தில் ஒரு குழப்ப நிலையை உருவாக்கிவருகின்றன.

ஆசிரியர்கள் நிரபராதிகள், அவர்கள் கைதிகளைப் போன்று நடத்தப்படுகின்றனர். அவர்களுக்கு கொலை அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன, அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என ஒரு குழுவினர் ஆசிரியர்களுக்கு வக்காலத்து வாங்கும் வகையில் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டுள்ளனர்.

அதோடு மாணவனின் தற்கொலைக்கு ஆசிரியர்கள் காரணம் அல்ல, அவருடைய காதல் பிரச்சினைதான் காரணம் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

வெளியார்களும், அரசியல்வாதிகளுமே பிரச்சினையைப் பெரிதுபடுத்திவிட்டனர் என சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் குறை கூறுகின்றனர்.

பாடசாலை சீரழிந்து சின்னாபின்னமாவதற்கு பாடசாலையின் நிர்வாகமும், சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுமே காரணம். பாடசாலையை காமுகர்களின் கூடாரமாக்கப் பார்க்கின்றனர். மாணவிகளை மனைவியராக்க முனைகின்றனர். சீர்கெட்ட ஆசிரியர்களால் மலையக சமுதாயமே சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளது. இவர்களை பாடசாலையில் இருந்து மட்டுமல்ல சமுதாயத்தில் இருந்தே ஒதுக்க வேண்டும் என மாணவர்களின் பக்கம் இருந்து பிரசுரங்கள் வெளிவருகின்றன.

இதனால் ஆசிரியர் — மாணவர் நல்லுறவு முற்றாகவே அழிந்து போய்விட்டது. இப்படியான நிலையில் இந்த ஆசிரியர்களால் அங்கு தொடர்ந்து பணியாற்ற முடியுமா? இவர்களுக்கு மாணவர்களிடம் மதிப்பும் மரியாதையும் கிடைக்குமா?

இந்த சந்தர்ப்பத்தில் மேலதிகக் கல்விப் பணிப்பாளர் ஜோசப்பினால் சமர்ப்பிக்கப்

### மலையகக் கண்ணோட்டம்

இரா.புத்திரசிகாமணி

பட்டுள்ள அறிக்கையை செயல் படுத்துவது அவசியமாகின்றது. அறிக்கையின்படி மாணவர்களின் போராட்டம் நியாயமானதாகவே தெரிகின்றது.

எது எப்படியோ இப்பாடசாலை மீண்டும் இயங்க வேண்டும். மாணவர்களின் கல்வி தொடர வேண்டும். ஆசிரியர், மாணவர், பெற்றோர் நல்லுறவு கட்டி எழுப்பப்பட வேண்டும்.

இப்பாடசாலை வளர்ச்சியிலும், மாணவர்களின் எதிர்காலத்திலும் அக்கறை கொண்ட அனைவரும் ஏட்டிக்குப் போட்டியாக செயல்படாமலும், குரோதங்களை வளர்க்கும் அறிக்கைகளை வெளியிடாமலும், பரஸ்பர நல்லுறவை வளர்க்க கோரிக்கை விட வேண்டும்.

தனிப்பட்ட சுய இலாபங்களுக்காக பக்கச்சார்பாக செயற்படாமல் அமைச்சர் இராதாகிருஷ்ணனின் நடவடிக்கைகளுக்கு கைகொடுத்தால் பாடசாலையினதும் அங்கு பயிலும் மாணவர்களினதும் எதிர்காலம் சிறப்பாக அமையும்.

# பழைய ஒப்பந்தங்கள் பற்றி பேசி பயனில்லை தீர்வே இன்றைய தேவை

நாடற்றோர் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு தேவை. இந்தியா திரும்ப முடியாமல் இலங்கையையே தாயகமாகக் கொண்டு வாழும் இந்திய வம்சாவளியினர் அனைவரையும் இலங்கை அரசு, இலங்கைப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இது குறித்து இலங்கை அரசுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும். பழைய ஒப்பந்தங்களைக் காட்டி ஒதுக்கிவிடக்கூடாது.

இ.தொ.கா பொதுச் செயலாளரும் தோட்ட உட்கட்டமைப்பு, கால்நடை அபிவிருத்தி அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் இந்திய வெளியுறவுச் செயலர் திருமதி சோகிலா ஐயரிடம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

1983 இனக் கலவரத்தின்போது இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ளவர்களை அகதிகள் என உதாசீனப்படுத்தி நடத்தாமல் மனிதாபிமானத்துடன் அவர்களை இந்திய அரசு நடத்த வேண்டும். அவர்கள் மீதான கெடுபிடிகள் தளர்த்தப்பட வேண்டும் என்றும் அமைச்சர் ஆறுமுகம் கேட்டுக்கொண்டார்.

கொழும்பில் நடைபெற்ற சார்க் நாடுகளின் வெளியுறவுச் செயலர்கள் உச்சி மாநாட்டில் இந்திய வெளியுறவுச் செயலர் திருமதி சோகிலா ஐயரும் கலந்து கொண்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் வெளியுறவுச் செயலர் சோகிலா ஐயர், இலங்கையிலிருக்கும் இந்தியத் தூதுவர் கோபால கிருஷ்ணகாந்தி ஆகியோரைச் சந்தித்து அமைச்சர் ஆறுமுகம் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்பொழுதே மேற்கண்ட விடயங்கள் வலியுறுத்தப்பட்டன.

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளியினர் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும், மலையகக் கல்வி அபிவிருத்திகள் தொடர்பாகவும் இப்பேச்சு வார்த்தையின் போது கலந்துரையாடப்பட்டது.

''நாடற்றோர் பிரச்சினை தொடர்பாகவும் இனப்பிரச்சினை தொடர்பாகவும் இரு நாடுகளுக்கும் இடையில் பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தம், இந்திரா — சிறிமா ஒப்பந்தம் ரஜீவ்காந்தி — ஜே.ஆர் ஒப்பந்தம் என்பன குறிப்பிடத்தக்கவை.

''இந்த ஒப்பந்தங்களைச் செய்தவர்களுள் எவருமே இன்று உயிரோடு இல்லை.

''ஒப்பந்தங்கள் பல செய்தபோதிலும் பிரச்சினைகள் தீரவில்லை.

''காலாவதியான இத்தகைய ஒப்பந்தங்களைக் காட்டி பிரச்சினைகளைத் தட்டிக் கழிக்காமல் மனிதாபிமானத்துடன் பிரச்சினைகளை அணுக வேண்டும்.

''இந்திய பாஸ்போட் பெற்றவர்கள் இரண்டு லட்சம் பேர் இங்கு உள்ளனர். இவர்களுள் பல ஆயிரக்கணக்கானோர் இறந்து விட்டனர். இன்று அவர்களின் வாரிசுகள் நான்கு லட்சத்தையும் கடந்து விட்டனர். இவர்களுக்கு இந்தியா என்ன நிறம் என்றே தெரியாது.



அமைச்சர் ஆறுமுகம்

''இவர்களை எப்படி கட்டாயப்படுத்தி இந்தியாவுக்கு அனுப்ப முடியும்? இவர்கள் இலங்கையிலேயே இருக்க விரும்புகின்றார்களாம். எனவே இவர்கள் அனைவரையும் இலங்கைப் பிரஜைகளாகவே ஏற்றுக் கொள்ள வேண்டும். இதனை இந்திய அரசு இலங்கை அரசுக்கு வலியுறுத்த வேண்டும்.

''இ.தொ.காவின் கோரிக்கையின் பேரில் கடந்த தேர்தலின் போது இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்படும் என சந்திரிகா உறுதி அளித்திருந்தார். துரதிர்ஷ்டவசமாக அவற்றை அவர் செயல்படுத்தவில்லை.

''இப்பொழுது எதிர்க்கட்சியான ஐ.தே.க மற்றும் அரசியல் கட்சிகளுடனும் இந்தப் பிரச்சினைகள் பற்றி பேசி வருகின்றோம். ஐ.தே.க எங்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டுள்ளது.''

இப்படி அமைச்சர் ஆறுமுகம் இந்திய வெளியுறவுச் செயலரிடம் இந்த சந்திப்பின் போது தெரிவித்தார்.

''மலையகக் கல்வி அபிவிருத்தி தொடர்பாக மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் இந்திய அரசுடன் முன்னர் பேச்சுவார்த்தை நடத்தி இருந்தார். கணிதம், விஞ்ஞானம், சங்கீதம், பரதநாட்டியம் போன்ற பாடங்களை மலையகப் பாடசாலைகளில் போதிப்பதற்கு இந்தியாவில் இருந்து ஆசிரியர்களைப் பெறுவதற்கு அப்பொழுது உடன்பாடு காணப்பட்டது.

''கலாசார பரிமாற்றுத் திட்டத்தின் கீழ் இவர்களை அனுப்புவதென இந்திய அரசும் அப்பொழுது ஒப்புக் கொண்டது.

''ஆனால் இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை. இந்த விடயத்துக்குப் புத்துயிர் அளிக்க வேண்டும்'' என்றும் அமைச்சர் ஆறுமுகம் கேட்டுக் கொண்டார்.

''இது மட்டுமின்றி மலையகத்தில் ஒரு பல்கலைக் கழகம் இல்லை. இக்குறையைப் போக்க இந்திய அரசு உதவ வேண்டும். சகல வசதிகளுடன் கூடிய தமிழ் பல்கலைக்கழகம் அவசியம்.

''இந்திய வம்சாவளியினரில் பெரும் பாலானோர் மலையகத்தில் இருக்கின்றனர். அவர்களின் எதிர்கால நன்மைகளைக் கருதி இந்தியா இந்த உதவியைச் செய்ய வேண்டும்'' என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாகக் கூடுதலான கவனம் எடுத்து உதவிகளைப் பெற்றுத் தருவதாக இந்தியத் தூதுவர் கோபால கிருஷ்ணகாந்தி அமைச்சர் ஆறுமுகத்திடம் உறுதி அளித்தார்.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் சமூகப் பற்றுடனும் சமுதாய அக்கறையுடனும் இவற்றை இந்திய அரசிடம் கேட்டுள்ளார். இலங்கையில் இன்று பலமிக்க ஒரு அமைச்சராக இருக்கும் ஆறுமுகம் இலங்கை அரசிடமும் இதனை வலியுறுத்த வேண்டும். இவரது கோரிக்கைக்கு பக்கபலமாக மலையகத்தில் உள்ள அரசியல் வாதிகளும், தொழிற் சங்கத் தலைவர்களும் ஒன்றுபட வேண்டும்.

எதை எதையோ கேட்டு இன்று போராட்டம் நடத்துகின்றனர். இப்படியான ஒரு பயன்மிக்க கோரிக்கையை முன்வைத்துப் போராட்டங்களை ஆரம்பித்தால் எவருமே எதிர்க்க மாட்டார்கள். பல மட்டத்தினரும் ஆதரவு வழங்குவார்கள் என்பது உறுதி.

மலையகத் தொழிற் சங்க அரசியல் வாதிகள் இவற்றைச் செய்வார்களா?


## வெளிநாட்டில் கல்வி

*''இன்றைய கல்வி நாளைய வெற்றி''*

இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, ஜப்பான், இத்தாலி, மோல்டா (இத்தாலிக்கு அருகில்) நியூசிலாந்து, சைபிரஸ்

- அனுமதி தகைமை G.C.E. (O/L)
- சாதாரண பாடநெறி கட்டணம்
- மிகக் குறைந்த கட்டணத்தில் தங்குமிடம்
- டிகிரி, டிப்ளோமா, சான்றிதழ் கற்கை நெறிகள்

DOWN PAYMENTS RS.20,000/= ONLY FOR ANY COUNTRY

**CAREEM AND COMPANY**




1990, இலிருந்து வெளிநாட்டு கல்வி ஆலோசகர்கள்
367,2 ஆம் மாடி, காலி வீதி, மல்பன் சந்தி, இரத்மலானை.
714267, 729276 Fax : 729276
E-mail : cereem@visual.lk

# நவீன வசதிகள் கொண்ட விமானி இல்லாத விமானம்




மிகவும் திறமை வாய்ந்த விமானிகள் செலுத்தும் விமானங்கள்கூட விபத்துக்குள்ளாகிவிடும் காலம் இது. நிலைமை இப்படி இருக்கும் போது விமானி இல்லாத விமானங்கள் என்ன செய்துவிடப்போகின்றன? அமெரிக்க விமானப் பொறியியல் வல்லுநர் ஜோன் மிக்ஸ் அண்மையில் வடிவமைத்த விமானி இல்லாத விமானம் இது தான். விமானி இல்லாத விமானம் வேற்று நாடுகளின் வான் பரப்பில் மிக உயரமாகப் பறந்து உளவு அறிந்து வருவதற்கு அனுப்பப்படுகிறது.

# விமானத்திலிருந்து குதித்து ஆகாயத்தில் குத்துக்கரணம்



விமானத்திலிருந்து குதித்து ஆகாயத்தில் குத்துக் கரணம் அடிப் பது வீரம் நிறைந்த விளையாட்டு ஆகும். ''பாரசூட் ''எனப் படும் பாதுகாப்பு கவசம் அணிந்து விமானத்திலிருந்து குதிக்கத் தெரிந்தவர்கள் விமானப் பயணம் செய்யும் போது தமது உயிரைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடியவர்கள். அதிலும் பாரசூட் மூலம் குதிக்கும் வித்தையில் நன்கு தேறியவர்கள் எத்தனையோ சாதனையை செய்யக் கூடியவர்கள். ''பாரசூட்'' கவசம் அணிந்தவர்கள் எவ்வளவோ தூரத்திற்கு ''பார சூட்'' குடையை விரிக்காமல் அந்தரத்தில் மிதந்து வருவார்கள்.. நிலத்தை அண்மித்த பின்னரே குடையை விரித்து பத்திரமாக நிலத் தில் இறங்கிவிடும் தந்திரம் அவர்களுக்கு உண்டு. விமானத்திலி ருந்து குதித்து சாதனை செய்யும் மூன்று வீரர்களை இங்கே காணலாம்.

# ஓநாய்களின் வாழ்க்கை பற்றி ஆராயும் முயற்சி



காட்டில் வாழும் நாய் இனம் ஓநாய் என்று அழைக்கப் படுகிறது. வேட்டை நாய்களைவிடக் கொடூரமான முறையில் இவை ஆவேசமாகத் தாக்குதல் நடத்தும் தன்மை கொண்டன. இந்த ஓநாய் இனம் அண்மைக்காலமாக அருகிவருகிறது என்று உயிரியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக ஓநாய் இனத்தின் வாழ்க்கை முறை பற்றி விரிவான ஆய்வு நடத்த தேசிய புவியியல் கழகம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. டேவிட் மெச் என்னும் உயிரியல் ஆய்வாளர் இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டிருக்கிறார். தமது கண்காணிப்பிலுள்ள இரு ஓநாய்களுடன் மினிசோட்டா தேசிய பூங்காவில் டேவிட் மெச் கூடிக்களிக்கும் காட்சி இது.

கல்வியறிவு இல்லாதவர்கள் அதிக அளவில் வாழும் பகுதி ஆபிரிக்காக் கண்டம் ஆகும் . அங்குள்ள செனேகல் நாட்டில் வாழும் கல்வி கற்காத பிரஜைகள் தாமாகவே முன்வந்து கல்வி கற்பதற்குத் தொண்டர் நிறுவனம் ஒன்று உதவி புரிகிறது. வீதியோரங்களிலேயே திடீர் பாடசாலைகள் உருவாக்கப்படுகின்றன . கல்வி கற்றுத் தருவதற்கு ஒரு ஆசிரியர் காத்திருக்கிறார். கல்வி கற்க வருபவர்களை வீதியோரங்களிலேயே ஏதாவது இருக்கையில் அமரச் செய்து மிகவும் அன்பான முறையில் பாடபோதனை நடத்துகிறார் அந்த ஆசிரியர்.

# வீதியோரப் பாடசாலை ஆசிரியரின் கல்வித் தானம்



# ஒளிந்திருக்கும் முகம் எது?



ஓகஸ்ட் 12, சுடர்ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை சில்பா ஷெட்டியுடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு.

1. ஏ.மனோகரன், மட்டக்களப்பு.
2. கே.வசந்தகௌரி, மாத்தளை.
3. எம்.எல்.மக்கீன், நுவரெலியா.

சரியான விடையைக் கண்டு பிடித்து, எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுகள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (19.08.2001) மசாலாமிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகர் யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? ரம்யமான நடிகைதான். ஆயினும் வில்லி போல் நடிக்க வைத்து விடுகிறார்களே.

இந்த முகத்திற்குரிய நடிகையைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர்ஒளி'
36/2, பிரெட்ரிக்கா வீதி.
கொழும்பு — 06.

## மசாலா மிக்ஸ்



குழந்தைகள் குதூகலித்து மகிழ்வதற்கு பொம்மைகள், விளையாட்டு பொருள்கள் தேவைப்படுகின்றன. சில தாத்தமார் இங்கே குழந்தைகளின் புதிய விளையாட்டுக் கருவிகளுடன் மனம் லயித்துப் போய் இருப்பதைக் காணலாம். குழந்தைகளின் சிந்தனா சக்தியை வளர்ப்பதற்குப் புதிது புதிதாக விளையாட்டுக் கருவிகள் உருவாக்கப்படுகின்றன. அதே பாணியில் தாத்தாமாருக்குப் புதிய விளையாட்டுகளை ஜப்பானில் அறிமுகப்படுத்துகிறார்கள். முதுமை வந்துவிட்டதே என்று எண்ணி தாத்தமார் வாட்டம் அடைந்து விடாமல் இந்தப் புதிய விளையாட்டுகளில் குதூகலமாகக் கலந்து கொண்டு தமது மனதைத் திடப்படுத்திக் கொள்ள முடியும்.



# குழந்தை விளையாட்டில் தாத்தாமார் குதூகலம்

# வேட்டைப் பற்கள்

''க்றீச்...ச்....''

கதவு மெல்லத் திறக்கும் சத்தம் கேட்டுத் திரும்பினார் புரொபஸர் சாமுவேல்.

''குட் ஈவ்னிங் புரொபஸர்...''

''குட் ஈவ்னிங் மிஸ்டர் 'ஏ'!''

'' 'ஆயுதத்தின்' தயாரிப்பு வேலை எந்தக் கட்டத்தில் இருக்கிறது? 'அதை'ப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு விரைவில் கிட்டும் என நினைக்கிறேன்.''


''அப்படியா? ஆயுதத்தை இப்போதுதான் டாமில் பொருத்தினேன். இன்றைய இறுதிக் கட்டப் பரிசோதனை வெற்றி அளித்தால், உங்களுக்குத் தேவையான 'ஆயுதத்தை' உங்களிடமே ஒப்படைத்து விடுகிறேன்.''

''ஓ.கே! பரிசோதனையை ஆரம்பிக்கலாமா? டாம் எங்கே? டாம்!... டாம்...!!''

மிஸ்டர் 'ஏ' என்று புரொபஸரால் அழைக்கப்பட்ட அந்த மனிதனின் குரல் கேட்டதும் ஓடிவந்து நின்று வாலாட்டியது டாம் என்ற அந்த உயர் இன நாய்.

''இதன் வாயில் அந்த ஆயுதத்தைப் பொருத்தி இருக்கிறேன். மேற்புற வேட்டைப் பற்களை அகற்றிவிட்டு அவற்றுக்குப் பதிலாக அந்த 'ஆயுதம்' பொருத்தப்பட்டிருக்கிறது. அதையும் பல்லின் வடிவத்திலேயே வடிவமைத்துள்ளதால் எவராலும் அடையாளம் கண்டு கொள்ள இயலாது.''

''விஷம் காட்டிக் கொடுத்து விடாதே?''



சந்தேகத்துடன் கேட்டான் மிஸ்டர் 'ஏ'.

புரொபஸரின் புருவங்கள் மேலெழுந்து தாழ்ந்தன. எத்தனை தடவைகள் எடுத்துக் கூறியிருந்தும் மறுபடியும் மறுபடியும் தனது ஆயுதத்தின் மீது நம்பிக்கையில்லாமல் இருக்கும் 'மிஸ்டர் ஏ'யின் மீது எரிச்சல் வந்தது அவருக்கு.

''மிஸ்டர் 'ஏ'! டாம் யாரையாவது கடித்தால், கடிபட்டவரது உடலில் உடனடியாகக் கொடியவிஷம் பாயும். ஆனால், அந்தவிஷம் ஒருவகைத் திரவத்துடன் கலக்கப்பட்டே ஆயுதத்தினுள் சேமிக்கப்பட்டுள்ளது.

''எனவே, உடலில் விஷம் பாய்ந்ததும் அது உடனடியாகச் செயற்படாது. விஷம் செயற்படுவதற்கு ஏறத்தாழ நான்கு மணி நேரமாவது ஆகும்.''

புரொபஸரின் பேச்சை இடைவெட்டினான் அவன்.

''அதெல்லாம் சரிதான்! நான் கேட்பது என்னவென்றால், கொலை செய்யப்பட்டவரின் உடலில் தங்கியிருக்கும் விஷம், அது கொலை என்பதைக் காட்டி விடாதா?''

''நோ! சாத்தியமே இல்லை. விஷத்துடன் கலக்கப்பட்டிருக்கும் திரவம் சிலமணி நேரத்துக்கு மட்டுமே செயலிழந்து இருக்கும். பின்னர் அது சில இரசாயன மாற்றங்களுக்கு உள்ளாகி விஷ மருந்தைப் படிப்படியாக இல்லாமல் செய்து விடும். எந்தவிதமான பரிசோதனைகளும் மரணம் விஷத்தினால் தான் ஏற்பட்டது என்பதைக் காட்டிக் கொடுக்காது!''

''இப்போதுதான் என்னுடைய சந்தேகத்துக்குத் தீர்வு கிடைத்திருக்கிறது!'' 'மிஸ்டர் ஏ'யின் முகத்தில் பெருமகிழ்ச்சி.

புரொபஸர் மெதுவாக டாமை நெருங்கினார். அதனது தலையை மெல்லத் தடவிக் கொடுத்தார்.

இரண்டு 'ஸ்ப்ரேயர்கள்' அவர் கையில் இருந்தன. அவற்றில் ஒன்றைத் தன்மீதும், 'மிஸ்டர் ஏ'யின் மீதும் 'ஸ்ப்ரே' பண்ணிக் கொண்டார்.

மற்றைய 'ஸ்ப்ரேயரி'லிருந்த திரவத்தை ஆய்வு கூடத்தின் ஒரு மூலையிலிருந்த பிளாஸ்டிக் மனித பொம்மையின் மீது 'ஸ்ப்ரே' செய்தார்.

அந்த இரண்டு திரவங்களின் மணங்களும் காற்றில் கலக்க ஆரம்பித்தன. டாமின் உடலிலும் படிப்படியான மாற்றங்கள் தென்பட்டன. அமைதியாகப்படுத்திருந்த அதன் உடல் திடீரென்று சிலிர்த்துக் கொண்டது.

''உர்...ர்...'' ரென்று ஆரம்பித்த அதனது உறுமல், மற்றவர்களை மிரளவைக்கும் வண்ணம் அதிகரித்தது.

கண்ணிமைக்கும் பொழுதில் அந்த மனித பொம்மையின் மீது பாய்ந்த டாம், அதன் உடலில் தன்பற்களைப் பதித்தது. அவ்வளவுதான். அதன் அத்தனை கோபமும் அடங்கிச் சாதுவாகி விட்டது.

புரொபஸர் சாமுவேல் வெற்றிப் புன்னகை செய்தார்.

''ஓ.கே! மிஸ்டர் 'ஏ' பரிசோதனை வெற்றிகரமாக முடிந்து விட்டது. 'ஸ்ப்ரே'யின் மணத்தினால் தூண்டப்பட்ட டாம், ஒரேயொரு முறை தனது பற்களைப் பதித்ததும் சாதுவாகி விட்டது. இதேபோல நீ குறிவைக்கும் மனிதனையும் ஒரேயொரு முறையே தன் பற்களால் தீண்டும். அடுத்து உடனடியாகவே சாதுவாகிவிடும்.

''அவனது உடலில் பரவும் விஷம், சில மணிநேரத்தின் பின் உயிரைக் குடித்துவிடும். நாய் கடித்ததால் எப்படி மரணம் ஏற்பட்டது என்று எல்லோரும் குழம்பிப் போவார்களே தவிர, காரணத்தை எவராலும் கண்டு பிடிக்க முடியாது!''

''தாங்க்யூ புரொபஸர் சாமுவேல். நான் டாமை என்னோடு அழைத்துச் செல்கிறேன். இந்தாருங்கள் உங்களிடம் பேசிய தொகை. வேலை முடிந்ததும் இன்னும் சன்மானம் வந்து சேரும் உங்களுக்கு!'' விடை பெற்றான். 'மிஸ்டர் ஏ' என்ற அந்த மனிதன்.

''எச்சரிக்கை! இந்த இரண்டு 'ஸ்ப்ரேயர்களை'யும் கவனமாகப் பாவிக்க வேண்டும். மாறி உபயோகித்தால் டாம் உன் மீது பாய்ந்து விடும். நான் அவற்றை வித்தியாசப் படுத்துவதற்காக 'லேபிள்'களை ஒட்டியிருக்கிறேன்.''

''ஓ.கே. புரொபஸர். நான் பார்த்துக் கொள்கிறேன்.'' டாமையும் அழைத்துக் கொண்டு வெளியேறிப் போனான் அவன்.

* * *

நீண்ட கால வரலாற்றைக் கொண்ட அந்தப் பிரம்மாண்டமான அரண்மனையைச் சோகம் சூழ்ந்திருந்தது.

இங்கிலாந்தின் பிரபுக்கள் வழிவந்த எட்மண்ட் ஹெயார்ஸ் பிரபுவின் அரண்மனை அது. அவரது தம்பி எலியட் ஹெயார்ஸ் பிரபு, முதல் நாள் இரவு படுக்கையிலேயே மரணத்தைத் தழுவியிருந்தார்.

அவரது இடதுகாலில், முழங்காலுக்குச் சற்றுக்கீழே காணப்பட்ட இரண்டு பல் அடையாளங்கள் ஏதோ ஒரு ஜந்தினால் அவர் கடியுண்டு இறந்துபோயிருக்கலாம் என்ற ஊகத்தை ஏற்படுத்தியிருந்தன.

அந்த இரண்டு திரவங்களின் மணங்களும் காற்றில் கலக்க ஆரம்பித்தன. டாமின் உடலிலும் படிப்படியான மாற்றங்கள் தென்பட்டன. அமைதியாகப்படுத்திருந்த அதன் உடல் திடீரென்று சிலிர்த்துக் கொண்டது.

''உர்...ர்...'' ரென்று ஆரம்பித்த அதனது உறுமல், மற்றவர்களை மிரளவைக்கும் வண்ணம் அதிகரித்தது.

மருத்துவப் பரிசோதனைகளின் முடிவில் மரணத்துக்கான சரியான காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை. உடலில் விஷம் பரவி இறந்திருக்கக்கூடிய சாத்தியமே தென்படவில்லை. இரத்தப் பெருக்கும் ஏற்படவில்லை.

நிறைபோதையிலிருந்த எலியட் பிரபு, ஏதோ ஜந்தினால் கடியுண்டபோது பயத்தினால் இதயத்தின் இயக்கம் பாதிப்புற்று மாரடைப்பால் மரணமானதாக மருத்துவர்கள் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தனர்.

கனத்த மௌனத்தினிடையே எலியட்டின் உடல் அடக்கத்துக்காக மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அந்த இறுதி ஊர்வலத்தில் கலங்கிய கண்களுடன் சென்று கொண்டிருந்த எட்மண்ட் பிரபுவை அவரது விசுவாசமிக்க நாயான டாம் தொடர்ந்து சென்று கொண்டிருந்தது.

* * *

''டக்... டக்...'' கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. ஏதோ ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த புரொபஸர் சாமுவேல் கதவைத் திறந்தார்.

''வணக்கம் புரொபஸர்!''

''வாருங்கள் எட்மண்ட் ஹெயார்ஸ் பிரபு. என்னைத் தேடி இவ்வளவு தூரம் வந்திருக்கிறீர்களே?...'' பிரபுவின் முகத்தில் மெல்லிய புன்னகை இழையோடியது.

''என் உயிரையும் காப்பாற்றி, என்னைக் கொல்லச் சதிசெய்த என் தம்பிக்கும் தண்டனை கொடுத்த உங்களுக்கு நன்றி கூறிப்போகவே வந்தேன்.''

''நான் எதையும் பெரிதாகச் சாதிக்கவில்லை. விஷ ஆயுதத்தைத் தயாரித்துத் தருமாறு கூறி உங்களது தம்பி என்னை அணுகியபோதே அவர் உங்களைக் கொல்லத்தான் சதி செய்கிறார் என்பதை உணர்ந்து கொண்டேன்.

''அதனாலேயே உடனடியாக உங்களுக்கு அறிவித்தேன். ஆனாலும் நீங்கள் அதனை நம்பவில்லை. எனவேதான் அவரது வழியிலேயே போய் வினை விதைத்தவரே அதனை அறுக்கும்படி செய்து விட்டேன்.''

''என்னைக் கடிக்க வேண்டிய டாம், எப்படி எலியட்டைக் கடித்தது?'' விடுவிக்கப்படாத அந்தப் புதிருக்கான காரணத்தை புரொபஸரிடமே கேட்டார் பிரபு.

''நான் 'ஸ்ப்ரேயர்களில்' 'லேபிளை' மாற்றி ஒட்டிவைத்து விட்டேன். எனவே எலியட் தனது உடையிலேயே டாமை வெறி கொள்ள வைக்கக்கூடிய 'ஸ்ப்ரே'யைத் தெளித்துக் கொண்டார். மதுபோதையிலிருந்த அவரால் டாமிடம் கடிவாங்கிய பின்னரும் சுதாரித்துக் கொள்ள இயலவில்லை. இத்தனைக்கும் இந்த விஷத்தை முறிக்கக்கூடிய மருந்தைக்கூட அவரிடம் கொடுத்திருந்தேன்.''

இப்போது எட்மண்ட் ஹெயார்ஸ் பிரபுவின் முகத்தில் தெளிவுபிறந்திருந்தது. தான் அளவுகடந்த பாசமும் நம்பிக்கையும் வைத்திருந்த தன் தம்பியே தனக்குக் குழி பறிக்க நினைத்ததும், அந்தக் குழியிலேயே அவன் வீழ்ந்து மாண்டு போனதும் அவரது மனதைப் பெரிதும் பாதித்திருந்தன.

''கடவுளே...'' என்று அவரது உதடுகள் முணுமுணுத்தன. ''நான் புறப்படுகிறேன் புரொபஸர். டாம் வெளியே நிற்கிறான். அவனது பல்லை மாற்றிவிட்டு அனுப்பிவிடுங்கள்!'' பிரபு வெளியேறிப் போனார்.

''டாம்...''

புரொபஸரின் குரல் கேட்டுப் பாய்ந்து வந்தது டாம். அதன் தலையை மெல்லத் தடவிக் கொடுத்தார் அவர். வாயில் கொழுவி 'கிளிப்' செய்யப்பட்டிருந்த விஷத்தைப் பாய்ச்சக் கூடிய அந்தப் பல் ஆயுதத்தைக் கழற்றி எடுத்துவிட்டு அந்த இடத்தில் சாதாரண பிளாஸ்டிக் பற்களைப் பொருத்தினார்.

''ஓ.கே. மை போய்! உன் எஜமானரிடம் ஓடு!''

உத்தரவு கிடைத்ததும் உற்சாகமாகப் பாய்ந்து ஓடியது டாம்!

# புத்தளத்தில் வயல்கள், தோட்டங்களை அழிக்கும் காட்டு யானைகள்

புத்தளம் பகுதியில் தற்போது நிலவும் கடுமையான கோடை வரட்சி காரணமாக தென்னந் தோட்டங்களுக்குள்ளும், வயல் நிலங்களுக்குள்ளும் காட்டு யானைகள் உட்புகுந்து பலத்த சேதம் ஏற்படுத்தி வருவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

புத்தளம் பகுதியிலுள்ள சிறாம்பியடி, செல்லங் கண்டல், தப்போல, கருவலகங்வெவ போன்ற பகுதிகளிலுள்ள தென்னந் தோட்டங்களுக்கும், வயல் நிலங்களுக்கும் இரவு வேளைகளில் தண்ணீர் மற்றும் உணவு தேடி இந்த காட்டு யானைகள் வருகின்றன.

இவை இளம் தென்னம் பிள்ளைகளை வேரோடு பிடுங்கி எடுத்து உட்கொள்கின்றன என்றும் பெரிய தென்னை மரங்களை வீழ்த்தி அதிலுள்ள குரும்பைகள் மற்றும் ஓலைகளை உட்கொள்கின்றன என்றும் விவசாயிகள் கூறுகின்றனர்.

சமீப நாட்களில் காட்டு யானைகளின் தொல்லை வெகுவாக அதிகரித்துள்ளதாகவும் கூட்டம் கூட்டமாகவும் தனியாகவும் தண்ணீர் தேடி வரும் காட்டு யானைகள் தோட்டங்களிலுள்ள அனைத்து பயன்தரும் மரங்களையும் நாசம் செய்கின்றன என்றும் விவசாயிகள் கூறுகின்றனர்.

வன பரிபாலனத் துறை அதிகாரிகள் யானைகளை விரட்ட நடவடிக்கை எடுத்தும் மீண்டும் மீண்டும் அவை தோட்டப் பகுதிகளுக்கே வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்த யானைகளின் அழிவு நடவடிக்கைகளினால் விவசாயிகளுக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. யானைகளைக் கட்டுப்படுத்தும்படி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

—ஏ.எஸ்.புல்கி

# சமுர்த்தித் திட்டத்தின் கீழ் சுய தொழில் முயற்சிகள்

புத்தளம் மாவட்டத்தில் சமுர்த்தித் திட்டத்தின் கீழ் இவ்வருடம் கடற்றொழில் மீன்பிடி, மற்றும் கால் நடை வளர்ப்பு, மற்றும் சுய தொழில் முயற்சிகளுக்காக சமுர்த்தி அதிகார சபையினால் 9 இலட்சத்து 44 ஆயிரத்து 750 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆனமடுவ, பள்ளம், நாத்தாண்டிய, வென்னப்புவ, முந் தல் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலேயே இத்திட்டம் முதற் கட்டமாக நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றது.

ஆடு வளர்ப்பு, கோழி வளர்த்தல், கருவாடு பொதி செய்தல் முதலிய சுய தொழில் முயற்சிகளுக்காகத் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்திக் குடும்பங்கள் இதில் ஈடுபடுத்தப்படும் என சமுர்த்தி முகாமையாளர் எஸ்.ஆர்.எம். முஹ்சி 'சுடர் ஒளி'க்குத் தெரிவித்தார்.

# நூல் நிலைய கட்டடம் திறந்து வைப்பு

நிக்கவெரட்டிய தேர்தல் தொகுதியிலுள்ள வில்பொத்த வெவ முஸ்லிம் கிராமத்திலுள்ள அரசினர் முஸ்லிம் வித்தியாலயத்தில் சுமார் 34 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய நூல் நிலையக் கட்டடம் அண்மையில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் வடமேல் மாகாண முதலமைச்சர் எஸ்.பீ.நாவின்ன பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சோமாகுமாரி தென்னக்கூன், மாகாண அமைச்சர் எம்.எச்.எம்.நவவி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 4 லட்சம் பேருக்கு மேல் வாக்களிப்பதற்கு தகுதி

அக்டோபர் 18ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ள சர்வஜன வாக்கெடுப்பில் புத்தளம் மாவட்டத்திலுள்ள ஐந்து தேர்தல் தொகுதிகளிலும் 4 இலட்சத்து 26 ஆயிரத்து 193 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

கடந்த பொதுத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்களைவிட இம்முறை 17 ஆயிரத்து 635 பேர் புதிதாகத் தகுதி பெற்றுள்ளனர்.

இதன் பிரகாரம் புத்தளம் தொகுதியில் 84,866 வாக்காளர்களும், ஆனமடுவ தொகுதியில் 87,938 வாக்காளர்களும், நாத்தாண்டிய தொகுதியில் 72,155 வாக்காளர்களும், வென்னப்புவ தொகுதியில் 88,184 வாக்காளர்களும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர் என்று மாவட்ட தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# அமிலமும் உணவும் நெஞ்சுக் குழாய் களத்தில் இறங்கி 'இனப்பிரச்சினை!'

கே: 17 வயது நிரம்பிய எனது (பெண்) உயரம் 140 செ.மீ. எனக்கு கடுமையான கை, கால் கசிவு காணப்படுகிறது. நான் Accounts செய்யும்போது இந்தக் கசிவினால் கடதாசியில் ஊத்தை படிந்துவிடுகிறது. பலர் பலவாறாக என்னைப் பயமுறுத்துகிறார்கள். எனக்கு கணைச்சூடு இருக்கிறதாம். இந்தக் கணைச்சூடு, நான் உண்ணும் உணவை உறிஞ்சி இழுப்பதால்தான் எனக்கு கை, கால் கசிவு இருக்கிறதாம். அதனால்தான் நான் கட்டையாகவும் இருக்கிறேனாம். இப்படி எல்லாம் சொல்கிறார்கள். இந்த நோயினால் நான் மிகவும் கஷ்டமும் மனவேதனையும் அடைகிறேன். உங்களுடைய விரைவான விளக்கமான பதிலை ஆவலுடன் எதிர் பார்க்கிறேன். 'வைத்தியரை அணுகி அவரின் ஆலோசனைப்படி நடந்து கொள்ளுங்கள்' என்று மட்டும் சொல்லிவிட வேண்டாம்.

ப: உங்களது உள்ளங்கை, பாதம் என்பவற்றில் ஏற்படும் அதிகமான கசிவை 'Hyper Hydrosis' என்று சொல்லுவார்கள். இது கணைச்சூட்டினால் ஏற்படுவது அல்ல. உடலிலிருக்கும் பரிவு நரம்புத் தொகுதி (Sympathatic nervous system) அதிகமாகத் தூண்டப்படுவதால் ஏற்படுகிறது. இது ஒரு ஆபத்தான நோய் அல்ல. இதனைக் கட்டுப்படுத்த முடியும். ஒருவகை அலுமினிய உப்புக் கொண்ட திரவத்தை உதாரணமாக 'Dryclor solution' எனப்படும் திரவத்தை நாளொன்றுக்கு இரண்டு தடவைகள் உள்ளங்கையிலும் உள்ளங்காலிலும் ஒரு கிழமைக்கு தடவிவர வேண்டும். அப்படி செய்துவந்தால் ஒரு மாதகாலத்திற்கு கசிவு கட்டுப்பட்டிருக்கும். மீண்டும் கசிவு ஏற்படும்போது மீண்டும் இந்தத் திரவத்தைப் பாவிக்க வேண்டும்.

உடலில் தைரோயிட் ஓமோன் சுரப்பதன் அளவு கூடினாலும் இந்த அறிகுறிகள் ஏற்படக்கூடும். எனவே நீங்கள் ஒரு வைத்தியரிடம் சென்று உடலில் தைரோயிட் ஓமோனின் அளவு சாதாரணமாக இருக்கிறதா என்பதை முதலில் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். வைத்தியரின் நேரடியான கண்காணிப்பு இல்லாமல் எந்த மருந்தையும் பாவிப்பது ஒரு தவறான செயலாகும். எனவே நீங்கள் மேற் குறிப்பிட்ட மருந்தைப் பாவிப்பதானாலும் உங்களை சோதித்துப் பார்க்கும் ஒரு வைத்தியரின் அனுமதி பெற்றே பாவிக்க வேண்டும். நீங்கள் உற்சாகத்துடனும் போதிய உடல் நிறையுடனும் சுகதேகியாக இருந்தால் உங்கள் உயரத்தைப் பற்றி கவலைப்பட வேண்டிய அவசியமில்லை.

இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் சி.சிவன்சுதன்: நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:—
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
36/2, பிரெட்றிகா வீதி,
கொழும்பு — 06.

## நெஞ்சு எரிவுக்கு நிவாரணமாக உணவுக் கட்டுப்பாட்டைப் பேணுங்கள்

கே: எனது வயது இப்போது 21. நான் சிறுமியாக 7 அல்லது 8 வயதாக இருந்தபோது எனது உறவினன் ஒருவனால் மூன்று நான்கு தடவைகள் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டேன். ஆனால் எனது பெற்றோரிடம் நான் அந்த விடயத்தைக் கூறமுடியவில்லை. கூறாததால் அதற்குரிய சிகிச்சையை நான் பெறவில்லை. இது எனது மனதில் பெரிய பாரமாக இருக்கிறது. இக்காரியத்தால் எனது பிற்கால வாழ்க்கையில் (திருமணத்தின் பின்) ஏதாவது பாதிப்பு ஏற்படுமா? நிச்சயம் இதற்கு சிகிச்சை அளிக்கப்பட வேண்டுமா? இந்த பாதிப்புற்றவளுக்கு பதில் தருவீர்களா?

ப: அன்னியராலும் இராணுவத்தாலும் மட்டுமல்ல எம்மவராலும் எமது பெண்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது மிகவும் வேதனையான விடயம். உங்களுக்கு இந்த அநீதி பல வருடங்களுக்கு முன் நிகழ்ந்துள்ளது. அதற்கு தற்பொழுது எந்த சிகிச்சையும் தேவையில்லை. நீங்கள் அப்படி ஒரு சம்பவம் நடந்ததை மறந்து விடுங்கள். திருமணத்திற்குப் பின் அதனால் ஏதாவது பாதிப்புகள் ஏற்படுமோ என்று நீங்கள் பயப்பட வேண்டிய அவசியமில்லை.

**சிறுமியாக இருக்கும்போது பாலியல் வல்லுறவுக்கு உள்ளானவரின் எதிர்கால மணவாழ்க்கை பாதிக்கப்படுமா?**

கே: எனக்கு 46 வயது (பெண்) கடந்த 4 வருடங்களாக நான் நெஞ்சு எரிவினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன். சாப்பாட்டிற்குப் பின் நெஞ்சு எரிவு அதிகமாகிறது. இரவிலும் சிலசமயம் அதிகாலையிலும் நெஞ்சு எரிவு கடுமையாக இருக்கிறது. சிலசமயம் ஏவறை போகும்போது வாயிற்குள் புளித்துக்கொண்டு வருகிறது. வயிற்றுநோ எதுவும் இல்லை. பலதடவைகள் மருந்து பாவித்தும் பூரண சுகம் கிடைக்கவில்லை. இது இருதயத்தில் ஏற்பட்டுள்ள நோயின் அறிகுறியாக இருக்குமோ? இரண்டு தடவைகள் ECG சோதனை செய்து பார்க்கப்பட்டது. அவற்றில் எது வித மாறுபாடுகளும் காணப்படவில்லை என வைத்தியர்கள் தெரிவித்தனர். தயவு செய்து இந்தக் கஷ்டத்திலிருந்து மீழுவதற்கு எனக்கு வழிகாட்டுவீர்களா?

ப: நீங்கள் பயப்பட வேண்டிய அவசியமில்லை. உங்களுக்கு இருப்பது இருதய நோய் அல்ல. இரைப்பையிலுள்ள உணவும் அமிலமும் களம் எனப்படுகின்ற நெஞ்சுக் குழாயினுள் மீண்டும் வருவதனாலேயே உங்களுடைய இந்த நோய் ஏற்படுகிறது. இதை GORD (Gastro-Oesophageal Reflux Disease) என்று சொல்லுவார்கள். இந்த நோய் பலருக்குக் காணப்படுகின்றது. இது ஒரு பாரதூரமான நோய் அல்ல. மருந்துகள் இல்லாமலேயே பின்வரும் நடைமுறைகளைப் பாவித்து இந்த நோயைக் கட்டுப்படுத்த முடியும்.

எண்ணெய் அல்லது கொழுப்புக் கூடிய உணவு வகைகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இரவு படுப்பதற்கு 2—3 மணி நேரத்திற்கு முன்பு உணவைச் சாப்பிட்டு விட வேண்டும். ஒரே தடவையில் அதிக உணவு உண்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். நீங்கள் படுக்கும் கட்டிலின் தலைப்பக்கத்தை 6 அங்குலத்தினால் உயர்த்திவிட வேண்டும். வலது பக்கம் திரும்பிப் படுப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். கோப்பி, கள், சோடா, புளிப்பான உணவு வகைகள் உண்பதைத் தவிர்க்க வேண்டும். புகைத்தல், குடிவகைகள் பாவிக்கும் பழக்கம் உள்ளவர்கள் அதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். உங்களுடைய உடற்பருமன் அதிகமாக இருந்தால் உடல் நிறையைக் குறைத்துக் கொள்ள வேண்டும். இந்த நடைமுறைகள் மூலம் உங்களுடைய நோய் பூரணமாகக் கட்டுப்படுத்தப்படாவிட்டால் இதற்கு மேலதிகமாகச் சில மருந்துகள் பாவிக்க வேண்டி ஏற்படலாம். எனவே அவ்வாறான சந்தர்ப்பங்களில் நேரடியாக வைத்தியரைச் சந்தித்து சிகிச்சை பெறவேண்டும்.

**வயது வந்தோருக்கு கூகைக்கட்டு வந்தால் ஆபத்து அதிகம்**

கே: கூகைக் கட்டு (Mumps) வந்த நோயாளியை எவ்வளவு காலத்திற்கு தனிமைப்படுத்தி வைக்க வேண்டும். இந்த நோயினால் மலட்டுத்தன்மை ஏற்படுமா?

ப: கன்னப்பகுதி வீங்குவதற்கு 7 நாட்களுக்கு முன்பு இருந்து இந்த வீக்கம் ஏற்பட்டு 9 நாட்கள் வரையான காலப்பகுதியில் இந்த நோயானது நோயாளியிலிருந்து மற்றவர்களுக்குப் பரவலாம். எனவே இந்தக் காலப்பகுதியில் நோயாளியைத் தனிமைப்படுத்துவது நல்லது. ஆனால் அவருக்கு நோய் கண்டறியப்பட முன்பே அவரிலிருந்து மற்றவர்களுக்கு இந்த நோய் தொற்றியிருக்கக் கூடும். ஒருவருக்கு நோய் தொற்றி 12 தொடக்கம் 25 நாட்களுக்கிடையில் நோய் அறிகுறி தென்படும்.

வளர்ந்தவர்களுக்கு இந்த நோய் ஏற்பட்டால் சிலசமயம் விதையோ (ஆண்களில்) சூலகமோ (பெண்களில்) பாதிக்கப்படலாம். பொதுவாக இது ஒரு விதையை அல்லது ஒரு சூலகத்தையே பாதிக்கின்றது. இதனால் மலட்டுத்தன்மை ஏற்படும் சந்தர்ப்பம் மிகவும் குறைவு. இந்த நோயைத் தடுப்பதற்கு இப்பொழுது தடுப்பூசிகள் இருக்கின்றன. இந்தத் தடுப்பூசியை சிறுவர்களுக்கு போட்டுக் கொள்வது நல்லது.

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 11.00-11.30 | | | | | | குட்டிச் சுட்டி | காலைக்கதிர் குட்டிச் சுட்டி |
| 11.30-12.00 | | | | | | | |
| 12.00-12.30 | | | | | | சின்னச்சின்ன ஆசைகள் | |
| 12.30-13.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | | |
| 13.00-13.15 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கென்ட் மெட்னி | சக்தி வீக்கென்ட் மெட்னி |
| 13.15-13.30 | | | | | | | |
| 13.30-14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | ரிலாக்ஸ் டைம் | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00-14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30-15.00 | | | | | | | |
| 15.30-16.00 | | | | | | இளையகானம் | ரிலாக்ஸ் |
| 16.00-16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | டைம் |
| 16.30-17.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | செம்பருத்தி | சனிதபதனி |
| 17.00-17.30 | தமிழ் கார்ட்டூன் | தில்லானா | தமிழ கார்ட்டூன் தில்லானா | மலரும் | தமிழ் கார்ட்டூன் மொட்டு | பூஞ்சோலை | புஷ்பாஞ்சலி |
| 17.30-18.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | இயந்திரப் பறவை | சின்னத்திரை |
| 18.00-18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | பெப்ஸி உங்கள் சாய்ஸ் | தந்திர பூமி | ஆலோசனை நேரம் | இப்படிக்கு நீங்கள் |
| 18.30-19.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | சாட் ஷோ | ஆனந்தபவன் |
| 19.00-19.30 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | செம்பருத்தி | சப்தஸ்வரம் |
| 19.30-20.00 | சின்னத்திரை | சனிதபதனி | புஷ்பாஞ்சலி | சீமான்களே சீமாட்டிகளே | இப்படிக்கு தென்றல் | இளையகானம் | பஞ்சவர்ணம் |
| 20.00-20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30-21.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | இயந்திரப்பறவை | ஜன்னல் |



# சிண்டு முடிய வேண்டாம் சிணுங்குகிறார் ஜோதிகா

எந்த நடிகையினாலும் நினைத்துப் பார்க்க முடியாத ஒரு இடம் ஜோதிகாவிற்குக் கிடைத்திருக்கிறது.

அவரது சகோதரிகள் நக்மா, ரோஷினி அடைய முடியாத அசத்தலான நம்பர் வன் நிலையை அடைந்திருக்கிறார் இந்தச் சின்னப் பெண்.

எத்தனையோ பேர் நம்பர் வன் நிலைக்காகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கையில், மாடிப் படிகளில் ஏறுவது போன்று கடகடவென ஏறி முதல் தர நிலைக்கு வந்திருக்கிறார்.

இதற்கென விஷேடமாக எந்தவிதக் கவனமும் எடுத்துக் கொள்ளாமல் சாப்பாட்டைக் குறைத்து டயட் இருந்து இப்படி எந்த வித சிரமமும் எடுத்துக் கொள்ளாது இயல்பாக இருந்தவாறே முன்னுக்கு வந்தது எப்படி?

அவரே சொல்லக் கேட்போமா?

''நினைத்துப் பார்த்தால் பிரமிப்பாகத் தான் இருக்கிறது. ஆனாலும் நினைக்காத ஒரு இடத்தில் இப்போது இருந்து கொண்டிருக்கிறேன்.''

கே: படங்களைத் தெரிவு செய்வதில்என்ன கொள்கை வைத்திருக்கிறீர்கள்?

ப: படத்தில் என் கரெக்டர் எப்படி என்று பார்க்கிறேன். அவ்வளவே.

கே: சினிமாவைப் பொறுத்தவரை 'கிளாமர் யுகம்' என்று சொல்லும் கால கட்டம் இது. 'கிளாமரே' இல்லாத நீங்கள் நம்பர் வன் நிலையிலிருப்பது நம்ப முடியாமலிருக்கின்றது.

ப: நீங்கள் சொல்கின்ற கிளாமர் ஆரம்ப ஸ்டேஜில் வேண்டுமானால் ஹெல்ப் செய்யலாம். ஆனால் நிலைத்து நிற்க வேண்டுமென்றால் நடித்தே ஆக வேண்டும்.

கே: உங்களுக்கும் சிம்ரனுக்கும் தகராறு என்று செய்திகள் வந்ததே. அதைப் பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

ப: இந்தச் சிண்டு முடியும் வேலை வேண்டாம் ஸார். ஒரே தன்மையான தொழிலில் ஈடுபட்டுள்ள இரு வருக்குமிடையில் போட்டி ஏற்படுவது சகஜம்தான்.

இதில் பொறாமை நுழைந்தால்தான் சங்கடம். என்னைப் பொறுத்தவரைக்கும் சிம்ரன் நல்ல நடிகை.

அவரும் நானும் இணைந்து '12பி' படத்தில் நடித்து வருகிறோம்.

கே: பொதுவாக உங்கள் படங்களில் ஒரே மாதிரியான நடிப்பு சேஷ்டைகள் அமைந்து விடுகிறது என்ற கருத்து உண்டு. அதைப்பற்றி....!

ப: முன்பை விட இப்போது நிறைய தெரிந்து கொண்டுள்ளேன். அதனால் நடிப்பிலும் திறமையைக் காட்டுவேன்.

கே: உங்களுக்குக் கிடைத்த பாராட்டுகளில் மறக்க முடியாதது?

ப: டைரக்டர் பிரியதர்ஷன் ஸாரின் பாராட்டு. அவர் பத்திரிகைப் பேட்டியொன்றில் நான் பார்த்து வியந்தது மூன்றே மூன்று நடிகைகள். தபு, ஹோலிவுட் நடிகை கோல் டிஹான், ஜோதிகா என்று கூறி அந்த லிஸ்டில் என்னையும் சேர்த்துக் கொண்டது.

கே: உங்கள் காதலரைப் பற்றி....!

ப: பர்சனல் மேட்டர் வேண்டாமே ப்ளீஸ்.

கே: சரி உங்களிடம் உங்களுக்குப் பிடித்தது! பிடிக்காதது பட்டியல் போடுங்கள் பார்ப்போம்!

ப: பிடித்தது:— எதையும் ஈஸியாக எடுத்துக் கொள்வது. உறுதியான மனப்பான்மை.

பிடிக்காதது:— எனது சோம்பேறித்தனம். விரைவாகக் கோபப்படுவது.

கே: மூத்த அக்கா நக்மா மீண்டும் நடிக்க வந்திருக்கிறாரே! மற்ற அக்கா ரோஷினி மீண்டும் நடிக்க மாட்டாரா?

ப: அக்கா நக்மா நடிக்க வந்திருப்பது மகிழ்ச்சிதான். 'தீனா'வில் ஒரு பாடலுக்கு ஆடியவருக்கு 'சிட்டிசன்'இல் வெயிட்டான ரோல் கிடைத்திருக்கிறது. மற்ற அக்கா ரோஷினி நடித்த கன்னடப் பட மொன்று தமிழிற்கு வருகிறது. அதன் மூலம் தமிழ் ரசிகர்களைச் சந்திக்க போகிறார்.

கே: இவ்வளவு விரைவில் நீங்கள் நடிகையாவதற்கு உங்கள் குடும்பப் பின்னணியும் ஒரு காரணம் என்று சொல்லலாமா?

ப: அறிமுகமாவதற்கு வேண்டுமானால் அது உதவியிருக்கலாம். ஆனால் நக்மாவின் தங்கச்சி என்று சொல்லி அதிக காலத்தை ஓட்ட முடியாது. எனக்கென்று ஓர் அடையாளம் 'வாலி'யிலேயே கிடைத்து விட்டது.



கே: சினிமா என்றால் தாழ்வாகப் பார்க்கும் ஒரு சிலர் இன்னமும் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி உங்கள் கருத்து?

ப: யதார்த்தத்தை வேறு பிரித்தறிய முடியாத குறுகிய வட்டத்துக்குள் வாழ்பவர்கள்.

கே: நடிகையானதில் சந்தோஷப்படுகின்றீர்களா?

ப: யெஸ்.... ரியலி ஹப்பி.

நடிகையான தனால் சொந்தக் காலில் நிற்கிறேன்.

—ஷாம்

# மூன்று முடிச்சு கண்டிஷன்

எத்தனையோ படங்களில் சினிமாவுக்காகத் தாலி கட்டிக் கொண்டவர் ரோஜா. ஆனாலும் எந்த சினிமாக் கல்யாணத்திலும் மூன்றாவது முடிச்சைப் போடுவதற்கு விடமாட்டாராம்.

தனக்கு மூன்று முடிச்சு கணவர் மட்டுமே போட வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்து கொண்டிருக்கிறார்.

கதை சொல்லும் போதே படத்தில் கல்யாணக் காட்சி இருந்தால் மூன்றாவது முடிச்சுப் போடக் கூடாது என்று கூறிவிடுவாராம்.



ரோஜா — நாசர்
படம்: 'மாயன்'

# வருகிறார் வள்ளல் கிளாமர் கொதிப்பு



விஜயகாந்த் அடிக்கடி பத்திரிகையாளர்களைச் சந்தித்து உரையாடுவார். இச்சந்திப்புகளின் போது தனது பி.ஆர்.ஓ கிளாமர் கிருஷ்ண மூர்த்தியையும் வரச் சொல்வார்.

நல்ல விஷயம்தான்! ஆனால் இப்போது கிளாமர் கிருஷ்ணமூர்த்திக்கு இச்சந்திப்பிற்கு வருவதற்கு விருப்பமில்லையாம். ''திடீரென்று பத்திரிகைக்காரர்களின் பேரைச் சொல்லி அவர்களை வரச்சொல்லு என்று சொல்லி விடுகிறார். அவர்கள் வரும்போது நான் அங்கு இருக்க வேண்டும் என்று நினைக்கிறார். திருவல்லிக் கேணியிலிருந்து வட பழனிக்கு என் வாகனத்திலேயே வரவேண்டும். இதற்கென தனியாக எதுவும் கொடுப்பதில்லை. ஊருக்கு அள்ளிக் கொடுக்கும் வள்ளல் தன்னிடம் வேலை செய்யும் என்னைக் கவனிக்கிறாரில்லையே'' என்று புலம்ப ஆரம்பித்திருக்கிறார். ஊருக்கு வாரியிறைக்கும் வள்ளல் உள்ளூருக்குள் வருகிறாரா?

# மறுபக்கம்



# ஆதர்ஷ தம்பதிகளை பிரிக்க சதி! அஜித் மாமனாருக்கு எதிராக யாகம்

ஷாலினிக்கு நடிப்பு ஆசை துளிர் விட்டிருக்கிறது. அதனால் கணவர் அஜித்திற்கும் ஷாலினிக்கும் இடையே வாக்குவாதம் என பரவிய செய்திக்கு மறுப்பு தெரிவித்தார் ஷாலினி.

நமது குடும்ப நண்பி நீது மோகனின் போட்டோ ஷெசனுக்காகத்தான் திரையுலக போட்டோகிராபர்களைச் சந்தித்ததாகவும் அதனைப் பார்த்தவர்கள் இப்படிக் கதை கட்டி விட்டதாகவும் கூறினார்.

ஆனால் ஷாலினி என்னதான் தன்னிலை விளக்கமளித்தாலும் இந்த விவகாரத்தைப் பற்றிய செய்திகள் ஓய்ந்தபாடாக இல்லை.

ஷாலினியின் தந்தை ஒரு கோடி ரூபா வாங்கிக் கொண்டுதான் ஷாலினியை அஜித்திற்குத் திருமணம் செய்து வைத்தார்.

குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்களைத் தீர்ப்பதற்காக அஜித் யாகமொன்றை நடத்தப்போகிறார் என்று புதிய செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

அஜித்துக்கும் மாமனார் குடும்பத்திற்குமிடையில் உறவு அவ்வளவு சுமுகமாக இல்லை. ஷாலினியின் தந்தையோ ஷாலினியை மீண்டும் நடிக்க வைப்பதில் ஆர்வம் காட்டுகிறார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார் அஜித். அதனால் ஷாலினியை அஜித்திடமிருந்து பிரிக்கும் முயற்சியில் இருக்கிறாராம் அப்பா பாபு.

அஜித்திற்கு திருமணத்திற்குப் பின்னர் தன் மனைவி நடிப்பதில் உடன்பாடில்லை. திருமணத்திற்கு முன்னர் ஒப்பந்தமாகிய 'பிரியாத வரம் வேண்டும்' படம் பாதியில் நின்றபோது இந்தப் படத்திற்குச் செலவான மொத்தச் செலவையும் கொடுத்து விடுகிறேன். ஷாலினி நடிக்க மாட்டார்'' என்று சொல்லியவர் அஜித்.

அப்படிப்பட்டவர் ஷாலினி மீண்டும் நடிப்பதற்கு ஆட்சேபம் தெரிவித்ததில் வியப்பில்லை.

'அமர்க்களம்' மூலம் ஷாலினி — அஜித் காதல் வளர்ந்த காலகட்டத்தில் முதலில் பல கட்டுப்பாடுகளை விதித்தவரும் அப்பா பாபுதான். பின்னர் அஜித்திடமிருந்து ஒரு கோடி ரூபாவைப் பெற்றுக் கொண்டுதான் ஷாலினியை திருமணம் செய்து கொடுத்தாராம்.

இப்படிப்பட்டவருக்கு ஷாலினி மீண்டும் நடிக்க விரும்பியது பழம் நழுவிப்பாலில் விழுந்தது போலிருக்கிறது. அஜித்தின் மனதை மாற்றுவதற்காக மாந்திரீகர் ஒருவரின் துணையை நாடியுள்ளாராம்.

இந்த விஷயம் அஜித்தின் காதுகளிற்கு எட்டியதும் மாமனார் வழியிலேயே தானும் இறங்க முடிவெடுத்திருக்கிறார்.

இதற்கு அஜித்திற்கு உதவி செய்திருப்பவர் பிரபல தயாரிப்பாளர் காஜாவான தீனாம்.

மாமனார் கேரளத்துப் பக்கம் போக மருமகனோ வண்ணாரப் பேட்டைப் பக்கம் போயிருக்கிறார். எல்லோருக்கும் பொதுவான இறைவனை நம்பும் மதப் பெரியவர் ஒருவரின் ஆலோசனையைப் பெற்றிருக்கிறார் அஜித்.

அதுமட்டுமல்ல, அஜித் சென்னையிலிருக்கும் நாட்களில் மிகப்பெரிய யாகத்திற்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாம்.

இதே நேரத்தில் சமீபத்தில் படப்பிடிப்பு ஒன்றிற்காக வைசாக் போயிருந்த அஜித் தன் மனைவி ஷாலினியையும் அங்கு அழைத்துச் சென்றிருந்தார். நடித்த நேரங்கள் தவிர்ந்த மற்ற நேரங்களில் மனைவியை ஒரு குழந்தைபோல கவனித்துக் கொண்டாராம்.

இவர்களைப் பார்த்த யூனிட்டார் ஆதர்ஷ தம்பதிகள் என்று சொல்வது இவர்களைத்தானோ என்று வியந்தனராம்.

ஆனால் எது எப்படியிருப்பினும் தாம்பத்தியம் என்பது கணவன் — மனைவி சம்பந்தப்பட்ட விஷயம். இதில் மற்றவர்களின் கருத்து இரண்டாம் பட்சமே! இதனை ஷாலினியும் அஜித்தும் புரிந்து கொண்டால் குடும்பத்தில் குழப்பங்கள் வருவதற்கு இடமில்லை.

ஷாலினியின் அப்பா மகளை வைத்து (கௌரவமான முறையில்தான்) பணம் சம்பாதிப்பதில் கெட்டிக்காரர். கட்டிக் குழந்தையாக ஷாலினி சினிமாவில் நடித்த போதும் சரி குமரியாகி கதாநாயகியாக நடிக்க ஆரம்பித்த போதும் சரி அப்பா பாபுவைப் பொறுத்தவரை மகள் ஒரு அமுதசுரபி.

பெற்றோர்களாயினும் அவர்கள் சொல்வது சரியா? தவறா? என்று சீர்தூக்கிப் பார்க்கும் பொறுப்பு தம்பதிகளில் இருவருக்குமே இருக்கின்றது.



ஷாகீன்

## பூமிகாவிற்குப் போட்டி ஷாகீன்!

'ஈரநிலா' படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் ஷாகீன், 'பத்ரி' படத்தின் மூலம் தமிழ்த் திரையுலகைக் கலக்க வந்திருக்கும் பூமிகா விற்குப்போட்டியாக வருவார் என்று தமிழ்த் திரையுலகினர் ஆருடம் கூறியிருக்கின்றனர்.

சென்னை பொட்டானிக்கல் கார்டனில் 'ஈரநிலா' படத்தின் படப்பிடிப்பு நடைபெற்ற போது, படப் பிடிப்பை வேடிக்கை பார்ப்பதற்காக வந் திருந்த ரசிகர்கள் ''அடடா இந்தப் படத்தில் பூமிகாவும் நடிக்கிறாங்களா?'' என்று கேட்டனராம். இவர் பூமிகா இல்லை. புதுமுக நடிகை ஷாகீன் என்று விளக்கம் சொல்வதற்குள் போதும் போதும் என்றாகி விட்டதாம்.

## அகில இந்திய ரீதியில் கலக்கும் மும்தாஜ்

மும்தாஜ் 'குஷி' படத்தில் ஒரு பாடலுக்கு ஆடினாலும் ஆடினார். ஒரே படத்தின் மூலம் உச்ச புகழைப் பெற்றுவிட்டார்.

இதன் தெலுங்கு ரீமேக்கிலும் 'கட்டிப்புடிடா' பாடலுக்கு மும்தாஜே ஆடியிருக்கின்றார். இதன் மூலம் இரண்டு தெலுங்குப் படங்கள் கிடைத்திருக்கின்றன. இப்போது 'குஷி'யின் இந்தி ரீமேக்கிலும் மும்தாஜ் நடிக்கிறார்.

'மோனிஷா என் மோனாலிஷா' படமும் இந்திக்குப் போகின்றது. ஆக இப்போது அகில இந்திய ரீதியில் கலக்கும் ஒரே நடிகை மும்தாஜ் தான்.



மும்தாஜ்

## பண்ணை வீட்டில் மந்த்ரா

மந்த்ரா தனது சினிமா தொடர்பான டிஸ்கஷன்களை மகாபலி புரம் அருகேயுள்ள பண்ணை வீட்டில்தான் வைத்துக் கொள்கிறார். மந்த்ரா டி.வி மீடியாவிலிருந்து சினிமாவுக்கு வந்தவர். இப்போது திரை வாய்ப்பு இல்லாத நிலையில் வேறு துறைகளில் கால் பதிக்க முயற்சித்துள்ளார்.



மந்த்ரா

## சுவாதியின் உடும்புப் பிடி



சுவாதி

புளியங் கொம்பைப்பிடித்து விட்டதாகக் (அஜித்) கிசுகிசுக் கப்பட்டவர் சுவாதி. ஆனால் அதை மறுத்தவர் இப்போது கொடியைப் பிடித்தவாறு முன்னேற ஆரம்பித்துள்ளார்.

அந்தக் கொடி வேறு யாருமல்ல, ரமேஷ் கண்ணா தான்

'அசத்தல்' படத்தில் இருவரும் ஜோடி சேர்ந்து நடித்திருந்தார்கள். இதனால் இருவருக்கு மிடையே உருவான நட்பு பலமடைந்துள்ளதாம்.

திரையுலகில் ஒருவருடைய நட்பு இருந்தால் சுலபமாக வளரலாம். விவேக், கவுண்டமணியின் சிபாரிசின் மூலம் பல நடிகைகள் முன்னுக்கு வந்திருக்கிறார்கள்.

இந்த வழியைப்பின்பற்றி சுவாதியும் ரமேஷ்கண்ணாவை உடும்புப்பிடி பிடித்துள்ளார்.

## அசத்தும் அறிமுக நாயகன்

'12 பி' படத்தின் நாயகன் ஷியாம் முதல் படத்திலேயே ஜோதிகா — சிம்ரன் என்று முன்னணி நாயகி களுடன் கலக்கிக் கொண்டிருப்பது தெரிந்த சங்கதி. ஆனால் புதிய செய்தி என்னவென்றால் முதல்படம் வெளி வரு முன்னரே இரண்டு தமிழ்ப் படங்கள், ஒரு இந்திப்படம் என மூன்று படவாய்ப்புகள் கிடைத்திருக்கின்றன.



ஷியாம்

## அல்லி அர்ஜுனா ரிலீஸுக்கு மனோஜ் முயற்சி

'அல்லி அர்ஜுனா'வை பெரிதும் எதிர்பார்த்திருந்தார் மனோஜ். ஆனால் ஆரம்பத்தில் விறு விறுப்பாக விளம்பரப்படுத்தி படத்தை இயக்கி வந்த சரண், அல்லி அர்ஜுனாவைக் கிடப்பில் போட்டுவிட்டு 'ஏறுமுகம்'த்தின் வேலை களில் ஈடுபட்டு நாயகி தேடிக் கொண்டிருக்கிறார். இதனால் நொந்து போன மனோஜ் எப்படியாவது அல்லி அர்ஜுனாவை வெளியில் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறாராம்.



## சிம்ரன் அப்செட்! காதலர் ஆறுதல்!!

சமீபத்தில் பரபரப்பாகப் பேசப்பட்ட விவகாரங்களுள் ஒன்று சிம்ரன் அந்த மாதிரியான படத்தில் நடித் துள்ளார் என்ற செய்தி.

விஷயத்தைக் கேள்விப்பட்ட சிம்ரன் அப்செட்டாகிவிட்டாராம். கூடவே இருந்த காதலரோ ''இந்த கம்பியூட்டர் யுகத்தில் என்ன வேண்டு மானாலும் செய்ய முடியும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இப்படியிருக்கையில் நாம் ஏன் இந்த விஷயத்தைப் பெரிதுபடுத்த வேண்டும். கிசுகிசுக்கவரில் ஒன்றாக நினைத்து ஒதுக்கி விட்டு வேலையைப்பார்'' என்று ஆறுதல் கூறினாராம்.

## திரை மறைவில்

'பிஷ்' நடிகைக்கு இளைய தளபதியுடன் ஜோடி சேர வேண்டும் என்பது நெடுநாளைய விருப்பம்.

இந்த விருப்பம் 'ஷாஜஹான்' படம் மூலம் நிறைவேறப்போகிறது.

**

'அதிஷ்டக் காரன்' நாடகத்தை 'கிருஷ்ணா கிருஷ்ணா' வாங்கிய

நகைச்சுவை நடிகர் இப்போது தன் 'காதில பூ' நாடகத்தையும் படமாகத் தயாரிக்கப் போகிறாராம். (ரசிகர்கள் காதில பூ வைக்காமலிருந்தால் சரி)

**

விருது பெற்ற 'சமுத்திர மலர்கள்' படத்தில் முக்கிய கரெக்டரில் நடித்த நடிகையை 'பசை' நடிகை என்று செல்லமாக அழைக்கிறார்கள்.

பசையான ஆள் என்று தெரிந்தால் தயாரிப்பாளர்களுடன் பசை போன்று ஒட்டிக் கொள்வாராம்.

**

சின்னத் திரையில் போர்த்திக் கொண்டு நடித்து தாய்க்குலங்களின் அபிமானத்தைச் சம்பாதித்து வரும் நடிகைகளில் பெரும்பாலானோர் பெரிய திரையில் கவர்ச்சி ஆட்டம் போட்டவர்களாகவே இருக்கிறார்கள். இந்த வரிசையில் லேட்டஸ்ட்டாகச் சேர்ந்திருப்பவர் பெயரில் பாவனம் காட்டும் நடிகை. 'நண்பிகள்' தொடரில் அம்மணி இழுத்துப் போர்த்துக் கொண்டு நடித்து வருகிறார்.

**

'ஐஸ்வர்யா' படத்தில் மூன்றாவது கதாநாயகி வாய்ப்பு மோனமான கோணல் நடிகைக்குக் கிடைத்திருக்கிறது.



மோனல்

**

அபிநயம் பிடிக்கும் 'ஸ்ரீ' நடிகை சமீபத்தில் மூன்று அறுவைச் சிகிச்சைகளைச் செய்துள்ளார். இது அவரது தாய்க்குலத்தின் ஏற்பாடாம். மகளின் உடலமைப்பு எடுப்பாக இருந்தாலும் மூக்கு, உதடு போன்ற பாகங்கள் அவரது அழகைக் குறைப்பதாக நினைத்தவர் பிரபலமான 'லோ' மருத்துவ மனையில் மகளுக்கு இந்த அறுவைச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தாராம்.

முன்னழகுக்கும் ஹோர்மோன் ஊசி ஏற்றிக் கொண்டுள்ளாராம். அம்மணி கவர்ச்சிப் போட்டிக்குத் தயாராகி விட்டார். ரசிகர்கள் என்ன பாடுபடப் போகின்றார்களோ என்று விசனம் தெரிவிக்கின்றன அறிந்த தகவல் வட்டாரங்கள்.

**

மீண்டும் ரீ—என்ட்ரி செய்திருக்கும் ரம்பா என்கிட்ட மோதாதே என்ற ரீதியில் ஜோதிகாவிடம் சவால் விட்டு 'மிலிட்டரி' படத்திற்காக உடல் மெலிந்திருக்கிறார்.



ரம்பா

## சுடர் ஒளி சிறுகதை

# பயணம்

சுதாரஞ்சன்


''சீ... இதென்ன வாழ்க்கை!''

அப்பு அலுத்துக் கொண்டார். மகன் சொல்லி விட்டான், ''அப்பு இப் போதைக்கு வீட்டுப் பக்கம் போறதெண்டதை கனவிலயும் நினைக்கேலாதணை. எல்லா இடமும் கண்ணி வெடி தாட்டிருக்கிறாங்கள். போனமெண்டால் கால் இல்லாமல் போறது மட்டுமில்ல சில நேரம் உயிரும் போயிடும்'' அவன் சொன்னதைக் கேட்டு அவர் சோர்ந்துதான் போனார். போதாக்குறைக்கு ஆச்சியும் மகனுடன் சேர்ந்து கொண்டாள்.

''ஓமப்பா, போறதெல்லாம் போகட்டும். நிலைமை சரியானாப்போல வீட்டைபோவம். இப்ப போய் வீணாக் கையக் காலக் குடுத்து..... சுவர் இருந்தாத்தான் சித்திரம் வரையலாம்.''

அவரால் எதிர்வாதம் செய்ய முடிய வில்லை. தனக்குத்தானே சொல்லிக் கொண்டார்

''விசரி, எவ்வளவு சுலபமாகச் சொல்லிப் போட்டாள்



போறதெல்லாம் போகட்டுமெண்டு. இவளுக்குத் தெரியுமே ஒவ்வொரு வீடாய் நான் கட்டப்பட்ட பாடும், ஒவ்வொரு சொத்தாய் நான் சேர்க்கப்பட்ட பாடும், தோட்டம் செய்து, வயல் செய்து கொஞ்சம் கொஞ்சமாச் சேமிச்சு மூண்டு வீடுகட்டி மூண்டு பெட்டையளுக்கும் சீதனம் குடுத்து சடங்கு முடிச்சு......ம்......

இப்ப என்னடா எண்டா வீட்டுக்காரன் வந்து கக்கூசை அடிக்கடி பாவிக்காதையுங்கோ குழி நிரம்பப் போகுது. குசினியை அடிக்கடி பாவிக்காதேங்கோ கரிப்பிடிக்கப் போகுது. கண்ட இடமெல்லாம் தண்ணி ஊத்தாதேங்கோ, வெத்திலை பாக்கு சப்பித் துப்பாதேங்கோ எண்டு எவ்வளவு ஓடர் போடுறான். சீ... இது என்ன கேடுகெட்ட சீவியம் ம்.....!'' அப்பு நீண்ட பெருமூச்சு விட்டார்.

அப்புவிற்கு மட்டுவிலுக்கு எப்படியாவது போய்விட வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி நின்றது. பத்திரிகைகளில் தென் மராட்சியின் நிலைமைகளைப் புகைப் படங்களுடன் பார்த்ததில் இருந்துதான் அப்புவின் மனதில் இந்த எண்ணம் மேலோங்க ஆரம்பித்தது. மகனைக் கேட்டுப்பார்த்தார் ''தம்பி! வீட்டுச் சாமான் எல்லாம் களவு போகப் போகுது வாடா அதுக்கிடையில் வீட்டை போவம்.''

''அப்பு! உனக்கென்ன விசர் பிடிச்சிருக்கே. இப்ப இருக்கிற நிலமையில வீட்டை போவம் என்கிறாய். நான் வரயில்லை.'' மகன் அடியோடு மறுத்து விட்டான்.

''மாளிகை மாதிரி மூண்டு வீட்டைக் கட்டிப் போட்டு இப்பிடி ஒரு குச்சு வீட்டில குந்தியிருக்க வேண்டியிருக்கு எல்லாம் தலைவிதி.'' அப்புவைச் சந்திக்க வந்திருந்த நண்பர் பரமலிங்கத்திடம் அப்பு வேதனையோடு சொன்னார்.

''அதுக்கென்னடாப்பா செய்யிறது. நானும் அப்பிடித்தான் ராப்ப கல் வீட்டைக் கட்டிப் போட்டு இங்க வந்து கொட்டில் வீட்டில் இருக்கிறன்.'' பரமலிங்கத்தார் கவலையோடு சொன்னார்.

''வீட்டுச சாமான்களுமெல்லே களவு போப்போகுதடாப்பா'' மீண்டும் அப்பு வேதனையுடன் சொன்னார்.

''ஓமடாப்பா அதுக்கு நாங்கள் என்ன செய்யிறது. போறது போய் மிஞ்சிறது மிஞ்சட்டும்'' பரமலிங்கத்தாரின் பதில் அப்புவைக் கோபப்படுத்திற்று.

''விசரன் மாதிரிக்கதையாதை பரம். பயந்தால் ஒண்டும் செய்யேலாது. எதுக்கும் துணிவுவேணும். நாங்கள் பயப்பிடாமல் வீட்டை போவம்''

''நீ நிலைமை விளங்காம கதைக்கிறாய டாப்பா. இப்ப இருக்கிற நிலைமையில் வீட்டுப் பக்கம் போறதைக் கனவிலயும் நினைக்கேலாது''

''என்னடாப்பா உன்ர கதை. நீயும் மற்றவங்கள் மாதிரி பயந்து கொண்டு நிற்கிறாய். பயப்பிடுறதுக்கு ஒண்டுமில்ல. காலம வெள்ளன வெளிக்கிட்டால் வீட்டை போய்ச் சேர்ந்திடலாம் என்ன சொல்லுறாய்?''

பரமலிங்கத்துக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

''என்னடாப்பா யோசிக்கிறாய்?'' அப்பு விடாமல் கேட்டார். பரமலிங்கத்தாருக்கு ஒரு நல்ல பதிலைச் சொல்லியாக வேண்டிய கட்டாயம்.

''சரியடாப்பா அப்புத்துரை இரண்டுபேரும் நாளைக்கு காலம கருக்கலோட வெளிக்கிடுவம்.''

''சரி நான் வெளிக்கிடப்போறன். நல்லாப் பொழுது பட்டுப் போச்சு இனி இந்தக் கர வெட்டியில இருந்து கரணவாய்க்கு போக வேணுமல்லோ.''

''சரி சரி நீ போயிட்டு வாடாப்பா....! நாளைக்கு காலம கருக்கலோட வந்திடு. நான் வெளிக்கிட்டு ஆயத்தமா நிக்கிறன்'' என்று வலியுறுத்தி விடை கொடுத்தார் அப்பு. பரமலிங்கத்தார் விடைபெற்றுப் போன பின்பு அப்பு வீட்டின் நினைவுகளில் மிதந்தார்.

ஆச்சி அப்புவுக்கு பக்கத்தில் ஒரு காலை நீட்டி ஒரு காலை மடக்கி நிலத்தில் அமர்ந்திருந்தபடியே பாக்குச்சிவி பாதியாக கொழுந்து வெற்றிலை ஒன்றைக் கிழித்து அளவாகச் சுண்ணாம்பு தடவி புகையிலைத் துண்டொன்றையும் வைத்து அப்புவிடம் நீட்டுவாள்.

அவர் அதை வாங்கி வாயில் போட்டு மென்று ''விளிச்'' என்று தாழ்வாரத்தில் துப்பிவிட்டு மண்டான் சுருட்டொன்றைப் பற்றவைத்துப் புகைவிட்டுக்கொள்வார். நினைத்துப்பார்த்தவர்,

''கடவுளே இந்தச் சுகத்தை அனுபவிச்சு எத்தினை நாளாச்சு. திரும்பவும் இந்தச் சுகம் எப்பகிடைக்குமோ?'' என்று தனக்குத்தானே சொன்னபடி பெருமூச்சு விட்டார்.

இப்பிடி எத்தினை நாளைக்கு வேதனையோட காலம் தள்ளுறது. எப்ப பிரச்சினை சரிவாறது, நாங்கள் எப்ப வீட்டை போறது. பிரச்சினை முடிஞ்சு வீட்டை போகேக்க அங்க வெறும் காணிதான் மிஞ்சுமோ கண்டதார்?

அவர் பரமலிங்கத்துடன் சேர்ந்து மட்டுவிலுக்கு போகப் போவதைப் பற்றி மகனிடமோ, ஆச்சியிடமோ மூச்சும் விடவில்லை. ஆச்சியும் மகனும் ஒன்று சேர்ந்து அவரை போக விடமாட்டார்கள்.

''நாளைக்கு இந்நேரம் வீட்டில இருப்பன்'' என்று அடிக்கடி தனக்குத்தானே சொல்லிக் கொண்டார். பின்னிரவிலிருந்து பரமலிங்கத்தின் வருகையை எதிர்பார்க்கத் தொடங்கி விட்டார். சைக்கிள் சில்லுகளின் காற்றை அடிக் கடி அமத்திப் பார்த்துத் திருப்திப் பட்டுக்கொண்டார். மெல்ல மெல்ல விடிந்து சூரிய வெளிச்சம் நன்றாகப் பரவியபோதும் பரமலிங்கத்தைக் காணவில்லை. அப்புவின் நம்பிக்கை முடிச்சு மெல்ல மெல்ல இளக ஆரம்பித்தது. ''அறுவான் நம்ப வைச்சுக் கழுத்தறுத்துப் போட்டான். இவனைக் கொலை செய்தாலும் என்ரை ஆத்திரம் தீராது'' அப்பு தனக்குள்ளே கறுவிக் கொண்டார். அன்று பின்னேரமும் பரலிங்கம் வரவே யில்லை. அடுத்த நாள் பரமலிங்கம் வந்தவுடனே அப்பு மனத் துக்குள் தேக்கி வைத்திருந்த ஆத்திரத்தைக் கொட்ட ஆரம்பித்தார்.

''டேய் பரம்! நீயும் ஒரு மனிசனே, என்னை நல்லா நம்ப வைச்சுக்கழுத்தறுத்துப்போட்டாயடாப்பா. உன்னைக்கொலை செய்தாலும் ஆத்திரம் தீராது. உன்னால ஏலாதெண்டா ஏலாதெண்டு சொல்லியிருக்கலாம். நான் என்ர பாட்டில தனிய வெளிக்கிட்டுபோயிருப்பன். உன்னை நம்பி...''

''கோவிக்காதயடாப்பா. நேற்று நான் விசயத்தை சொல்லிப்போட்டு வெளிக்கிடுவம் எண்டால் மனிசி, மோள், மேன் மருமக்கள் எல்லாம் வெளிக்கிட வேண்டாமெண்டு நெருப்பெடுத்துக்கொண்டு நிண்டுதுகள். என்னால வெளிக்கிடேலாமப்போச்சு.'' பரமலிங்கம் தனது இயலாமையை வெளிப்படுத்தினார்.

''சரி அதைவிடு இனித் தன்கையே தனக்குதவி எண்டு நினைச்சுக் கொண்டு நானே தனிய வெளிக்கிடப் போறன். நாளைக்கு காலம கருக்கலோட வெளிக்கிட்டாத் தான் ஒரு பத்துப் பதினொரு மணிக்கு மட்டுவிலுக்கு போய்ச் சேரலாம்'' என்று உறுதியான குரலில் கூறினார் அப்பு.

''அப்பு, சொல்லுறதைக் கேள். இப்ப அவசரப்பட்டு வெளிக்கிடாதை. கொஞ்ச நாள் போகட்டும் பார்த்து வெளிக்கிட.....'' என பரமலிங்கத்தார் முடிக்குமுன்னே அப்பு குறுக்கிட்டார்.

''கொஞ்ச நாள் போகட்டும். கொஞ்ச நாள் போகட்டும் எண்டு இருந்தா வீட்டிலஒருசாமானும் மிஞ்சாதுகண்டியோ''

பின்னேரங்களில றோட்டில நிண்டுபார். வீடு பாக்கப் போறம், வாசல் பாக்கப்போறம் எண்டு சொல்லிப் போறவன் எல்லாம் திரும்பி வரேக்க கதவுகள், யன்னல் நிலையள், நீராந்தியள் எல்லாத்தையும் கொத்து விறகாக்கி சுமை சுமையாக் கட்டிக் கொண்டு வாறாங்கள். ஆரின்ரை வீட்டுக் கதவு,யன்னலோ தெரியாது. எனக்கு பார்க்கப் பார்க்க வயிறு பத்தி எரியுது. இனியும் நாங்கள் அங்க போகாவிட்டால், கதவு ஜன்னல்களைக் கண்ணிலும் காண ஏலாது''

''நீ சொல்லுறது உண்மை தாண்டாப்பா. ஆனால்....'' என்று பரமலிங்கத்தார் முடிக்கு முன்பே மீண்டும் அப்பு குறுக்கிட்டார்.

''இஞ்ச பார் பரமலிங்கம் தேவையில்லாமல் பயந்து கொண்டிருந்தால் கடைசியில் வீட்டு அத்திவாரக் கல்லும் மிஞ்சாது. அதால நான் நாளைக்கே மட்டுவிலுக்குப் போறதெண்டு முடிவெடுத்துப் போட்டன்.''

''எனக்கும் உன்னோட வரவேணும் போல கிடக்கு. ஆனால் போறவழியில மிதிவெடியில் காலக்கிலக் குடுத்து அகப்பட்டால் பிறகு சாகிறவரைக்கும் குடும்பத்துக்கு பாரமாக இருக்க வேண்டி வருமெண்டுதான் நான் பயப்பிடுறன்.''

''துணிவே துணை எண்டு சொல்லிக் கொண்டு வெளிக்கிட வேண்டியதுதான். நான் முடிவெடுத்துப் போட்டன். எனக்கு உன்னை மாதிரி மற்ற விசயங்களை நினைச்சுப் பயந்து கொண்டிருக்கேலாது'' அப்பு உறுதியாகச் சொன்னார். இனி தான் என்ன சொன்னாலும் பயனிருக்காது என்பதை உணர்ந்து கொண்ட பரமலிங்கம்,

''சரியடாப்பா, பொழுதுபட்டுப்போச்சு, நான் வெளிக்கிடப்போறன் ஏதோ யோசிச்சுச் செய்'' என்றபடியே புறப்பட்டார்.

பரமலிங்கத்தை வழியனுப்பி விட்டு அப்பு மட்டுவில் போவதற்கு வேண்டிய ஆயத் தங்களை வீட்டிலுள்ளவர்களுக்கு தெரியாமல் இரகசியமாக செய்து கொண்டார். ''நாளைக்கு காலம கருக்கலோட வெளிக்கிடவேணும். எல்லாரும் நித்திரையால எழும்ப முன்னம் வெளிக்கிட வேணும்'' அப்பு தனக்குத்தானே சொல்லிக் கொண்டு படுக்கப் போனார். அவருக்கு நெடுநேரமாகியும் நித்திரை வரவில்லை. ''நாளைக்கு சொந்த வீட்டுக்குப் போகப் போறன்'' என்ற நினைப்பே மனதுக்கு சுகமாக இருந்தது. அந்தச் சுகத்தில் அவரையறியாமல் மெல்ல மெல்லத் தூங்கிப் போனார்.

***

அப்புவுக்கு திடீரென விழிப்பு வந்தது. எழுந்து சூழலைக் கவனித்தார். பின்னிரவின் நிலவொளி முற்றமெங்கும் பரவி வெளிச்ச மூட்டிற்று. அங்கங்கே மரங்களிலிருந்த குயில்கள் கூ..., கூ... என்று குரலெழுப்பிய வண்ணமிருந்தன. ஒன்றிரண்டு காகங்கள் கரையும் சத்தம் கேட்டது. ''எட நல்லா விடிஞ்சிட்டுது போல இருக்கு'' என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டு படுக்கையில் இருந்து அவசரமாக எழுந்தார். எல்லோரும் ஆழ்ந்த நித்திரையில் இருந்தனர். ஆச்சியின் குறட்டை ஒலி ஏற்ற இறக்கங்களுடன் கேட்டது.

''இதுகள் நித்திரையால எழும்ப முந்தி வெளிக்கிட வேணும். இதுதான் சரியான நேரம்'' என நினைத்துக் கொண்டவராய் மங்கிய விளக்கொளியில் நேரத்தைப் பார்த்தார். சுவர்க்கடிகாரம் 5.05 எனக் காட்டியதுபோல் இருந்தது. வீட்டுக்குப் போகும் அவசரம் அப்புவை கடிகாரத்தில சின்ன முள்ளையும் பெரிய முள்ளையும் கூர்ந்து பார்க்க விடாமல் தடுத்து விட்டது. இனம்புரியாத சந்தோஷத்துடன் சைக்கிளை எடுத்துக் கொண்டு தன் சொந்த வீட்டிற்குப் பயணமானார்.

***

காவலரணிற்குள் இருந்து வீதியை நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்த பிரேமசிறி உசாரடைந்தான். அவன் கடிகாரம் பின்னிரவு 1.30 எனக் காட்டியது. ஊரடங்கு நேரத்தில் காவலரண் நோக்கி சைக்கிளில் விரைந்து கொண்டிருந்த மனிதன் பிரேமசிறியின் சந்தேகத்திற்குரியவனானான். ''ஊரடங்கு வேளையில் யார் நடமாடினாலும் சுட்டுத் தள்ளு'' இதுதான் மேலதிகாரியின் கட்டளை. எனவே பிரேமசிறி தனக்கிடப்பட்ட கட்டளையை நிறைவேற்ற சைக்கிளில் வந்து கொண்டிருந்த மனிதனை இலக்கு வைத்து துப்பாக்கி விசையை அழுத்தினான். அப்புவின் கதை முடிந்தது.

(யாவும் கற்பனை)



''கிழக்கில் கடுமையான புயல் வீசுகிறது என்று சொன்னால் சந்தோஷப்படுகிறாயே ஏன்?''

''அங்கேதானே எனது மாமியார் இருக்கிறார்''



''மகனுக்குக் கல்யாணம் நடக்கப் போகுதே, துணியெல்லாம் எங்க எடுக்கப்போறீங்க?''

''எல்லாம் அக்கம் பக்கமுள்ள வீட்டுக் கொடிகளில்தான்''

மேசியின் உடல் துடித்து அடங்கியது. மைக்கேலின் பிடி தளர்ந்தது.

***

சுமராவுக்கு நினைவு வந்தபோது அவள் வைத்திய சாலையில் இருந்தாள். 'சேலைன்' கைவழியே ஏறிக்கொண்டிருந்தது. அமைதியாக இருக்கும்படி வைத்தியர் கேட்டுக் கொண்டார். ருஷன் பற்றிய நினைவு அவளை வாட்டத் தொடங்கியது.

அது ஒரு வசதிபடைத்தவர்களுக்கான வைத்தியசாலை. வைத்திய வசதிகளும் அங்கே தாராளம். அவள் கண்ணில்பட்ட காட்சிகளெல்லாம் மனதுக்கு இதமாகவே இருந்தன. சீலிங் மற்றும் சுவர்களின் நிறம், அவற்றில் பொருத்தப்பட்டுள்ள சாதனங்களின் தரம் எல்லாம் எடுப்பாகவே இருந்தன. அவசர சிகிச்சைக் கருவிகள் அவளைச் சுற்றிலும் எலெக்ட்ரோனிக் மொழியில் மின்னிக் கொண்டிருந்தன.

இவற்றையெல்லாம் ரசிக்கும் மனநிலையில் சாதாரணமாக நோயாளிகள் இருக்க மாட்டார்கள். தேறிவரும் நோயாளர்களது தன்னம்பிக்கையை வலுப்படுத்த இவை ஓரளவுக்கு உதவும்தான். ஆனால் சுமராவின் பிரச்சினையோ முற்றிலும் வேறுபட்டதாக இருக்கிறதே.

யோசனையும், பட்டினியும், அலைச்சலும்தான் அவளை இந்த நிலைக்கு இட்டு வந்ததாக வைத்தியர் தெரிவித்தார். அவரது பேச்சு மனதுக்கு இதமாக இருந்தது. தெம்பாக இருக்காவிட்டால் மீண்டும் கட்டாய ஓய்வுக்கான ஊசிகளையே நம்பியிருக்க வேண்டும் எனவும் அவர் கூறினார். என்றாலும் அவளது மன உளைச்சலை மாற்ற மருந்தேது? ருஷனை நினைக்கும்போது மனது கலங்காமலாவிடும்?

அவளைப் பார்க்கப் பார்வையாளர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. வில்லியம் மட்டும் ஒருதடவை கண்ணில்பட்டான். அவ னோடு கதைக்கத்தக்க நிலை யில் அப்போது அவள் இருக்க வில்லை. அவன் வந்து போனது ஒரு கனவு போலத் தான் இருந்தது.

இப்போது நெடுநேரமாக அவள் விழித்திருப்பது போல உணர்ந்தாள். நேரம் இரவா? பகலா? புரியவில்லை. வேதனைகள் மீண்டும் மனதை முட்டிக்கொண்டு நிறைந்தன. தனக்கு நடந்தது என்ன என்பதுகூட நினைவுக்கு வர மறுத்தது. விழிகளில் நீர் நிறைந்து கொண்டது.

கையைக் காலை அசைக்க இயலவில்லை. அந்தளவுக்கு அசதியாக இருந்தது. அருகில் இருந்த நேர்ஸ் மிகவும் அன்பாகவும் ஆதரவாகவும் அவளைக் கவனித்துக் கொண்டாள். சுமரா கோர்ட்டில் மயங்கி விழுந்தது பற்றி அவள் சொன்னபோதுதான் கேஸ் ஞாபகத்துக்கு வந்தது.

'தீர்ப்பு என்னவாக இருக்கும்?' அறிய மனது துடித்தது. அதைப்பற்றி நேர்ஸிடம் விசாரித்தாள். அடுத்த தவணையில்தான் தீர்ப்பு அறிவிக்கப்படும் எனப் பத்திரிகைகளில் இருந்ததாக அவள் தெரிவித்தாள்.

தான் எப்பொழுது வீட்டுக்குத் திரும்பலாம் என நேர்ஸிடம் விசாரித்தாள்.

''இன்னமும் உங்களால் எழுந்து நடமாட இயலவில்லையே! அதற்கிடையில் அவசரப்பட்டால்.....'' அவள் அன்பாக இழுத்தாள்.

மோனாவை தான் அவசரம் சந்தித்தாக வேண்டும் என நேர்ஸிடம் தெரிவித்தாள்.

வில்லியம் வந்தான். அவனது கையை இறுகப் பற்றிக் கொண்டாள். ''ருஷனிடமிருந்து தகவல் வந்ததா?'' எனக் கேட்டாள். வில்லியமின் விழிகள் அவளது கேள்வியில் கலங்கிப்போயின. அவனது கலக்கம் அவளது ஏக்கத்தை மேலும் அதிகரித்தது.

அவன் இப்படிக் கலங்கி அவள் கண்டது கிடையாது. மௌனமே பதிலாக வில்லியம் நின்றிருந்தான். அவனது விசாரணைகளில் பாரிய முன்னேற்றம் எதுவும் தென்படவில்லை. அவன் வீட்டில் நிற்பதும் குறைவு. எனவே ருஷனின் அழைப்பை சந்திக்கும் வாய்ப்புக்கள் அருகிவிட்டன.

இயலாமையையும் கவலையையும் மறக்க வில்லியம் அதிகம் குடித்திருந்தான். கட்டுப்படுத்த சுமரா இல்லாத போது வேறெதனை அவனால் செய்ய இயலும்? சுமராவின் துயரமும் நிலைமையும் அவனது கவலையை இரட்டிப்பாக்கி விட்டன.

மணிக்கு ஒருதடவை எட்டிப்பார்க்கும் வைத்தியர், அவளது உடல் நிலையில் முன்னேற்றம் இருப்பதைக் கண்டார். ஆனால் அவளது மனநிலை அவளைத் தேறவிடுவதாக இல்லை. எனவே, உளவியல் சிகிச்சை அவளுக்குத் தேவைப்படுகிறது என அவர் சிபாரிசு செய்திருந்தார். எப்போதும் தூக்க மருந்துகளை வழங்கி அவளை மயக்கத்தில் வைத்திராமல் ஓர் உளவியல் வல்லுநரோடு உரையாடலில் காலம் கழிக்க விடுதலே உகந்தது என்று அவர் சிபாரிசு செய்திருந்தார்.

'எனக்கு என்ன மனநோயா பிடித்திருக்கிறது?' என சுமரா கலங்கினாள்.

சுமராவிடம் வந்திருந்த உளவியல் நிபுணர் அவளது மனதைத் தொட்டுப் பேசினார். அவரது அணுகுமுறை அவளது துயரங்களை உரையாடல் நேரத்திலாவது மறக்க வைத்தது. அப்போதெல்லாம் ஒரு போதையை ஊட்டுவதுபோலவே அவரது கதையின் போக்கு அவளுக்குத் தென்பட்டது.




# முத்தமிடும் ரோஜா இதழ்கள்

இதழ் - 14

மு.சிவநேசன்

கனவிலும் தான் வேதனையையே அனுபவிப்பதாக அவள் அவரிடம் தெரிவித்தாள். மனதை இதமாக வைத்திருக்க ஏற்ற கதைகளைச் சொல்லி அடுத்தவர்களை விட அவளது நிலை எவ்வளவோ பரவாயில்லை என்கின்ற பிரமையை அவர் உருவாக்கினார்.

கோர்ட்டில் கிரிமினல்களின் குற்றச் செயல்கள் தணியும் வகையில் பயனுள்ள வாதங்களை முன்வைக்கும் திறமையை அவள் மேலும் மேலும் வளர்க்க வேண்டும். அவளது சேவை இன்றைய உலகினில் மிகவும் வேண்டப்படுவதொன்று. அதற்கு அவள் தன்னை அர்ப்பணிக்கத் தயாராகிவிடல் வேண்டும் என்றெல்லாம் அவர் போதித்தார். அவளது கவனத்தை திசைதிருப்பும் அவரது முயற்சி நாளடைவில் ஓரளவு வெற்றி கண்டது.

என்றாலும் அவர் இல்லாத நேரங்களில் ருஷனின் நினைவு எழுந்து அவளை ஆட்டிப் படைத்தது. அவனைக் கொண்டுவரும்படி அவள் அடம்பிடித்தாள். அவளது பரிதாப நிலைமை பத்திரிகைகளில் பிரசுரமாகியிருந்தது. இரக்கம் கொண்டு ருஷனை விடுவிக்குமாறு கடத்தல்காரர்களுக்குப் பகிரங்க அழைப்பொன்று விடுக்கப்பட்டிருந்தது. இதற்கெல்லாம் அவர்களின் மனம் இசையுமா?

## சுடர் ஒளி தொடர் கதை

சுமரா தேறவேண்டும் எனப் பலரும் வாழ்த்து அட்டைகளை அனுப்பி இருந்தனர். அவற்றுள் காணப்பட்ட மைக்கேலின் அட்டை அவளைக் கவர்ந்து கொண்டது. அவனது சிறை 'செல்' இலக்கம் இடப்பட்டு அது காணப்பட்டது. அட்டையின் தன்மையும் அதில் அவன் எழுதியிருந்த வாசகங்களும் அவளை நிறையவே தேற்றின.

''அவன் வெளிப்பட்டால் நிச்சயம் ருஷனை மீட்கப் பணம் கிடைக்கும்'' என அவள் நம்பினாள். 'உடனடியாக அவனைக் கண்டாக வேண்டும்' என்கின்ற துடிப்பு பிறந்தது.

***

அது மேசி கொலையுண்ட நாள்.

ஒரு ஏஜென்சிக்காரனிடம் பேரம் பேசிவிட்டு அன்று மாலையில் டானியல் கடற்கரைக்குத் தனது காரில் வந்து சேர்ந்தான். அவ்விடத்தில் வைத்து இருள் கவியும் நேரம் அவனிடம் பணம் தருவதாக ஏஜென்சிக்காரன் ஒப்புதல் அளித்திருந்தான்.

அவன் மணல் தரையில் கால்நீட்டி அமர்ந்திருந்த வேளையில் குறிப்பிட்ட நேரத்திற்கு ஒரு பெண் வந்தாள். அவள் அவன் போயிருந்த ஏஜென்சியின் செயலாளர் ஜெனட் என்பதை மங்கலான வெளிச்சத்தில் டானியல் கண்டுகொண்டான். ஜெனட், டானியலுக்கு மிகவும் நெருக்கமானவள். இருவரும் அடிக்கடி ஏஜென்சியில் சந்தித்ததில் இருந்து தனிப்பட்ட நெருக்கமும் வளர்ந்துவிட்டது. ஆனால் அவளிடம் தகவல்களை விற்றுப் பிழைக்கலாமே தவிர வாங்கிப் பிழைக்க இயலாது. எனவேதான் பணத்தில் குறியாக இருக்கும் டானியல் மேசியிடம் உயிரை விடுகிறான்.

பணம் டானியலின் கைக்கு வந்ததும் அவள் பிரிந்து போய்விட்டாள். அவளை மறித்து வைத்திருக்கவே டானியலின் மனது துடித்தது. இனி மேசி வந்துவிடுவாளே. வந்து கண்டுகொண்டால் நிலைமை விபரீதம் ஆகிவிடும். எனவே அவளைப் போகும்படி அவன் விட்டுவிட்டான்.

கொட்டாவி விட்டபடி இனி மேசி வரும்வரையில் அவன் காத்திருக்க வேண்டும். அவளை இன்னமும் காணவில்லை என்கின்ற தவிப்பு அவனிடம் இருந்தது. நெடுநேரமாக அவளைக் காணாததால் அவளது செல்போனை அழைத்துப் பார்த்தான் டானியல். அதனோடு தொடர்பு கொள்ள இயலவில்லை.

> **இதுவரை.....**
>
> பிரபல தொழிலதிபரான மைக்கேலுக்கு, தனது செயலாளர் மேசியின் மீது சந்தேகம் எழுகிறது. மேசி தனது நண்பன் டானியலிடம் இரகசியக் கோப்புக்களைக் கையளிப்பது தெரியவருகிறது.
>
> அலுவலகத்துக்கு வரும் மேசியிடம் கேள்விக் கணைகளைத் தொடுக்கிறான் மைக்கேல். மேசியைத் தீர்த்துக்கட்ட நினைக்கிறான் அவன். அவளது கூந்தலாலேயே அவளது கழுத்தைச் சுற்றி இறுக்குகிறான். மேசி மூச்சுத் திணறுகிறாள்!
>
> இனி.....

''இவளை நம்பி மோசம்போனேனே! இன்றைய பொழுது தொலைந்து போய்விட்டது. இப்படித் தெரிந்திருந்தால் ஜெனட்டுடன் இனிமையாகப் பொழுதைக் கழித்திருக்கலாம்'' என நினைத்தான் அவன்.

'மேசி இன்னமும் கடமையில்தான் இருக்கிறாள். கடமை நேரங்களில்தான் அவள் போனை நிறுத்திவைப்பது வழமை' என அவன் முடிவெடுத்தான். வந்ததும் 'கோல்' தரட்டும் என நினைத்தவாறே விரக்தியுடன் காரை நோக்கி நடக்கலானான்.

அவனது காரை பொலிஸ்காரர்கள் வளைத்து நின்றனர். அவர்களின் மோப்ப நாய்கள் அதன் டிக்கியைப் பிடுங்கத் தவித்தன. அவன் அருகினில் வந்தான்.

டிக்கியைத் திறக்கும்படி உத்தரவு போட்டனர் பொலிஸார். அவன் எதுவித கலவரமும் இன்றி அதனைக் கம்பீரமாகத் திறந்தான். உள்ளே தெருவிளக்கின் ஒளியில் மேசி சுருண்டு கிடப்பது தெரிந்தது.

(தொடரும்)

---

## வாசகர் இதயம் பேசுகிறது




துணிகரமான செய்திப்படங்களை எல்லாம் துணிந்து போடுகிறீர்களே என்ன துணிவு ஐயா உங்களுக்கு? அட்டைப் படங்களுக்காகவே சுடரொளியை வாங்கலாம். அடுத்தவை சொல்லியா தெரியவேண்டும்?

ஆர்.மிதுனா, சிலாபம்.

கட்டுநாயக்க விமானத் தாக்குதல் பற்றி உண்மை நிலவரம் அறிய ஆவலுடன் காத்திருந்த வாசகர்களுக்கு, சுடர் ஒளி கறுப்பு ஜூலையில் நெருப்புடன் கட்டுநாயக்கவில் விசேட பூஜை என்ற கட்டுரையில் மிக மிக விளக்கமாக வாசகர்களுக்குத் தந்து அசத்தி விட்டதே! சபாஷ் 'சுடர் ஒளி' மற்றும் ஒரே பாடசாலையில் மாணவர்கள் 4 பேர் என்ற செய்தி என்னைக் கலங்க வைத்துவிட்டது.

பி.பிறேம், வவுனியா.

ஒளிச்சுடராய் தமிழ் மக்கள் மத்தியில் சுடர் விடும் சுடர் ஒளியே, நீ தாங்கி வரும் படைப்புகள் மிகவும் நன்று. ''ஆந்தையாரின் டயரி'' பகுதியில் இடம் பெற்ற பயங்கரம் பன்னிரண்டு, காதல் உணர்வு சிறுகதை, கவிதைப் புனல் வடித்த கவிதைகள் என்பன மிகவும் நன்றாக இருந்தன. உனது படைப்பில் புதிய எழுத்தாளர்களைச் சேர்த்து வருவது மிகவும் பாராட்டக் கூடிய விடயம்.

தேவேந்திரன், முரசுமோட்டை.

'சுடர் ஒளி' பத்திரிகையானது மேலும் சுடர் பரப்பி தன் முயற்சியில் முன்னேறி வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

எம்.எஸ்.ஸாஜிதா மர்யம், ஹந்தெஸ்ஸ.

அன்போடு சுடர் ஒளியே! நீ யாருக்கும் அஞ்சாமல், யார் பக்கமும் சாயாமல், சம நீதியாக ஒளி வீசுகின்றாய். எனவே தான் உன் ஒளிக்காக நாம் தவம் இருக்கின்றோம். உன்னை வாரம் தவறாமல் வாசிக்கின்றோம். வளர்க சுடர் ஒளி!

ந.குருபரன், கருநாட்டுக் கேணியூர்.

அனைவரது உள்ளங்களையும் கவருகின்ற சுடர் ஒளியே! எமக்கு நீ பல செய்திகளை அள்ளித்தருகின்றாய். ஆகஸ்ட் 05இல் வெளிவந்த கட்டுநாயக்க விசேட பூஜை மற்றும் அனைத்து அம்சங்களும் சிறப்பாக அமைந்துள்ளன. தனித்துவமான செய்திகளைத் தாங்கி வரும் சுடரொளிக்கு எனது நன்றிகள்.

என்.நித்தியா, செம்பியன்பற்று.

சுடர் ஒளியின் முகப்பு பெரும்பாலும் பொருத்தமான படங்களையே சுமந்து வருகிறது. முகப்புக் காட்சிகள் உள்ளடக்கத்தின் முகவுரையாக அமைந்து வாசகர்களின் கவனத்தை ஈர்க்கிறது. வாழ்த்துக்கள்.

அபூஜஉத், நிந்தவூர்.

அரசியல் செய்திகள் முதல் அரும்புகளுக்கான 'இளஞ் சுடர்' வரை அனைத்து அம்சங்களையும் அள்ளி வரும் சுடர் ஒளியே! 05.08.2001இல் வெளிவந்த இதழானது பல தகவல்களை உள்ளடக்கியிருந்தது. களமுனைச் சம்பவங்களைக் கண்முன் நிறுத்திய 'கள நிலைமை எப்படி?' என்னும் கட்டுரையைத் தொகுத்தளித்த ரமணன் பாராட்டுதற்குரியவர். நடிப்புலக மாமேதையின் ''நடந்து வந்த பாதையை'' மீட்டிப்பார்த்தமைக்கு நன்றிகள்.

எஸ். டிலக்ஷன், வவுனியா.

சென்றவார இதழில் ''நான்காம் கட்ட ஈழப்போர் புலிகள் தயாராகி விட்டனர்'' என்ற செய்தி கண்டு மீண்டும் நாட்டுக்குப் பேரழிவு ஆரம்பமாகிறது என்பது தெளிவாகின்றது. இனிமேல் மக்களின் பாடு பெரும்பாடுதான். அதுபோல் அரச புனர்வாழ்வுத் துறையினரிடமும் பல ஓட்டைகள் இருப்பதை சுடர் ஒளி சுட்டிக் காட்டியுள்ளது. மேலும் அனைத்து அம்சங்களும் படு சூப்பர். தினமும் உன் பணி தொடர என் வாழ்த்துக்கள்.

ஜே.எம்.பாரீஸ், தெல்தெனிய.

என்றும் எம் இனிய நெஞ்சங்களில் இடம்பிடித்துவிட்ட சுடர் ஒளியே, அனைவரது கரங்களும் உன்னைத் தேடி அலைகின்றன. நீ நீடுழி காலம் வாழ எனது வாழ்த்துக்கள்.

கோ.தினேஷ், முருங்கன்.

# காதலுக்கு கண்ணில்லை! வயதும் இல்லை!!



திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர். அது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது என்றெல்லாம் கூறுவார்கள்.

திருமணத் தம்பதியரில், ஆணைவிடப் பெண் வயது குறைந்தவளாக இருக்க வேண்டும் என்பது காலம், காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஒரு அம்சம்.

ஆண்களை விடப் பெண்கள் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் வேகமாகப் பக்குவம் அடைந்து விடுவதே அதற்குக் காரணம்.

ஆணைவிடப் பெண்ணுக்கு வயது கூடுதலாக இருந்து விட்டால், அவளுடைய புத்திக் கூர்மையை ஏற்கவும் ஈடுகொடுக்கவும் முடியாது ஆண் திண்டாட நேரிடும்.

இன்று நிலைமை ஓரளவுக்கு மாறி விட்டது. மனைவி தன்னைவிடப் புத்திக் கூர்மை உடையவளாக இருப்பதைப் பல ஆண்கள் விரும்புகின்றனர்.

வயதில் மூத்த பெண்ணை ஆண் மணம் முடிப்பதும், வயதில் குறைந்த ஆணைப் பெண் மணம் முடிப்பதும் இன்று சர்வ சாதாரணமாகிவிட்டது.

தன்னைவிட இரண்டு வயது அதிகமான பெண்ணை மணம் முடித்து இருக்கும் ஒருவர் ''காதலுக்கு கண்ணில்லை'' என்பது உண்மையானால் வயதும் இல்லை. ஒருவரை ஒருவர் அனுசரித்துப் போகும் மனநிலையில் இருக்கும் இரு வரை வயதைக் காரணம் காட்டி திருமணத்தைத் தடுப்பது எப்படி நியாயமானது என்று கேட்கிறார்.

இன்றைய உலகம் ஒரு போட்டி உலகம் என்பதனால் ஆண்கள் தமக்கு இணையாகத் தமது மனைவிமாரும் சிந்திக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

பொருளாதார ரீதியில் நிரந்தரமற்ற இன்றைய சமூகச் சூழலில் மனைவி விவரம் தெரிந்தவளாகவும் புத்திசாலியாகவும் இருக்க வேண்டும் எனப் பல ஆண்கள் எதிர்பார்க்கின்றனர்.

சில ஆண்கள் தாய் போலிருந்து தன்னைக் கவனித்துக் கொள்ள தன்னை விட மூத்தவளால் தான் முடியும் என்று திடமாக நம்புகிறார்கள். இத்தகைய மனநிலையிலும் இது போன்ற திருமணங்கள் நிகழ்ந்து விடுகின்றன.

தன்னைவிட ஐந்து வயது குறைந்த ஒருவரைத் திருமணம் செய்து கொண்ட பெண் இப்படிக் கூறுகிறார்.

''வயதில் குறைந்தவர்கள் தங்களை அடக்கி ஆளமாட்டார்கள், அடிமையாக நினைக்கமாட்டார்கள் என்பது அநேக பெண்களின் எண்ணம். பிறந்த வீட்டில் அண்ணனிடம் தான் பயமும், மரியாதையும். தம்பியிடம் சரிசமமான உறவுதான் நிலவும். அதேபோல்தான் கணவன் நம்மைவிடச் சிறியவர் என்பது நமக்கு இணையானவர் என்ற சமத்துவ உணர்வைத் தரும்'' என்கிறார்.

இந்திய கிரிக்கெட் உலகில் கபில்தேவ், சச்சின் டெண்டுல்கர், வெங்கடேஷ் பிரசாத் ஆகியோர் தம்மை விட வயதில் கூடிய பெண்களை மணம் முடித்து சந்தோஷமாக வாழவில்லையா என்ன?

இனம், மதம், மொழி போன்ற கட்டுப்பாடுகள் திருமண உறவுகளில் எப்படி உடைந்து போகின்றதோ, அதே போலத்தான் வயதுப் பொருத்தங்களும் உடைந்து போகும்.

இதில் சம்பந்தப்பட்ட ஆணுக்கும், பெண்ணுக்கும் பிரச்சினைகள் இல்லாத வரை சமூகம் அதில் தலையிட்டு எந்தக் கருத்தும் கூறமுடியாது. ஆனால் இப்படியான திருமணங்களில் சில தோல்வியடைந்தால் சமூகத்தில் ஒவ்வொருவரும் கருத்துச் சொல்ல முற்படுவார்கள்.

திருமணங்களில் வயதுப் பொருத்தம் இருக்கிறதோ இல்லையோ, மனப் பொருத்தம் கட்டாயமாக இருக்க வேண்டும். ஏனெனில் சமூகம் இவர்களை மிக உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருக்கும் என்பதால்.

பெண்

பிரதீபா — பசீனா

மெலிவாகவும் அழகாகவும் இருக்க விரும்புவது பெண்களின் இயல்பு. இதற்காக டயட்டிங் மற்றும் உடற் பயிற்சி செய்கிறார்கள். ஆனால் ஒரு சிலருக்கு மட்டுமே இதனால் பயன் கிடைக்கிறது.

இதற்கு என்ன காரணம்?

டயட்டிங்கும் உடற்பயிற்சியும் சரியாகச் செய்யப்பட்டால் மட்டுமே எடைகுறையும். கூடவே மனநிலையும் நன்றாக இருக்க வேண்டும்.



## அழகிய உடல் அமைப்பைப் பெற...

* உடற்பயிற்சியை ஆரம்பிக்கும் முன்பு வாழைப்பழம், சான்ட்விச் போன்றவற்றைச் சிறிதளவு உண்ணுங்கள்.
* ஒரே உணவைத் தொடர்ந்து சாப்பிட்டால் அலுப்புத் தட்டும். எனவே வாராவாரம் டயட் அட்டவணையை மாற்றுங்கள்.
* ஒரு வாரத்தில் மெலிய நினைப்பது போன்ற அதிக எதிர்பார்ப்புகளைத் தவிருங்கள்.
* மிகக்கடினஉடற்பயிற்சிவெறுப்பைத்தரும்.
* மாத விலக்கிற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாக எடை கூடிப் பின்னர் குறைவது இயல்பு.
* உங்கள் உடற்பயிற்சி முறையைச் சரியானதா என உறுதிப்படுத்துங்கள்.

முறையான பயிற்சியாலும் விடா முயற்சியாலும் எடையைக் குறைத்து அழகாக இருக்கலாம்.



## சுதந்திரத்தை நேசிக்கிறீர்களா?

பெரும்பாலான பெண்கள் உயர் கல்வி கற்கிறார்கள். நல்ல தொழில் செய்கிறார்கள். உயர் பதவி வகிக்கிறார்கள்.

ஆனால் பெண்கள் சுயமாக சிந்திக்கிறார்களா? சுதந்திரமாகச் செயற்படுகிறார்களா? போன்ற கேள்விகளைக் கேட்டுப்பாருங்கள். தெளிவான ஒரு பதிலைப் பெற முடியாமல் இருக்கும்.

சில பெண்கள் சுயமாகச் சிந்தித்தாலும் சுதந்திரமாகச் செயற்படுவதில்லை. அல்லது சமூகம் அவ்வாறு செயற்பட அனுமதிப்பதில்லை.

''வீட்டில் உப்பையும் மிளகாயையும் பார்த்து கொள்ளாமல், ஏன் வேலை செய்ய வந்தீர்கள்?'' தொழில் புரியும் பெண்களைப் பார்த்து இப்படிக் கேட்கிறார்கள். பெண் என்றால் வீட்டு வேலைகளை மட்டும் செய்ய வேண்டியவள் என்ற கருத்து அதிகமான ஆண்களிடம் காணப்படுகிறது.

பெண்களும் அதனை மனதில் பதிய வைத்துள்ளனர். எவ்வளவுதான் படித்தாலும், வேலை செய்தாலும் நான் ஒரு நாள் கணவனுக்கு அடங்கிப் போக வேண்டியவள்தானே என்று நினைக்கிறாள்.

''என் கணவருக்குப் பிடிக்காது எனவே வேலையை விட்டு விட்டேன்''. ''அண்ணனுக்கு விருப்பமில்லை அதனால் மேலே படிக்கவில்லை''. ''அப்பா வேண்டாம் என்றார் அதனால் சங்கீத வகுப்பிற்குப் போவதில்லை'' இவ்வாறு கூறும் பெண்களை நாம் அன்றாடம் சந்திக்கிறோம்.

குடும்பத்தில் உள்ள ஆண்கள் எதிர்த்த உடனேயே தனது செயற்பாடுகளை ஒரு பெண் நிறுத்திவிடுகிறாள். இப்படிச் செய்வதில் அதிகமான பெண்கள் திருப்தி அடைவதாகக் கூறுகிறார்கள். கணவன், அண்ணன் அல்லது அப்பா விரும்புவதை மட்டுமே செய்ய முற்படுகிறார்கள்.

இப்படிச் செய்யும் போது உண்மையான மனத்திருப்தி கிடைப்பதில்லை. மனதில் ஏதோ ஒரு மூலையில் வேதனை இருக்கும். உண்மையான விருப்பங்களை மூட்டை கட்டி வைத்துவிட்டு வெளியில் நடிப்பதுதான் வாழ்க்கையாக அமையும்.

இதற்காகப் பெண்கள் போர்க்கொடி உயர்த்த வேண்டியதில்லை. நீங்கள் உண்மையாகவே சுதந்திரத்தை நேசிப்பவரா? வீட்டில் இருக்கும் ஆண்களிடம் உங்கள் விருப்பங்களையும் அதனால் குடும்பம் அடையும் நன்மைகளையும் பற்றித் தெளிவாக எடுத்துச் சொல்லுங்கள்.

பயன் கிடைக்காவிட்டால் அவர்களின் வழியிலேயே சென்று வெல்லுங்கள். உதாரணமாக சங்கீதம் படிக்க வேண்டாம் என்று கூறும் அப்பா தையல் படிக்க அனுமதிப்பார். தையலைப் படியுங்கள் அதனால் மேலதிக வருமானத்தைப் பெற முடியும். அதன் மூலம் சங்கீதம் படிக்கலாம்.

மற்றவர்களைப் புண்படுத்தாமல் சாதுரியமாக உங்கள் இலக்கை அடையுங்கள்.

## நிலம் வெளுக்க 'பளிச்' டிப்ஸ்

உங்கள் வீட்டு நில ஓட்டு(Floor Tiles) தரையை இலகுவாகச் சுத்தம் செய்ய இதோ சில டிப்ஸ்.

* நில ஓடுகளில் கறை பதிந்திருந்தால் வினாகிரி கொண்டு சுத்தம் செய்யுங்கள்.
* சலவைத் தூளைப் பயன்படுத்தி ஓடுகளைக் கழுவக் கூடாது. ஓடுகளில் கீறல்கள் ஏற்பட்டு விடும்.
* ஓடுகளின் ஓரப்பகுதி அடிக்கடி அழுக்காகும். பழைய பற்தூரிகையால் அந்தப் பகுதியைத் துடைத்துச் சுத்தம் செய்யுங்கள்.
* துடைக்கப் பயன்படுத்தும் தண்ணீரில் சிறிதளவு எலுமிச்சைச் சாறு கலக்கவும். தரை பளிச்சென்று சுத்தமாக இருக்கும்.
* தரையைச் சுத்தம் செய்யமுன் ஜன்னல், மின் விசிறிகளைத் துடைத்துச் சுத்தம் செய்து விடுங்கள். பின்பு சுத்தம் செய்தால் தரை அழுக்காகி விடும்.
* தரையைத் துடைக்கப் பயன்படுத்தும் பொருட்களை சுடுநீரில் கழுவிச் சுத்தம் செய்யுங்கள் அதில் இருக்கும் அழுக்குகள் விரைவில் அகன்று விடும்.




* வாரத்தில் இரண்டு தடவைகள் தரையைச் சுத்தம் செய்வது அவசியம்.
* தரையைத் துடைக்கப் பயன்படுத்தும் நீரில் சிறிதளவு டெட்டோல் பயன்படுத்துவது ஆரோக்கியத்துக்குச் சிறந்தது.
* நில ஓடுகளில் கறுப்புக் கறை படிந்து விட்டால் அதற்கென விற்கும் திரவத்தைப் பயன்படுத்தித் துடையுங்கள். இவைகளில் அமிலத் தன்மை அதிகம் உண்டு. அதனால் இவைகளைப் பயன்படுத்தித் துடைத்த பின்பு தண்ணீர் விட்டு நன்றாகக் கழுவி விட வேண்டும்.

## வேலையிலிருந்து ஓய்வு பெறுகிறீர்களா?

நீங்கள் வேலையிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டீர்களா? அப்படியானால் ஓய்வுக்காலத்தை இனிமையாகக் கழிக்க இதோ சில குறிப்புகள்.

* திட்டமிட்டு சேமித்த பணத்தை ஓய்வு பெற்ற பின் அளவோடு செலவழியுங்கள் .
* எவரையும் சாராதிருங்கள்.
* ஓய்வினைக் கூட பொழுது போக்காக நினைத்துத் திட்டமிடுங்கள்.
* உங்கள் சேமிப்பு குடும்பத்தினரைச் சேரும்படியாக உயில் எழுதுங்கள்.
* அளவாக உணவு அருந்துங்கள்.
* தினமும் தேகப் பயிற்சி செய்து மன அமைதி பெறுங்கள்.
* அனைவருடனும் சிரித்து, இனிமையாகப் பழகுங்கள்.
* குடும்பத்துக்கு உதவியாக இருங்கள்.
* இளைய தலைமுறையினருடன் நண்பர்களைப் போல் பழகுங்கள்
* சமூக மாறுதல்களைப் புரிந்து கொண்டு அதனுடன் ஈடுகொடுக்கப் பழகுங்கள்.
* நான் என்ற எண்ணத்தை அடியோடு ஒழியுங்கள் .



* தேவையில்லாமல் கோபப்படாதீர்கள் .
* காரணமின்றி எவரிடமும் வெறுப்பைக் காட்டாதீர்கள்.
* எல்லா விடயங்களிலும் குற்றம் கண்டு பிடிக்காதீர்கள்.
* கடவுளிடம் ஆழ்ந்த நம்பிக்கை கொள்ளுங்கள்.
* உங்களை நேசித்து உங்கள் மேல் மிகுந்த நம்பிக்கை வைத்து வாழப் பழகுங்கள்.

# மைக்கல் ஜோன்ஸன் ஓய்வு

உலக சாதனையாளரான குறுந்தூர ஓட்ட வீரர் மைக்கல் ஜோன்ஸன் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறப்போவதாக அறிவித்துள்ளார்.


ஜோன்ஸன்

அடுத்தமாதம் அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் நடைபெறவுள்ள சர்வதேச போட்டிகளில் ஜோன்ஸன் பங்குபற்றுவார். அதுவே தமது இறுதிப் போட்டியாக இருக்கும் என அவர் அறிவித்துள்ளார்.

''முன்னணி நிலையிலிருக்கும் போதே ஓய்வு பெற்றுவிட வேண்டுமென நான் எனது மெய்வல்லுநர் வாழ்க்கையை ஆரம்பித்த போதே தீர்மானித்திருந்தேன். பிறரது தயவால் களத்தில் நீடித்திருக்கும் ஒருவனாகி விடுவேனோ என்ற அச்சம் எப்போதும் எனக்கிருந்தது. இப்போது நான் விலகிக்கொள்வதற்கான தருணம் வந்துள்ளது.'' இவ்வாறு 33 வயதான ஜோன்ஸன் கூறியுள்ளார்.

தனது மெய்வல்லுநர் வாழ்வின் சிறந்த தருணம் என 1996 அட்லாண்டா ஒலிம்பிக் போட்டிகளை ஜோன்ஸன் கருதுகிறார். அப்போட்டிகளில் 200, 400 மீற்றர் ஓட்டப்போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்றார் அவர். அதன்மூலம் ஒரே ஒலிம்பிக்ஸில் இவ்விரு பிரிவுகளிலும் தங்கம் வென்ற முதலாவது வீரர் என்ற புகழையும் அவர் பெற்றார்.

சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில் 400மீற்றரில் தங்கம் வென்றார். 400மீ. அஞ்சலோட்டத்தில் தமது அணி தங்கம் வெல்வதற்கும் ஜோன்ஸன் பெரும் பங்காற்றினார்.

ஒலிம்பிக் போட்டிகளில் மொத்தமாக 5 ஒலிம்பிக் தங்கப் பதக்கங்கள் பெற்றுள்ளதுடன் உலக மெய்வல்லுநர் போட்டிகளிலும் 9 தங்கப் பதக்கங்களை அவர் வென்றுள்ளார்.

200மீற்றர் ஓட்டத்தில் 19.32 செக்கன்களிலும் 400மீற்றரில் 43.18 செக்கன்களிலும் ஓடி மைக்கல் ஜோன்ஸன் உலக சாதனைக்குரிய வராகத் திகழ்கிறார்.

## விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

# சர்வதேச பீச் வொலிபோல் போட்டிகள் இலங்கையில்

இலங்கையின் முதலாவது தேசிய பீச் வொலிபோல் போட்டிகள் எதிர்வரும் அக்டோபர் மாதம் நடைபெறவுள்ளன.

பீச் வொலிபோல் விளையாட்டை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இலங்கை கரப்பந்தாட்டச் சம்மேளனம் செயற்திட்டங்களை வகுத்துள்ளது.

இதன் முதற்படியாக பீச்வொலிபோல் சம்மேளனம் அண்மையில் உருவாக்கப்பட்டது. இலங்கை கரப்பந்தாட்டச் சம்மேளனத்துடன் இணைந்ததாக பீச் வொலிபோல் சம்மேளனம் இயங்குகிறது. இதன் தலைவராக டாக்டர் சுனில் ஜயந்த நவரட்னவும் செயலாளராக சனத் கல்மன்கொடவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆகஸ்ட் 24ஆம் திகதி காலை 9.30க்கு பயிலுநர்களுக்கும் மத்தியஸ்தர்களுக்குமான பயிற்சி வகுப்பொன்றை பீச் வொலிபோல் சம்மேளனம் நடத்துகிறது. கரையோர பிரதேசங்களில் இவ்விளையாட்டை அறிமுகப்படுத்தும் போட்டிகள் செப்டெம்பர் 8, 9ஆம் திகதிகளில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்விளையாட்டின் விதிமுறைகளை விளக்கும் பயிற்சி வகுப்புகள் செப்டெம்பர் சிலாபம், நீர்கொழும்பு, வாதுவை, பெந்தோட்டை, மாத்தறை ஆகிய பிரதேசங்களில் செப்டெம்பர் 15, 16 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

அதன்பின் முதலாவது தேசிய பீச் வொலிபோல் சாம்பியன்ஷிப் போட்டிகள் அக்டோபர் 20 முதல் 24 வரை மாரவில எக்ஸ்பிரஸ் பீச் ஹோட்டலில் நடைபெறவுள்ளன. இதில் முதல் 3 இடங்களைப் பெறும் அணிகளுக்கு முறையே 20,000, 10,000, 5,000 ரூபா பரிசாக வழங்கப்படவுள்ளன.

சர்வதேச சுற்றுப்போட்டியொன்றும் இவ்வருடம் இலங்கையில் நடைபெறவுள்ளது. தாய்லாந்து மற்றும் சில மத்திய கிழக்கு நாடுகள் இதில் பங்குபற்றுவதற்கு ஏற்கெனவே சம்மதித்துள்ளன.

இச்சுற்றுப்போட்டியில் சாம்பியனாகும் அணிக்கு 1,500 அமெரிக்க டொலர்கள் (சுமார் 135,000 ரூபா) பரிசாக வழங்கப்படவுள்ளது. இலங்கையில் கரப்பந்தாட்டப் போட்டியொன்றுக்கு வழங்கப்படும் ஆகக்கூடுதலான பரிசுத் தொகையாக இது விளங்குகிறது.

15 வயதுக்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பயிற்சிவகுப்புகளும் இவ்வருட இறுதியில் நடைபெறவுள்ளன. பீச் வொலிபோல் போட்டிகள் மற்றும் அது தொடர்பான நிகழ்ச்சிகளில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள், கழகங்கள் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளன:

செயலாளர், இலங்கை பீச் வொலிபோல் சம்மேளனம், 2, ரீட் அவெனியு, கொழும்பு 7.

# மெய்வல்லுநர் விதிகளை மாற்றுவதற்கு எதிர்ப்பு

மெய்வல்லுநர் போட்டிகளின் விதிகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

குறுந்தூர ஓட்ட வீரர்கள் ஓடுவதற்கு முன்பு தவறிழைத்தால் அவர்கள் மீண்டும் போட்டியில் பங்குபற்ற இரு வாய்ப்புகள் வழங்கப்படும். இனி ஒரு வாய்ப்பு மட்டுமே வழங்கப்படவுள்ளது. இவ்விதி 100, 200, 400 மீற்றர் ஓட்டங் களுக்கும் இத்தூரத்திற்குட்பட்ட அஞ்சல் மற்றும் தடை தாண்டல் ஓட்டங்களுக்கும் பொருந்தும்.

2003.01.01 இலிருந்து இவ்விதிகள் அமுலுக்கு வரவுள்ளன.

அண்மையில் கனடாவில் கூடிய சர்வதேச மெய்வல்லுநர் சம்மேளன (ஐ.ஏ.ஏ.எவ்) அதிகாரிகள் இத்தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

உயரம் பாய்தல் மற்றும் கோலூன்றிப் பாய்தல் ஆகிய போட்டிகளில் தவறிழைத்தவருக்கு 3 வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. இதை 2 ஆகக் குறைப்பதற்கு முயற்சிக்கப்பட்டது. எனினும் உலகப் புகழ் பெற்ற கோலூன்றிப் பாய்தல் வீரரான சேர்ஜி புப்கா எதிர்ப்புத் தெரிவித்தார். அதனால் இத்திட்டம் கைவிடப்பட்டது.


டாலி தொம்ஸன்

போட்டிகளை விரைவாக நடத்தி முடிப்பதற்கு வசதியாக இவ்விதிகள் மாற்றப்பட்டுள்ளன என ஐ.ஏ.ஏ.எப். கூறுகிறது.

ஆனால் இத்திட்டங்களுக்கு பல முன்னணி போட்டியாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். மௌரிஸ் கிறீன், அட்டோ போல்ட்டன், மேரியன் ஜோன்ஸ், முன்னாள் டெக்காத்லன் வீரர் டாலி தொம்ஸன் ஆகியோர் பலமான எதிர்ப்புக் குரல்களை எழுப்பியுள்ளனர்.

''எவரும் வேண்டுமென்றே தவறாக ஆரம்பத்தில் ஈடுபடுவதில்லை. கடும் அழுத்தங்களுக்கு உட்படும் போதுதான் இவ்வாறு நடைபெறுகிறது. இத்தீர்மானம் முன்னணி போட்டியாளர்களை அப்புறப்படுத்தி விடலாம்.

இந்தத் தீர்மானங்கள் எல்லாம் தொலைக்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்டவை. ஓரிரு மணித்தியாலங்களில் போட்டிகளை ஒளிபரப்புவதற்கு வசதியாக மேற்கொள்ளப்படுபவை. சில தொலைக்காட்சி நிறுவனங்கள் இத்திட்டத்தின் பின்னணியில் இருக்கின்றன.'' இவ்வாறு டாலி தொம்ஸன் கூறியுள்ளார்.

ஆனால் ''மெய்வல்லுநர் போட்டியாளர்களுடன் கலந்தாலோசித்த பின்னரே இம்மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.'' இவ்வாறு ஐ.ஏ.ஏ.எவ்வின் தலைவர் லாமின் டயக் கூறுகிறார்.

ஆனால் குறித்த போட்டியாளர்களின் பெயரை வெளியிட மறுத்து விட்டார். ஐ.ஏ.ஏ.எவ் அதிகாரிகளிடையே இதற்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது தீர்மானத்திற்கு ஆதரவாக 81 வாக்குகளும் எதிராக 74 வாக்குகளும் கிடைத்தன என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் இம்மாற்றங்கள் தொடர்பாக எதிர்கருத்துக்களை லாவ்சான்னேயிலுள்ள விளையாட்டு விதிமுறைகளுக்கான நீதிமன்றத்தில் விவாதிக்கலாம் என ஐ.ஏ.ஏ.எவ் அறிவித்துள்ளது.

இதன் முடிவுகளை ஏற்றுக்கொள்ளாத போட்டியாளர்கள் சர்வதேச போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ரொஷான் மீண்டும் விளையாட வேண்டும்

''ரொஷான் மஹாநாம உலகக்கிண்ண வெற்றிக்காக அயராது உழைத்த கிரிக்கெட் வீரர். மீண்டும் அவர் இலங்கை அணியில் விளையாட வேண்டும். அதற்குரிய சகல தகுதிகளும் அவருக்கு உண்டு'' இவ்வாறு சுற்றுலா, விளையாட்டுத்துறை, அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல கூறியுள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரும், சிறந்த களத் தடுப்பாளருமான ரொஷான் மஹாநாம அவுஸ்திரேலியரான கென் பீஸுடன் இணைந்து தனது சுயசரிதை நூலை எழுதியுள்ளார்.


கிரியெல்ல


ரொஷான்


ரொனி கிரேக்

Retired Hurt என்ற பெயரிலான இந்நூலின் வெளியீட்டு வைபவம் ஏற்கெனவே சிட்னியில் நடைபெற்றது. இதன் சிங்கள மொழிப்பெயர்ப்பான 'வேதனாத்மக சமுகென்ம', (வேதனையுடன் ஓய்வு) என்ற இந்நூலின் வெளியீட்டு விழா அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

''துரதிஷ்டவசமாக ரொஷான் 'கிரிக்கெட்'டிலிருந்து ஓய்வு பெற்றமை எம்மை கவலை கொள்ளச் செய்கிறது. எனினும் இன்று தனது சுயசரிதை நூலை வெளியிட்டதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். இதன் ஆங்கில பதிப்பான ''ரிடயர்ட் ஹர்ட்'' மூலம் பல உண்மைகளை உலகறியச் செய்த ரொஷானுக்கு நான் நன்றி கூறுகிறேன்'' என்றார்.

பிரபல கிரிக்கெட் வர்ணனையாளரான ரொனி கிரேக் பேசுகையில் ''ரொஷான் மஹாநாமவைப் பற்றி பேசுவதென்றால் நிறையப் பேசலாம். இன்முகத்துடன் எல்லோருடனும் நட்புப் பாராட்டும் ஒரு சிறந்த வீரர். அவர் முன்கூட்டியே ஓய்வுபெறுவது வேதனை தரும் விடயம். டெஸ்ட் போட்டியொன்றில் சனத் ஜெயசூரியவுடன் இணைந்து உலக சாதனை படைத்தபோதும் சரி, பல சிறப்பான பிடிகளை எடுத்தபோதும் சரி சாதனைகளைப் பற்றி அலட்டிக் கொள்ளாதவர். அணியின் வெற்றிக்காக கடைநிலையில் விளையாடி இலங்கை கிரிக்கெட் வரலாற்றுக்கு பல பெருமைகளை ரொஷான் சேர்த்துள்ளார்'' என கூறினார்.

நூலின் முதற் பிரதியை ரொஷான் தனது பெற்றோருக்குச் சமர்ப்பித்தார். ரொஷானின் தந்தை தேவக மஹாநாம, ரொஷானின் முதலாவது பயிற்றுநர் நெல்சன் மெண்டிஸ் ஆகியோர் நூலின் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைத் தலைவர் விஜய மலலசேகர, முன்னாள் தலைவர் திலங்க சுமதிபால, அரசியல் பிரமுகர்கள், சனத் ஜயசூரிய தலைமையிலான தற்போதைய இலங்கை அணி வீரர்கள், ரசிகர்கள் உட்பட பெருந்திரளானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இறுதியாக ரொஷான் மஹாநாம நன்றியுரையாற்றினார். ''அவுஸ்திரேலியாவில் எனது நூல் சர்ச்சைக்குள்ளாகியிருக்கிறது. போட்டியொன்றின்போது அவுஸ்திரேலிய வீரர் 'மெக்ராத்' சனத் ஜயசூரியவை இனவாத ரீதியாக திட்டித் தீர்த்ததை எனது நூல் மூலம் வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளேன்.

வியாபார நோக்கத்துடன் நான் இதனைச் செய்துள்ளதாக ஸ்டீவ் வோ உட்பட அவுஸ்திரேலிய வீரர்கள் அவுஸ்திரேலிய ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர். எம்மிடம் உள்ள வீடியோ ஒளிப்பதிவு நாடா இவ்விடயம் உண்மை என்பதை நிரூபித்துள்ளது. இந்நூலை தமிழ் மொழியிலும் வெளியிடவுள்ளேன்.'' இவ்வாறு மஹாநாம கூறினார்.


-அருள்

# இலங்கை அணிக்கு அபார வெற்றி


இலங்கை, இந்திய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணிக்கு 10 விக்கட்டுகளால் வெற்றி கிடைத்துள்ளது.

ஆகஸ்ட் 14ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் சனத் ஜயசூரிய வெற்றியீட்டினார். அதையடுத்து இந்திய அணியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு அவர் பணித்தார்.

போட்டியின் ஆரம்பம் தொடக்கம் மிக மெதுவாகவே ஓட்டங்களைப் பெற்றனர் இந்தியர்கள். போட்டியின் முதலாவது பவுண்டரி 28ஆவது ஓவரிலேயே அடிக்கப்பட்டது.


சங்கக்கார


சனத்


முரளி

முதல் இன்னிங்ஸ் முடிவில் 95.3 ஓவர்களில் 187 ஓட்டங்களை மட்டுமே இந்திய அணி பெற்றது.

வேகப்பந்துவீச்சாளர் தில்ஹார பெர்ணாண்டோ 42 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுகளையும் முரளி 3 விக்கட்டுகளை கைப்பற்றினர்.

இலங்கை முதலாவது இன்னிங்ஸில் 362 ஓட்டங்களைக் குவித்தது. சனத் ஜயசூரிய இப்போட்டியில் தனது 8ஆவது டெஸ்ட் சதத்தைப் பெற்றுக்கொண்டார்.

குமார் சங்கக்காரவின் துடுப்பாட்டமும் அபாரம். ஆட்டமிழக்காமல் 105 ஓட்டங்களை அவர் பெற்றார்.

10 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள சங்கக்காரவின் முதலாவது சதம் இதுவாகும். இறுதி விக்கட்டில் சங்கக்காரவின் சதத்தைப் பூர்த்தி செய்வதற்கு வசதியாக சுழற்பந்து வீச்சாளரான முரளி நிதானமாக துடுப்பெடுத்தாடியமையும் குறிப் பிடத்தக்கதாகும்.

பந்துவீச்சில் ஜவகல் ஸ்ரீநாத் 114 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுகளையும் சஹீர் கான் 89 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

மூன்றாவது நாள் மதிய இடைவேளைக்கு சற்று பின்னர் தனது இரண்டாவது துடுப்பாட்டத்தை ஆரம்பித்தது இந்தியா. ஆனால் அன்றைய மாலையிலேயே 8 விக்கட்டுகளை இழந்து 140 ஓட்டங்களையே பெற்றது.

இடது கையில் ஏற்பட்ட காயம் காரணமாக ஜவகல் ஸ்ரீநாத் துடுப்பாட முடியாதிருந்தது. (முதலாவது இன்னிங்ஸிலும் அவர் துடுப்பெடுத்தாடவில்லை) எனவே இந்திய அணிக்கு ஒரு விக்கட் மாத்திரமே கைவசமிருந்தது. இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு மேலும் 45 ஓட்டங்கள் தேவையாக இருந்தது.

எனவே நான்காவது நாள் ஆரம்பமானபோது இந்திய அணி எத்தனை நிமிடங்களில் தோல்வியைத் தழுவும் என்பது மட்டுமே சந்தேகமாயிருந்தது.

எனினும் ஒரு விக்கட் மாத்திரம் கைவசமிருந்த நிலையில் உப தலைவர் ராகுல் திராவிட்டும் பிரசாத்தும் சற்றே விரைவாக ஓட்டங்களைப் பெற்றனர். இவர்கள் 50 ஓட்டங்களைப் பெற்று இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்த்தனர். எனினும் ஒருமணித்தியாலத்திற்குள் இறுதி விக்கட்டும் வீழ்ந்தது.

முரளி இரண்டாவது இன்னிங்ஸில் 63 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுகளை வீழ்த்தினார். டெஸ்ட் இன்னிங்ஸ்களில் முரளி 5 விக்கட்களை வீழ்த்தியமை இது 25 ஆவது தடவையாகும்.

வெற்றிக்குத் தேவையாகவிருந்த 6 ஓட்டங்களை இலங்கை விக்கட் இழப்பின்றி பெற்றுக் கொண்டது.

1985இல் பி.சரவணமுத்து அரங்கில் நடைபெற்ற இந்தியாவுடனான டெஸ்ட் போட்டியில் இலங்கை வெற்றியீட்டியது. (இலங்கையின் முதலாவது டெஸ்ட் வெற்றி) அதன்பின் இந்தியாவுடனான டெஸ்ட் போட்டியில் இலங்கை வெற்றியீட்டியமை இதுவே முதல் தடவையாகும்.

போட்டியின் இரண்டாவது நாள் (ஆகஸ்ட் 15) இந்தியாவின் 54ஆவது சுதந்திரத் தினமாகும். சுதந்திரக் கொண்டாட்ட காலத்தில் ஒரு தோல்வியையே இந்திய அணி தமது தாயகத்திற்குக் கொடுத்துள்ளது.

# ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை

''ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை'' என்ற நூலை மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம். கோபாலரத்தினம் (கோபு) அண்மையில் வெளியிட்டுள்ளார். நான் ஒரே மூச்சில் படித்த சிலநூல்களில் ''ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை'' என்ற கோபுவின் நூலுக்கு தனி இடம் உண்டு.

கோபுவின் சிறைவாழ்வு பற்றிய நூலைப் படிக்கின்றபோது அரவிந்தரின் "சிறைவாழ்வு" (Tales of the prison life) என்ற ஆங்கில நூல் நினைவுக்கு வருகிறது.

தமக்குச் சிறையில் ஏற்பட்ட அனுபவத்தை கோபு பின்வருமாறு கூறுகின்றார்:—

''சிறையில் எழுதுவதற்கு பேனாவோ, எழுது தாள்களோ கிடைக்கவில்லை. நான் கைது செய்யப்பட்ட சமயத்திலிருந்து சிறையிலிருந்து விடுதலையாகும்வரை நடந்த நிகழ்வுகள், சிறையில் நான் சந்தித்தவர்கள், அவர்களிடமிருந்து நான் கேட்டறிந்தவை அனைத்தையும் மூளையில் ஒரு பகுதியில் பதிவு செய்து வைத்துக் கொண்டேன்'' இப்படி அவர் கூறுகிறார்

''பண்டிதர் நேரு முதல் இந்தியத் தலைவர்கள் பலரையும் சிறை வைத்தபோது அவர்கள் எழுதியவை எல்லாம் உலகப் புகழ்பெற்ற இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன. நான் என்ன அரசியல் தலைவனா?'' என்றும் கேலியாகக் கேட்கிறார்.



எஸ்.எம்.கோபாலரத்தினம்

ஆயினும் அவர் சிறையில் இந்தியப் பெரும் தலைவர்கள் படாத துன்பங்கள் அனைத்தையும், ஈழமண்ணில் இருந்த இந்தியச் சிறையில் பட்டுணர்ந்தார். இதை அவருடைய நூல் ஆணித்தரமாக எடுத்துக் காட்டுகிறது.

நூலுக்குப் பேராசிரியர் சிவத்தம்பி தமக்கே உரிய தனிநடையில் அணிந்துரை வழங்கியுள்ளார்.

''அமிழ்ந்து கிடக்கும், பனிப்பாறையின் வெளிதெரிநுனி'' என்று தலைப்பட்டு வழங்கியுள்ள அணிந்துரையில் கோபுவின் சிறை வாழ்வைச் சிந்தையைத் தொடும் முறையில் எடுத்துரைக்கிறார் என்கிறார் பேராசிரியர். அவரது அணிந்துரையின் ஒரு பகுதியில்.

''1987 ஒக்டோபர் முதல் 1990 பெப்ரவரி வரை இலங்கையில் இருந்த அமைதிப் படைபற்றிய வாதப் பிரதிவாதங்கள் நிறைய உண்டு.

பாரத நாடு அனுப்பிய அமைதிப்படை, அமளிப்படையாக மாறித் தமிழ் மக்களைக் கொன்ற கொடூர நிகழ்ச்சிகளை, சிறைப்படுத்திச் செய்த கொடுமைகளை மன்னிப்போம், ஆனால் மறக்க மாட்டோம். எனவே இந்தியாவின் இச் செய்கையை 'வரலாற்றில் தவிர்க்க முடியாத சுருதிக்குலைவுகளில் ஒன்றென்று' சிவத் தம்பி கூறும் கூற்றினை ஏற்க முடியவில்லை.

''என் உரை'' என்ற தமது முன் உரையில் ''அமைதி காப்பதற்காகவும், அல்லல்படும் ஈழத் தமிழ் மக்களுக்கு ஆறுதல் அளிக்கவும் என வந்த இந்திய இராணுவம் ஆக்கிரமிப்புப் படையாக மாறிய பின் எம் ஈழ மண்ணில் ஒரு இந்தியச் சிறை அமைந்தது'' என்று நூலாசிரியர் கோபு சிந்தை நொந்து கூறுகிறார்.

10 மாதம் வயிற்றில் வைத்துப் பரிந்து காத்து ஒரு பிள்ளையைப் பெறுகிறாள் தாய் ஆனால் நம் ஆசிரியர் கோபுவோ பல அலைச்சல்களுக்கு, பல இழப்புகளுக்கு, பல ஏமாற்றங்களுக்கு உள்ளாகிய நிலையில் 12 ஆண்டுகள் கழிந்த பின்னர்தான் ''ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை'' என்ற நூலை வெளிக்கொணர்ந்திருக்கிறார். இந்த நூல் வெளிவருவ தற்கு ''வேர்ல்ட் வொய்ஸ் பப்ளிகேஷன்'' நிர்வாக இயக்குநர் மனோ இராஜசிங்கம் காரணராக அமைகிறார்.

இந்நூல் தொடக்க நிலையில் ஜூனியர் விகடனில் வெளிவந்தது. பின்பு பாரிசில் இயங்குகின்ற 'ஈழநாடு' இதழின் ஆசிரியர் குகநாதன் ''முடிவில்லாப் பயணம்'' என்ற தலைப்பில் இந்த நூலின் ஒரு பகுதியை வெளியிட்டு இந்நூல் வெளிவர அடித்தளம் இட்டுள்ளார். அவரது உள்ளத் துடிப்புத்தான் இந்நூலின் ஒரு பகுதி 'முடிவில்லாப் பயணம்' என்ற தலைப்பில் வெளிவர உந்து சக்தியாக விளங்கியது.

''காதலர் இருவர் கருத் தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்'' என்பதற்கமைய கோபு காதலித்து கடிமணம் செய்துகொண்ட வாழ்க்கைத் துணைவி இவர் சிறைபட்ட போது பட்ட துன்பங்களைக் கோபு தன் எழுத்தில் வடிக்கின்ற போது எங்களை மீறிக் கண்கள் கலங்குகின்றன.

அவரின் உற்ற துணையாய் இருந்த மனைவி இப்போது உயிருடன் இல்லை.

கோபாலரத்தினத்தின் கம்பீரமான தோற்றம் நூலின் அட்டைப்படமாக விளங்குகிறது.

''இந்திய அமைதிப்படையின் நடவடிக்கையால் பலியானவர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் சமர்ப்பணம்'' என்று நூலில் தீட்டப்பட்டிருக்கும் ஓவியம் எம்மை மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டுகிறது. அத்தோடு இந்திய ஆக்கிரமிப்புப் படைகள் ஈழமண்ணில் நடத்திய கொடுமைக் காலத்துக்கு எம்மை அழைத்துச் செல்கிறது.

170 பக்கங்கள் கொண்ட இந்நூல் கடைசிப் பக்கத்தில் எஸ்.எம் கோபாலரத்தினத்தின் வாழ்க்கைக் குறிப்பைக் குறள் நடையில் சுருக்கித் தருகிறது.

நூலின் விலை ரூபா 180/= ஆகும். இது ஒரு சிறந்த வரலாற்றுக் களஞ்சியம் என்றால் மிகையாகாது.

நூலாசிரியர் கோபுவின் கருத்தும் அதுதான்.

— மா.க. ஈழவேந்தன்

# நாம் எங்கே நிற்கிறோம்?

## ஒன்றுகூடல் உணர்த்தியது

ஈழத்துத் தமிழ் இலக்கியம் புதிய பரிமாணங்களைப் பெற்று வளர்ச்சி அடைந்து வருகின்றது. இன்றைய நிலையில் ஈழத்து இலக்கியத்தின் ஓட்டங்களை கருத்தாடல்கள் மூலம் நாம் கண்டறிய வேண்டிய தேவை உள்ளது. கருத்துப் பரிமாற்றங்களின் ஊடாகவே நாம் இந்தத் தேவையை நிறைவு செய்ய முடியும்.

இதன் ஒரு முயற்சியாகவே ஈழத்து எழுத்தாளர், ஆர்வலர்களின் செல்நெறி அறிகை ஒன்று கூடல் நிகழ்வு சமீபத்தில் கொள்ளுப்பிட்டி குருகெதர அரங்கில் நடைபெற்றது.

மூன்றாவது மனிதன் இதழும் அதன் (இலக்கிய) நண்பர்களும் ஏற்பாடு செய்திருந்த அரங்க நிகழ்வுகள் சுவைபடவும், காத்திரமாகவும் நகர்த்திச் செல்லப்பட்டமை பாராட்டத்தக்கது. கட்டுரை அளிக்கையுடன் புத்தகக் கண்காட்சி, கலந்துரையாடல், இசை நிகழ்ச்சிகள் என அனைத்து நிகழ்வுகளும் சுவாரசியமாக நடந்தேறின.

முதல் நாள் அமர்வில் பேசிய மூன்றாவது மனிதன் நூலின் ஆசிரியரும் ஏற்பாட்டாளருமான எம்.பௌஸர், ''1980 களுக்குப் பின் ஈழத்து இலக்கியப் பரப்பில் படைப்பாளிகள், இலக்கிய ஆர்வலர்கள் பொதுவான தளத்தில் ஒன்று கூடித் தமக்குள் உள்ள நேர், எதிரான கருத்துக்களைப் பரிமாறி ஒரு புரிந்துணர்வை எட்டும் வாய்ப்பு கிடைத்திருக்கவில்லை. அந்த வாய்ப்பை உருவாக்குவதற்கு எடுக்கப்பட்ட எத்தனமே, இவ் ஒன்று கூடல்'' என்று கூறினார்.

மீனாட்சி அம்மாள் நடேசையர் அரங்க அமர்விற்குத் தலைமை வகிக்கவும் சிறப்புரை ஆற்றவும் இருந்த பேராசிரியர் கா.சிவத்தம்பி தவிர்க்க முடியாத காரணத்தால் சமுகமளிக்கவில்லை. அவர் எழுதி அனுப்பி வைத்த கட்டுரை எஸ்.கே.விக்னேஸ்வரனால் வாசித்தளிக்கப்பட்டது.

சி.ஜெயச்சந்திரன், சூரியகுமாரி பஞ்சநாதன், சி.சிவசேகரம், பா.சிவகுமார் ஆகியோரால் அன்று கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இவற்றில் பா.சிவகுமார், சூரியகுமாரி பஞ்சநாதன் ஆகியோரின் கட்டுரைகள் பரந்துபட்ட தேடல்களைக் கொண்டன எனப் பாராட்டப்பட்டன. அவ்வமர்வின் கலந்துரையாடலின் போது ஆங்கிலக் கல்வியின் அவசியம் பற்றியும், சேர்.பொன். இராமநாதன் பற்றிய சர்ச்சைகளும் இடம்பெற்றன.

ஒவ்வோர் அமர்வுகளின் இடையேயும் இன்னிசைப் பாடல்களை அளித்த கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும், ஔவை, தர்ஷினி ஆகியோரும் பாராட்டுக்குரியவர்கள்.

இரண்டாம் நாள் நிகழ்வில் அ.ஸ. அப்துஸ்ஸமது அரங்கில் பேராசிரியர் சி.மௌனகுரு தலைமையில் மு.பொன்னம்பலம், செ.யோகராசா, எஸ்.தில்லைநடராஜா, தெளிவத்தை ஜோசப் ஆகியோர் உரையாற்றினர்.

80 களுக்குப் பின் ஈழத்துக் கவிஞர்கள் பட்டியலில் முகுந்தன், ஜெயசீலன் போன்ற புதிய கவிஞர்களின் பெயர்களும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்தை தி.திருக்குமரன் முன்வைத்தார்.

நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புக் கருத்துரைகளை வழங்கவிருந்த சில முக்கிய பேச்சாளர்கள் கலந்து கொள்ள முடியாமல் போனது ஒரு குறையாகவே இருந்தது.

இருந்த போதிலும் மூன்றாவது மனிதன் இதழின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி காலத்தின் தேவையாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

—கருடன்

## இலங்கை எழுத்தாளர்களுக்கு இனிய வாய்ப்பு

இலங்கை எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்புகள் மற்றும் நாவல்களைப் புத்தகமாக வெளியிட தமிழக சென்னைப் பதிப்பகமான மணிமேகலைப் பிரசுரம் முன் வந்துள்ளது.

தேர்வுக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்படும் புத்தகங்கள் அச்சானதும் நூறு பிரதிகள் நூலாசிரியருக்கு அன்பளிப்பாக வழங்கப்படவிருக்கிறது.

## கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இலவச பண்டித வகுப்பு

பல்வேறு வகைகளிலும் தமிழை வளர்த்து வரும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் தமிழில் இலக்கிய இலக்கண அறிவை வளர்க்கவிரும்புபவர்களுக்கு உதவும் முகமாகப் பிரவேச பால பண்டித வகுப்புக்களை நடத்தி வருகின்றது. அத்துடன் கவிதை, சமஸ்கிருதம் என்பனவற்றையும் கற்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்று கொழும்புத் தமிழ்ச் சங்கக் கல்விக் குழுச் செயலாளர் அ.திருநாவுக்கரசு தெரிவித்திருக்கிறார்.

நன்னூல், தொல்காப்பியம் ஆகிய நூல்கள் வாயிலாக இலக்கண அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ் வகுப்புக்கள் இலவசமாகவே நடத்தப்படுகின்றன.

பன்மொழிப் புலவர் த.கனகரத்தினம் தலைமையில் சிறந்த பண்டிதர், புலவர் குழாம் இவ் வகுப்புக்களை நடத்துகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## கலையமுதம்

# லண்டனில் இராஜேஸ்வரி ஆற்றிவரும் தமிழ்த் தொண்டு

''புலம் பெயர்ந்து செல்லும் எம்மவர்கள் தமது கலாசாரத்தையே மறந்து விடுவதாகச் சொல்லப்படுவது தவறானது. தமிழர் எங்கு போனாலும் தமது மொழியை மறந்து விடவில்லை. புலம் பெயர்ந்து செல்லும் போது தமது மொழி, பண்பாடு, பழக்க வழக் கங்களையும் கொண்டு செல்கின்றனர்.'' இவ்வாறு லண்டனிலிருந்து கொழும்பு வந்துள்ள நாவலாசிரியையும், சிறுகதை எழுத்தாளருமான இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.



இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

''புலம்பெயர்ந்த நாடுகளில் நாம் தமிழார்வம் உள்ளவர்களாகவே இருக்கின்றோம். ஆனால் எமது குழந்தைகளின் தலைமுறையில் தமிழார்வம் இருக்குமா என்பது கேள்விக்குறியே என்றும் அவர் கூறினார். ''புலம்பெயர்ந்து சென்றோர் தமது மன அவசங்களை இலக்கியமாகப் படைக்கத் தொடங்கிவிட்டார்கள். இப்புலம் பெயர்ந்த இலக்கியம் புதிய சிந்தனை, புதிய உணர்வுகளை ஏற்படுத்த வேண்டும். மேற்கு நாடுகளில் நாம் சந்திக்கும் முரண்பாடுகள் கலாசார ரீதியானவை'' என்றும் இராஜேஸ்வரி குறிப்பிட்டார்.

அவர் ''சுடர் ஒளி''க்கு அளித்த நேர்காணலின் போது தெரிவித்ததாவது:—

''புலம் பெயர்ந்த தமிழ்ப் பெண்கள் தாய் என்ற அந்தஸ்துடன் உழைப்பாளிகளாகவும் இருக்கின்றனர். எமது பெண்கள் தாம் வாழும் நாடுகளின் பண்பாடு, பழக்க வழக்கங்களைச் சகித்துக் கொள்ள வேண்டியவர்களாக உள்ளனர். நாளா வட்டத்தில் இவற்றை அவர்கள் தகர்த்துவிடக் கூடும். ஆணாதிக்கம் புலம் பெயர்ந்த நாடுகளையும் விட்டுவைக்கவில்லை. ஆனால் மேற்கு நாடுகளில் பெண்ணியத்தை முன்னெடுக்கும் சக்தி பெண்களிடம் உள்ளது.

நம் நாட்டுப் பெண்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் சமூகரீதியாகத் தம்மை முன்னேற்றி வருவது பெருமைக்குரியது. புலம் பெயர்ந்த எழுத்தாளர்களின் சிறுகதைகள் உலகத் 'தரம்' வாய்ந்தவையாக இருப்பதும் குறிப்பிடப்பட வேண்டியதே. அநேகமான சிறுகதைகள் இலங்கையை மையமாகக் கொண்டவை. ஒரு காலத்தில் 'அகதி'களாகச் சென்ற தமிழர் இன்று தாம் வாழும் நாடுகளில் கோடீஸ்வரர்களாக மாறி வருகின்றனர். புலம் பெயர்ந்த நாடுகளில் எமது பெண்கள் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர் என்பது உண்மையே.

நானும், எனது மகனும் ஒன்றாகவே மருத்துவம் படித்துச் சித்தியடைந்தோம். மேற்கில் பெண்கள் கல்வியில் கூடுதல் திறன் மிக்கோராக இருக்கிறார்கள். ஆண்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதையும் காண முடிகின்றது. பெண்கள் எழுதினால் கேலி செய்யவும் ஆட்கள் உள்ளனர். புலம்பெயர்ந்தோருடைய எழுத்துக்கள் மனித நேயத்தையும், சமுதாய உணர்வுகளையும் பிரதிபலிக்கின்றன'' என்றும் தெரிவித்தார்.

முருக வழிபாடு பற்றி அவர் எழுதிய ஆய்வு நூல் பற்றிக் கேட்ட போது, ''நான் முருக வழிபாடு பற்றி எழுதிய நூலில் முருக தத்துவம் பற்றி விளக்கியுள்ளேன். தமிழ் மொழி முருகனுடன் இணைந்துள்ளது. இராமர் தேசியக் கடவுளானது அரசியல் ரீதியானது. அரசியல் ரீதியாகக் கடவுளர் முன்னெடுக்கப்படுவதற்கு இது உதாரணம். காலத்துக்குக் காலம் கடவுளரின் நிலையை அரசியல்வாதிகள் மாற்றுகின்றனர்'' என்றும் அவர் கூறினார்.


— குமார்

# மர்மப் பெண் 8

கதை: மாஸ்டர் சிவலிங்கம் சித்திரம்: தீபன்




இலக்கங்களை இணைத்து மறைந்துள்ளதைக் கண்டுபிடியுங்கள். பின்னர் அதற்கு அழகாக வர்ணந்தீட்டுங்கள்.



## நெறியே நிற்பாய்!

பிறரின் தயவில்
வாழ்வது
பேதமை ஆகுமே மனிதா
அறிவாய் இறைவன்
கூறுகிறான்
அழகாம் சுய மரியாதையுடன்
நெறியே நிற்பாய் தலை சாயேல்
நிமிர்ந்து நட நீ பயம் இல்லை
தயையே வேண்டாம் துணிவுண்டே
கூறும் அன்பால் வாழ்வுண்டே

க.சுகந்தினி,ஆண்டு—2,
கிங்ஸ்ரன் சர்வதேச பாடசாலை, கல்கிஸை.

## ஆமை பற்றிய தகவல்கள்

* ஆமைகளில் சுமார் 275 வகைகள் உலகில் இருக்கின்றன.

* ஆமையின் வேகம் மணிக்கு சுமார் 70 மீட்டர்கள்.

* ஆபத்து வரும்போது ஆமை தன் தலையையும் கால்களையும் தன் ஓட்டுக்குள் சுருக்கிக் கொள்ளும்.

* ஆமைக்குப் பற்கள் இல்லை. எனவே அதன் தாடையின் பலத்தைக் கொண்டுதான் இரையை நசுக்கிக் கொள்கிறது.

* ஆமை சுமார் 300 ஆண்டுகள் வரை உயிர் வாழும்.

எம்.ஐ.எம்.றிஸ்வான், தரம்—10[B],
ஸாகிரா தேசிய பாடசாலை,
கல்முனை.



## கரும்பும் கல்வியும்

அடியிலிருந்து
கரும்பினையும்
ஆனந்தம் கொண்டு
சுவைக்கையிலே
கசப்பை உணர்த்தி
கோபம் கொள்ள
வைத்திடுமே

அது போன்றே கல்வியும்
கசப்பை முதலில்
தந்திட்டே
எல்லை இல்லாக்
கோபத்தை
எமக்கு உண்டு
பண்ணிடுமே

முடிவில் கரும்பு
இனிமையினை
முடிவே இன்றி தந்து
உண்ண ஆசையினை
அதுவும் கூட்டி விட்டிடுமே

பல்கலை கற்ற
முடிவினிலே
பாங்காய் கரும்பை
போன்றே
அல்லல் இன்றி நன்றாயே
ஆனந்தம் தன்னைத்
தந்திடுமே

இரவீந்திரன் தமயந்தி,
அரியாலை.

## ஒத்த சொற்கள்

1. கோன் — அரசன் 2. கோலம் — அழகு 3. தந்திரம் — உபாயம்
4. சத்தியம் — உண்மை 5.அலகு — சொண்டு 6.ஆகாயம் —வானம்
7. ஆடை — உடை 8. தொழுதல் — வணங்குதல்

T.பவதர்ஷன்,தரம்—5, கிங்ஸ்ரன் சர்வதேச பாடசாலை
கொழும்பு — 06

## சிறுவர் கைவண்ணம்



S.சுஜந்தா,
தரம்—4,
பொற்கேணி வீதி,
தம்பலகாமம்.



சி.சங்கீத்,
தரம்—9,
யூனியன் கல்லூரி.



# இளஞ் சுடர்

ஷர்மிலா

## இதயமே! இதயமே!!

நாம் வாழும் ஒவ்வொரு விநாடியும் இதயத் துடிப்பின் கைகளிலேயே தங்கியுள்ளது. இதயம் ஸ்டிரைக் பண்ணத் தொடங்கினால் நமது வாழ்க்கையும் முடிந்து விடும். இந்த இதயத்துடிப்பு நாம் அதிகமாகக் கோபப்பட்டாலோ அல்லது சந்தோஷப்பட்டாலோ அதிகமாகி விடுகின்றது.

இப்படி எமது செயல்களுக்கேற்ப செயற்பட்டு வரும் இந்த இதயத் துடிப்பை மருத்துவர்களால் அறிந்து கொள்ள முடியும். ஆனால் உங்களின் இதயத் துடிப்பை இப்போது நீங்களே அறிந்து கொள்ளக் கூடியதாக கருவியொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கைக்கடிகாரத்தின் வடிவிலுள்ள இக் கருவியை உங்கள் கைகளில் கட்டினால் போதும். மணி பார்த்து நேரத்தை அறிந்து கொள்வது போன்று கையிலுள்ள இக்கருவியின் மூலம் இதயத்துடிப்பை அறிந்து கொள்ள முடியும்.



## யுரேனஸ்



யுரேனஸ் சூரிய மண்டலத்தில் சூரியனிலிருந்து ஏழாவது இடத்தில் அமைந்துள்ள கோள். இதன் பருமன் — 51,800 கிலோ மீற்றர். முதன் முதலில் டெலஸ் கோப்பிற்குத் தெரிந்தகோள்.

1781ஆம் ஆண்டு வில்லியம் ஹேர்ஷல் என்ற பிரித்தானிய வானியலறிஞர் யுரேனஸைக் கண்டார். இது



தன்னைத் தானே சுற்றுவதற்கு 17 மணித்தியாலங்களை எடுக்கின்றது. சூரியனைச் சுற்றி வருவதற்கு 30,685 புவி நாட்கள் எடுக்கின்றது. இதுவும் முகில்களால் சூழப்பட்டது. சராசரி வெப்பநிலை −216°C.டெலஸ்கோப்பில் நீல நிற வாயுப் பந்தாகத் தோன்றும்.உரோமானியர் காலத்தில் யுரேனஸ் ஆதிக் கடவுள் என்று நம்பப்பட்டவர். இவரின் மனைவி கியா என்ற பூமி தேவதை என்றும் அவர்களுக்கு குழந்தைகள் இருந்தன என்றும் கூறப்பட்டது.பின்னர் தம்பதிகளுக்கிடையில் ஏற்பட்ட வாக்கு வாதத்தினால் பூமித்தேவதை யுரேனஸிலிருந்து பிரிந்து தனியானது என்று நம்பினர்.

## வெண்புறாவே!

வெள்ளை நிற உடையணிந்து வெண் மேகமென உலாவரும் வெண்புறாவே... உன் உள்ளமும் வெண்மையன்றோ — உன் போலவே வெள்ளைச் சீருடையில் வெண் புறாக்களென பள்ளி செல்லும் பட்டு வண்ண சிட்டுக்கள் நாம். உன் உள்ளமதைப் போலவே எங்கள் உள்ளங்களும் கள்ளங் கபடமற்றவையன்றோ. உன்னை சமாதான தூதனாக படைத்தார்கள். உலகமெல்லாம் சமாதானத்தை பரப்பிய நீ எம் நாட்டை மட்டும் ஏன் மறந்தாய்? உயர் வானில் ஒய்யாரமாய் பறக்கும் நீ எம் நாட்டையும் சற்றே திரும்பிப்பார் .

எஸ்.தர்ஷினி,தரம்—7,
ம/மா/நு/வ/ அனிக் தமிழ் வித்தியாலயம், உடப்புசல்லாவ.

## வியத்தகு எகிப்திய பிரமிட்டுக்கள்

எகிப்திய நைல் நதிக்கரையோர நாகரிகத்தின் எச்சமாகவும் உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாகவும் விளங்கி வருவது பிரமிட்டுக்கள் ஆகும். எகிப்திய மன்னர்களின் பிரமாண்டமான கல்லறைகளே பிரமிட்டுக்கள். லிபிய பாலை நிலத்தின் எல்லைப் பிரதேசமான கீஸா எனுமிடத்தில் மிகமுக்கியமான மூன்று பிரமிட்டுக்கள் உள்ளன. இவை சதுர வடிவமான அடித்தளத்தில் நான்கு பக்கங்களும் முக்கோணமாகி உச்சியில் ஒன்று சேரும் வடிவின. கீஸாவில் கி.மு. 2900ஆம் ஆண்டில் வாழ்ந்த கூபு என்னும் எகிப்திய மன்னனால் கட்டப்பட்ட மிகப்பெரிய பிரமிட் ஒன்று உள்ளது. இந்தப் பிரமிட்டின் அடித்தளம் 13 ஏக்கர் பரப்புடையது. உச்சி தரையிலிருந்து 451 அடி உயரத்தில் உள்ளது. இந்தப் பிரமிட்டை அமைக்க 23,00,000 கற்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன.



பிரமிட்டினுள்ளே மன்னனதும், அரசியினதும் கல்லறைகள் உள்ளன. அவற்றிற்கு போகும் வழி குறுகியது. அங்கு அரசனதும், அரசியினதும் ''மம்மிகள்'' பதப்படுத்தப்பட்டு வைக்கப் பட்டுள்ளன. பண்டைய எகிப்தியர் மனிதன் இறந்தாலும் அவனுடைய ஆன்மா அவனது உடலைத் தேடி வரும் என்று நம்பினர். அதனால்தான் அவர்கள் உடலை மருந்தூற்றி பாதுகாத்து வந்தனர். அவையே ''மம்மிகள்'' எனப்படுகின்றன. இந்த உலக அதிசயக் கட்டிடங்கள் இன்று நீரினாலும் தூய்மையற்ற வளியினாலும் சிதைவடைகின்றன எனக் கண்டறிந்துள்ளனர். ஆயிரக் கணக்கான சுற்றுலாப் பயணிகள் நாளாந்தம் இப் பிரமிட்டுக் களை பார்வையிடுவதனால் அங்குள்ள சுவர்களும் அழுக்கடைந்து வருகின்றன.

மகாலிங்கம் அழகரசன்,
தரம்—5[B], யாழ் இந்து
ஆரம்ப பாடசாலை.

## எனக்குத் தெரிந்த பாரதி

தென்னிந்தியாவிலே உள்ள எட்டயபுரத்தில் சின்னச்சாமி ஐயர் வாழ்ந்து வந்தார். இவரின் மனைவியின் பெயர் இலட்சுமி அம்மையார். இவர்களுக்கு 1882ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆந் திகதி ஒரு மகன் பிறந்தான். இக் குழந்தைக்கு இவர்கள் சுப்பிரமணி எனப் பெயர் இட்டனர்.

சுப்பிரமணி சிறுவயதிலேயே கவிபாடும் திறன் மிக்கவராகக் காணப்பட்டார். இவர் ஒரு நாள் தன் தந்தையுடன் அரச சபைக்குச் சென்றார். அவரின் பாட்டிலுள்ள திறமையைக் கண்ட அரசவைப் புலவர்கள் இவருக்கு 'பாரதி' என்ற பட்டத்தைச் சூட் டினார்கள். அப்போது அவருக்கு வயது பதினொன்று. சுப்பிரமணிய பாரதியார் எனப் பெயர் பெற்ற இவர் எத்தனையோ வகையான பாடல்களைப் பாடியுள்ளார்.

''ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்க லாகாது பாப்பா'' எனப்பாடி குழந்தைகளைச் சுறு சுறுப்படையச் செய்தார். ''அச்சமில்லை அச்சமில்லை'' எனப் பாடி குழந்தைகளின் மனதிலே உள்ள அச்சத்தைப் போக்கினார். இவை மாத்திரமல்ல கண்ணன் பாட்டு, குயில் பாட்டு என்பனவும் பாடி எம்மை மகிழ்வித்திருக்கின்றார்.

தமிழிலக்கிய வானில் சுடர் விட்டொளிரும் விண்மீன் பாரதியார். நாட்டு விடுதலை என்ற புதிய பாடுபொருளைத் தந்ததோடு தமிழ்க் கவிதையாகிய பாட்டு விடுதலையையும் தந்தவர் பாரதியார். 20ஆம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்.

பாரதியாரின் கவிதைகள் சாகாவரம் பெற்றவை. காலத்தை வென்று வாழும் சிறப்புக்குரியன. அடிமைத்தன எதிர்ப்பு, வீரம், தமிழ்ப்பற்று, பெண்ணுரிமை, தொழில் வளர்ச்சி, தேசிய உணர்வு என்பனவெல்லாம் பாரதியின் கவிதைகளில் பளிச்சிடுகின்றன. நடையில் எளிமை, கருத்துக்களிலும் பாடு பொருள்களிலும் புதுமை, கவிதையின் அமைப்பில் நாட்டுப்புறப் பாடல்களையும் எடுத்து வடிவமைக்கும் படைப்பு நோக்கு, சொற்களைச் செறிவோடு உருவாக்கும் நளினம் அனைத்தும் பாரதியின் தனித் தன் மைகளாகும்.பாரதியாரை நேரில் அறிந்து, உணர்ந்து, அவர் கவிதைகளில் ஊறித் திளைத்த பாவேந்தர் பாரதிதாசன் கூறுகின்றார். தமிழுக்குப் புது நெறி காட்டிய புலவன் பாரதி. அவனது கவிதைகள் ஒவ்வொன்றும் நமது உள்ளத்து உணர்வினைத் தூண்டுவன ஆகும்.எனவே பாரதியின் பாட்டுக்கள் உயிரோடும், ஊனோடும் கலந்து உணர்வினை எழுப்ப வல்லவை எனலாம். இவரின் பாட்டிலுள்ள இனிமை என்றும் என் மனதை விட்டு நீங்கா இடம் பெற்றுவிட்டது. எனவே இவரே நான் விரும்பும், எனக்குத் தெரிந்த பாரதியாராவார்.

என்.பாத்திமா ஷனூவரா, தரம்—12,
ஜமாலியா முஸ்லிம் மகாவித்தியாலயம்.






# ஆடு, மாடு, சுண்டெலி போன்று குளோனிங் முறையில் மனிதச் சிசு!

## இத்தாலிய மருத்துவ ஆராய்ச்சியாளர் திட்டம்; மதத் தலைவர்கள் எதிர்ப்பு

1997 ஆம் ஆண்டு ஜனவரியில் பிரிட்டிஷ் விஞ்ஞான ஆய்வு கூடமொன்றில் 'டொலி' என்னும் செம்மறி ஆட்டுக் குட்டியொன்று உருவாக்கப்பட்டது. மரபணு மாற்றத்தின் மூலம் மிருகங்களை உருவாக்கும் முறையில் ஒரு புரட்சியின் ஆரம்பமாக இது அமைந்தது.

'குளோனிங்' என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் மனித பலபடியாக்க திட்டத்தைப் பின்பற்றியே இந்த ஆட்டுக்குட்டி உருவானது. பிரிட்டிஷ் விஞ்ஞானியான இயன் வில்மட் என்பவரே 'டொலி' ஆட்டுக் குட்டியை சிருஷ்டித்தவராவார்.

இதையடுத்து குளோனிங் முறையைப் பின்பற்றி மாடுகள், சுண்டெலி, குரங்கு, பன்றி என்பனவும் உருவாக்கப்பட்டன. புதுமையான இந்த படைப்புக்களைக் கண்டு உலகம் வியந்தது. விஞ்ஞானத்தின் வளர்ச்சி கண்டு பெருமை கொண்டது.

குளோனிங் முறை முதன் முதலில் ஐரோப்பியாவிலும் அமெரிக்காவிலும் 1952 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அது வெற்றியளிக்கவில்லை. 1997 ஆம் ஆண்டிலேயே அது வெற்றியளித்தது. 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரை இந்த முறை மூலம் பல மிருகங்கள் உருவாக்கப்பட்டு வந்தன. இதனால் குளோனிங் முறை உலகுக்கு பழக்கப்பட்ட ஒரு முறையானது.

குளோனிங் முறை என்றால் என்ன? செடி, கொடிகளைப் பதியம் போட்டு உருவாக்குவதைப் போன்றதே அது.

மனிதனை பதிய முறையில் உருவாக்குவது எவ்வாறு?

ஒரு ஆணிடமிருந்து ஒரு திசு (இழையம்) அணு எடுக்கப்படும். கால், கை, தொடை என்று ஏதாவது ஒரு உறுப்பிலிருந்து அந்த தசை அணு எடுக்கப்படும்.

பின்னர் ஒரு பெண்ணின் கரு முட்டையுடன் அந்த அணுவைச் சேர்த்து சோதனைக் குழாயில் வளர விடுவார்கள். இரண்டும் சேர்ந்து கரு முட்டை குழந்தையாகி வளரத் தொடங்கியதும் அந்த முட்டையை ஒரு பெண்ணின் கருப்பைக்குள் வைப்பார்கள்.

கருப்பைக்குள் குழந்தை வளர்ச்சி அடைந்து பத்தாவது மாதம் பிறக்கும்.

ஆனால் இப்பொழுது திடீரென இம்முறை குறித்து ஒரு பெரும் சர்ச்சை உருவாகியுள்ளது. இம் முறையைப் பின்பற்றி ஒரு மனிதச் சிசுவை உருவாக்கப் போவதாக இத்தாலிய மருத்துவ ஆராய்ச்சியாளரான அன்ரிநோரி விடுத்துள்ள அறிவிப்பே இதற்கான காரணமாகும்.

விஞ்ஞானிகள் தரப்பில் இருந்தும் மத தலைவர்களிடமிருந்தும் அவரது முயற்சிக்கு எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. நாஸிவாத பித்துப் பிடித்த எதிர்கால ஹிட்லர் என பலர் அவரை வருணித்துள்ளனர்.

இந்த எதிர்ப்புகளை எல்லாம் கண்டு பின்வாங்குபவராக அவர் இல்லை. மனித குளோனிங் சிசு உருவாக்கப்பட வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்து வருகிறார்.

லண்டன் 'ரைம்ஸ்' பத்திரிகையின் தகவலின்படி மருத்துவர் அன்ரிநோரி அண்மையில் அமெரிக்க தேசிய விஞ்ஞான கல்வி நிலையத்தில் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளார். ''மனித குளோனிங் முறை பெரும்பாலான நோய் நொடிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கக் கூடிய ஒரு முறையாகும். அவ்வாறே பாலியல் ரீதியில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு பிள்ளைப் பேறு வழங்குவதில் குளோனிங் முறை பெரிதும் உதவ முடியும். இவ்வாறான நிலையில் குளோனிங் முறை மூலம் மனிதனை உருவாக்குவதைக் கைவிடுவது அதிஷ்டத்தை எட்டி உதைப்பதைப் போன்றதாகும்'' – இப்படி அவர் கூறினார்.


குளோனிங் முறை மூலம் சிசுக்களை உருவாக்குவது இயற்கை நீதிக்கு முரணானது. மனித மகத்துவத்தை இழிவுபடுத்துவதாகும். இந்த முறை மூலம் சுகதேகியான குழந்தைகளை உருவாக்க முடியும் எனக் கூறினாலும் பலதரப்பட்ட அங்க குறைபாடுகளுடன் பிள்ளைகள் உருவாகும் சந்தர்ப்பமும் உண்டு.

குளோனிங் முறையை எதிர்ப்போர் இவ்வாறு வாதிடுகின்றனர்.

எவ்வாறாயினும் தனது கருத்தை வலியுறுத்துவதற்கு மருத்துவர் அன்ரிநோரி தொடர்ந்து முயன்று வருகிறார். ''எமது நாடுகளில் ஆண்களின் குறைபாடுகளால் பிள்ளைப் பேறு கிட்டாத இரண்டாயிரம், மூவாயிரம் தம்பதிகள் உள்ளனர். அவ்வாறான தந்தைமாரின் ஜனன இழையங்களைப் பயன்படுத்தி அவற்றை பலபடியாக்குவதன் மூலம் தந்தைமாரையொத்த பிள்ளைகளை உருவாக்கவே நான் முயற்சிக்கிறேன்.''

இவ்வாறு அந்த மருத்துவர் தெரிவித்துள்ளார்.

குளோனிங் முறை குறித்து வாதப் பிரதிவாதங்கள் நீடிக்கின்றன. இதற்கு மத்தியில் குளோனிங் முறையை



குளோனிங் முறையில் உலகில் முதன் முதலில் உருவாக்கப்பட்ட டொலி ஆடு இது. குளோனிங் முறையில் உருவாகும் முதல் குழந்தை எப்படி இருக்கும்?

மருத்துவ ரீதியாகப் பயன்படுத்த அமெரிக்க அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. அதற்கென 25 ஆயிரம் டாலர்கள் நிதி வழங்குவதாகவும் அறிவித்துள்ளது.

பரிசோதனைக் குழாய் மூலம் குழந்தைகள் உருவாக்கப்படும் புதுமையை அன்று கண்டோம். இப்பொழுது அதையும் மிஞ்சி குளோனிங் முறை மூலம் குழந்தைகள் உருவாக்கப்படவிருக்கின்றன. அந்த புரட்சிகர திட்டம் நடைமுறையாகும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்றே நம்புவோம்.

— எட்வேட்

## குட்டை, குழப்பம், கூத்து

குட்டையைக் குழப்பி விட்டு
கூத்தாடிக் கூட்டம் ஒன்று
வட்டமாய் எழுந்து நின்று
வெறும் வாயைச் சப்பிக் கொண்டு
முட்டை பார் மீனைப் பார்
முரல் விலாங்கின் வாலைப் பார்
அட்டை பார் தேரைப் பாரென்று
அவரவராய்க் குதிப்பதைப் பார்!

நாடாளு மன்ற மெனும்
நலிந்த பழஞ் சோற்றுப் பானையினை
ஆராய வக்கு மற்று
அலைகின்றார் வெறுங்கையால்
பூராயம் பேசுகின்றார்
புதுக் காட்சிக் கனவுகளாய்
ஊராரின் வாழ்வுறந்து
உடுக்கடித்தும் பாடுகின்றார்!

பாடுபடும் மக்களுக்கே
பகல் இரவுப் பட்டினிகள்
நாடு நகர் விட்டவர்கள்
நடுத் தெருவில் வாழ்க்கையிலும்
மூடப் பெரும் பொய் தேடி
முழு நாட்டைப் புதைத்து விட்டு
கேடு கெட்ட தார் மீகம்
குரல் அடைக்கப் பேசுகின்றார்!

பேசுகின்ற ஜாலங்களில்
பொறி சுமக்கும் ஊடகங்கள்
தூசு பட்ட வாக்குகளை
துளி யளவும் எண்ணாது
மூசு மூசு என் றோடி
முழு இரவும் ஆராய்ந்து
கூச வற்றுப் போக்கிழந்து
குழப்பி விட்டார் குட்டையைத்தான்!

குட்டையிலே பெருக்கெடுத்த
குறை பாட்டு நாற்றமெல்லாம்
செட்டை கட்டி செருக்கெழுந்து
சொறி, டெங்கு நோயாகி
கொட்ட மிட்டு உயிர் குடிக்க
களம் கேட்டு ஓடுது பார்
ஓட்டையிலே பெரும் ஓட்டை
உருக்குலைந்த நாயகமே!

பழையூர்க் கவிராயர்,
உரும்பிராய்.

## தமிழ் உலகம்

தமிழ் படித்தேன்! தமிழ் படித்தேன்!
தரணியிலே நான் வாழ தமிழ் படித்தேன்
தடம் புரளும் எம் வாழ்வில்
தனியாக நான்வாழ தமிழ் படித்தேன்

கொச்சைத் தமிழையும் கொஞ்சும் உடையையும்
பச்சை பச்சையான பாவமான பாவிப்பை
இச்சையின்றி ஏற்றுக்கொள்ள தமிழ் படித்தேன் — இப்போ
மூச்சையில்லா பட்டமாக சுழல்கின்றேன் நான்

பன்னெடுங்காலமாக பாடிவந்த தமிழ்பாட்டு
வன்மையான படிப்பதனால் நிலை மாறி
உண்மையாக உறங்கிவிட்ட எம் தமிழை
உணர்வாக வெளிக்காட்ட தமிழ் படித்தேன்

உணர்வில் சில கவிதை செய்ய
உலகம் எம்மை உணர்ந்து கொள்ள — எம்
நலம் சொல்ல நான்கு வார்த்தை
நான் விரும்பி தமிழ் படித்தேன்

தமிழன்பன், பேராதனை.

## மறக்க முடியாத வாழ்க்கை

மழைத் தூறல் அடிக்க யன்னல் — மூடி
குசினியில் பொரியல் பொரித்து
வெளியில் மழை என்றும் தெரியாது — மகிழ்ந்த
காலங்கள் அவையெல்லாம் அன்று!

மழை வா வெய்யில் வா — என
மகிழ்ந்த காலம் மாறி
மழை வர கிண்ணங்கள் பரவல்
அடுப்பெரிக்க நீர்த்துளி வந்து அணைக்கும்
அன்று மழை வர வெளியில் — நின்று
தண்ணீருக்குள் விளையாடிய — நான்
ஓட்டைக்குடிலில் கிண்ணம் நிரம்ப
பக்குவமாய் வெளியே ஊற்றுகின்றேன்!

அது விளையாட்டுப் பருவம்! — இது
எங்களுக்கு வேதனைப் பருவம்!!

தேவேந்திரம் தாசன், பரந்தன்.

## விதிக்கப்பட்டிருக்கும் விஷச் சூழல்

கொள்கை குறிக்கோள் இலாதுஎம் மானிடர்
நாளிதழ் நல்லநல் ஊடகம் ஓதினும்
வாழ்வியல் கண்டிடா, ''மாங்காய் மடையராய்''
ஆட்சியை எங்கள் அரசுதான் ஓய்ச்சிடின்
மீட்சியை மக்களும் காண்பது எப்படி?
எம்மவர்க்கு இன்று விதிக்க விளைந்தது
பம்பர வாழ்வு பரபரப் பென்றும்
விஷச் சூழல் மேலும் நாள் மேலுமாய்க் கூட
விஷம் விஷம் ஆக விளைவது துன்பமே
வாழ்வும் வசதியும் உள்ளவர் லண்டனில்
தாழ்வுள்ளோர் கூடத் தயங்காக் கடனிலே
ஜேர்மனி மற்றும் கனடா சுவிஸ்கொலண்ட்
பாரகம் விட்டுமே பற்பல நாடுகள் —
சொந்தமண் பெற்றதாய் சொர்க்கம் நினைத்தவர்
தந்தம் உரியவாய்க் கூக்குரல் விட்டனர்
எம், 'அமுது' மாதநாள் சஞ்சிகை தீயிட
மும்முர நேயர் முணுமுணுப் பாரிடம்
பாவம் பலம்பெறு வாய்ச்சொல் வராநிலை
காவிகள் செய்திகள் காவிகளாயுளர்
இன்னும் மிதிவெடித் துன்ப விளைவுகள்
தன்னாலே கைகால் அவையவம் மற்றுயிர்
போக்கியோர் போன்றோர் பொறுமையும் காண்கிறோம்
சண்டை இடுபவர் தானிரு பக்கமும்
கொண்டனராஇப் பொறுப்புகள், புத்தியின்
ஜீவிகள் வாய்புதைத்துள்ளார்

கச்சாயூர்ப் பண்டிதர் கவிஞர் ''சுகசீவன்''

## மனம் மாறும் மனிதர்கள்

பணம் இல்லை என்று வெறுக்காதே
அவர்களிடம் பாசம் உண்டு
அழகு இல்லை என்று வெறுக்காதே
அவர்களிடம் அறிவு உண்டு
அடக்கம் இல்லை என்று வெறுக்காதே
அவர்களிடம் அன்பு உண்டு
கறுப்பு என்று வெறுக்காதே
அவர்களிடம் கவர்ச்சி உண்டு
உடலைப்பார்த்து வெறுக்காதே
அவர்களிடம் உள்ளம் உண்டு.

— சிவஞானம் லதா (அமலா),
கைதடி மத்தி.

# கந்தளாய்க் காட்டுப் பகுதியில் மாணிக்கப் புதையல் வேட்டை

கந்தளாய் குளத்துக்கு வடக்கே காட்டுவழிப் பாதையில் 16 கிலோ மீற்றர் தூரத்தில் சேருநேவ குளம் இருக்கிறது.

இந்தக்குளத்துக்கு மூன்று கிலோ மீற்றருக்கு அப்பால் காட்டுப்பகுதியில் உள்ளது புராதன பௌத்த ஆலயம் ஒன்று.

இந்த ஆலயத்துக்கு அண்மித்த பகுதியில் புதையல் தோண்டப்பட்டதற்கான அடையாளங்களைப் பொலிஸார் கண்டு பிடித்திருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

தகவல் ஒன்றை அடுத்து கந்தளாய் சிரேஷ்ட பொலிஸ் அதிபர் பி.வி.பி ஆயுபால குற்றத் தடுப்புப் பிரிவு உதவி அத்தியட்சகர் குணவர்த்தனா ஆகியோர் தலைமை யிலான பொலிஸ் கோஷ்டி ஒன்று கடந்த 14 ஆம் திகதி அப்பகுதிக்கு விரைந்தது.



குழியிலிருந்து மீட்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் தடயம்

காட்டில் சந்தேகமான பகுதியொன்றை பொலிஸ் கோஷ்டியினர் சுற்றி வளைத்தனர். அவர்கள் சுற்றிவளைத்த பகுதியில் தற்காலிக குடிசை ஒன்று காணப்பட்டது. அங்கு இருந்த 16 பேரைப் பொலிஸார் கைது செய்தனர். அது மட்டும் அல்ல 3 மாட்டுவண்டிகள், 3 மரம் அறுக்கும் வாள்கள், ஒரு துப்பாக்கி ஆகியவை அங்கிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

அங்கு காணப்பட்ட புராதன பௌத்த ஆலயத்தில் பத்து அடி உயரமான புத்தர் சிலை ஒன்று சேதமாக்கப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டது. அதே இடத்தில் சுமார் 30 அடி ஆழமான குழி ஒன்றும் காணப்பட்டது.

அந்தக் குழியில் இருந்து புதையல் எடுக்கப்பட்டதற்கான தடயங்கள் தென்படுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான 16 பேரும் சட்டவிரோதமாக மரம் தறித்த குற்றச்சாட்டின் பேரிலேயே நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டனர். விசாரணையின் பின்னர் அவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். புதையல் தோண்டிய குற்றச்சாட்டின் பேரில் இதுவரை எவரும் கைதாகவில்லை.

இந்தக் காட்டுப் பகுதியில் தோண்டப் பட்ட குழியில் இருந்து பெறுமதி வாய்ந்த மாணிக்கக்கற்கள் மீட்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

புதையல் இருந்ததாக நம்பப்படும் பகுதியில் இருந்து தடயம் ஒன்றும் பொலிஸாரினால் கண்டெடுக்கப்பட்டது.

அந்தத் தடயத்தைப் பரிசோதனை செய்த பொலிஸார் அது புதையல் இருந்த இடத்தை சாஸ்திர முறைப்படி அடையாளமிடுவதற்குப் பயன்படுத்தப் பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கின்றனர்



சேதமாக்கப்பட்ட புத்தர் சிலை

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

— அன்வர் அலி


---

# பித்தன் பதில்கள்

ஆர். ஜெயக்குமார், சுன்னாகம்.

கே : குடாநாட்டில் சில மாணவர்கள் கள்ளமாகக் கள்ளடிக்கிறார்களே பித்தா?

ப : *நாலு எழுத்துப் படித்தவுடன் "இரண்டெழுத்தை" மறந்து விட்டனர் போல.*



ஆர். நந்தன், மானிப்பாய்.

கே : பூதங்கள் ஐந்து என்கிறார்கள் சரியா?

ப : *திருமணமானவர்கள் ஆறு என்கிறார்களே...!*

பி.கண்ணன், சுண்டுக்குளி.

கே : நான் காதலித்த அழகியை விட்டு விட்டு பெற்றோர் வேறு ஒரு பெண்ணை எனக்குத் திருமணம் செய்து வைத்துவிட்டார்களே!

ப : *தம்பி கண்ணா....! குதிரைக்குப் பதிலாக கழுதை கிடைத்தாலும் பயணத்தைத் தொடர வேண்டியது தானே...!*

சுவர்ணா, உடுவில்.

கே : அன்பின் பித்தா சிறு கவிதை ஒன்று, தருவீரா?

ப : *போர்வை இல்லை என்று ஒன்றாய்த் தூங்கினோம். இன்று பால் மாவுக்குக் காசில்லை.*

சொர்ணலதா, வவுனியா.

கே : பித்தா.....! எனது கணவருக்கு நித்திரையில் நடக்கும் வியாதி இருக்கிறது. என்ன செய்யலாம்?

ப : *வீட்டு வேலைக்காரியை உடனடியாக வேலையால் நிறுத்துங்கள். எல்லாம் சரியாகிவிடும்.*

லவன், மானிப்பாய்.

கே : எனது நண்பன் குடிப்பதாகக் குறை சொல்கிறார்களே...!

ப : *கண்டவர் சொன்னால் நம்பலாம். கண்டவரும் சொன்னால் நம்பலாமா?*

எம்.எம்.லத்தீப், மருதானை.

கே : முஸ்லிம் காங்கிரஸுக்கு எத்தனை தலைவர்கள்?

ப : *ஒழுங்கான தலை ஒன்று போய் விட்டது. இதன் விளைவைத்தான் இன்று முஸ்லிம்கள் அனுபவிக் கிறார்கள்.*



சுரேஷ், நாராயண்பிட்டி

கே : பித்தனே....! எனக்கு பாட விருப்பம். ஆனால் பாட்டு வருகுதில்லையே ஒரு ஐடியா சொல்லுங்களேன்.



ப : *மூக்கு முட்டக் குடியுங்கள். பாட்டு சும்மா வரும்.*

மாலா, தெமட்டகொடை.

கே : நல்ல மனைவியிடம் கணவன் எப்படி நடந்து கொள்ள வேண்டும்.

ப : *மேடு, பள்ளம் அறிந்து, மெல்ல நடந்து கொள்ள வேண்டும்.*

கே.பெர்ணாண்டோ, நீர்கொழும்பு.

கே : சிஹல உறுமயவையும் ஜே.வி.பியையும் ஒப்பிடுங்கள் பார்க்கலாம்.

ப : *இலங்கை முழுவதும் சிங்களவர்களுக்கே சொந்தம் என்கிறது சிஹல உறுமய. இந்த நாடு மூவினத்தவர்களுக்கும் சொந்தம் என்கிறது ஜே.வி.பி. ஆனால் சிஹல உறுமய வழியிலேயே ஜே.வி.பி. செல்கிறது.*

முனியாண்டி, பதுளை.

கே : முஸ்லிம் காங்கிரஸைப் போன்று இ.தொ.காவும் பிளவுபடுமா?

ப : *ஐ.தொ.கா, ம.ம.மு, இ.தே., தொ.கா எல்லாம் ஏற்கனவே இ.தொ.காவிலிருந்து பிரிந்தவை தானே.*

ஆர்.சுதன், கோப்பாய்.

கே : சர்வதேச விமான நிலையத்துக்கு ஆபத்து வரக்கூடாது என்பதற்காக கட்டுநாயக்க விமானப் படைத்தளத்தை வேறிடத்துக்கு மாற்றப் போகிறார்களாமே.

ப : *அதே போன்று பொது மக்கள் வசிக்கும் இடங்களில் உள்ள படை முகாம்களையும் அகற்றினால் என்ன?*

ஜே.ஆர்.சொலமன், கொள்ளுப்பிட்டி.

கே : சட்டத்தரணிகள் சிலர் தாடி வைத்திருப்பது ஏன்?

ப : *தாடி வைத்திருப்பது வழக்கில் வாதாடி வெல்லவே....!*



எம்.ஆர்.மூர்த்தி, கண்டி.

கே : தெற்கில் தாக்குதல் நடத்துவதைத் தவிர்க்கும் வகையில் புலிகளுடன் அரசு ஒப்பந்தம் ஒன்றைச் செய்ய முனைந்தமை குறித்து?

ப : *நான் உனக்கு அடிப்பேன். ஆனால் நீ என்னை அடிக்காதே என்று கூறுவது போலத்தான்...!*

ஜோஸப் செந்தூரன், மன்னார்.

கே : கடந்த டிசம்பர் மாதம் புலிகள் அறிவித்த யுத்த நிறுத்தத்துக்கு அரசு இணங்கி இருந்தால்...?

ப : *பெரும் அனர்த்தத்துக்கு முகம் கொடுத்து விட்டு குய்யோ முறையோ என்று புலம்ப நேர்ந்திருக்காது.*

---


THE SMARTEST WAY TO A U.S DEGREE AFTER A-LEVELS

INSTITUTE OF TECHNOLOGICAL STUDIES

B.S. Computer Science
B.A. Computer Info. Systems
B.S. Computer Engineering



B.S. Biological Sciences
B.B.A. Management
B.S. Finance / Marketing
B.S. Elec / Mech Engineering
B.S. Chemistry

TRANSFER TO OVER 150 U.S. UNIVERSITIES

STARTING AUGUST 22, 2001

Institute of Technological Studies
No.7, Kirimandala Mawatha, Col-5
Tel : 586887-8, Fax : 501959
www.search.lk/its



ஆங்கிலம் கற்கச் சுலபமான வழி

சர்வதேச மொழியாம் ஆங்கிலத்தை வீட்டிலிருந்து கொண்டே திறம்படக்கற்க அரியதோர் சந்தர்ப்பம்!
தொழில் வாய்ப்புப் பெற ஆங்கிலம் அத்தியாவசியதேவை வெளிநாட்டில் தொழில் தேடுவோர்க்கு ஓர் வரப்பிரசாதம்!

தபால் மூலம் சிறந்த ஆங்கிலம் கற்பிக்கும் ஒரேயொரு நிறுவனம்!

பாடத்திட்டம் மூன்று தரத்திலானது:


1) *ஆரம்ப டிப்ளோமா*- ஆறுமாதம்-ஆங்கில அறிவு குறைந்தோருக்கு

2) *டிப்ளோமா* - ஆறுமாதம்- க.பொ.த (சா/த) அறிவு உள்ளோருக்கு

3) *உயர் டிப்ளோமா* - எட்டுமாதம் - க.பொ.த (உ/த) ஆங்கிலத்துக்குச் சமன்

சமீப காலத்தில் 10,000 க்கும் அதிகமான மாணவர்கள் தேர்ச்சியடைந்து சான்றிதழ்களைப் பெற்று நன்மை அடைந்துள்ளனர்.

தேர்ச்சிபெற்ற,அனுபவம் வாய்ந்த நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட பாடநெறி!




மேலதிக விபரங்கட்கு :
(தபால் மூலம் அல்லது தொலைபேசி மூலம் தொடர்பு கொள்க)

**A.B.C De Silva**
**(Director-English)**
**Distant Education Service**
**22D, Station Lane, Nugegoda T.P: 856769**

# ஆயுதங்களை வாங்குவது வைத்திருந்து அழகுபார்க்கவா?



## தேரடி அரட்டை

''என்ன தம்பி, உங்கடை ஏரியாவில் நேற்றிரவு ஒரு கள்ளனைப் பிடித்தீர்களாம்''

தேரடியில் லோகனுடன் வந்தமர்ந்த டானியலிடம் கேட்டார் மாஸ்டர்.

''அதை ஏன் மாஸ்டர் கேட்கிறீங்கள். அந்தக் கூத்திலை எங்கடை பக்கம் கனபேருக்கு விசராக்கிப் போட்டுது'' சிரித்தபடி சொன்னான் டானியல்.

''ஏன் தம்பி''

''எங்கடை பக்கம் கொஞ்சநாளாக இரவு 8—9 மணிக்கு தனியாக வாற ஆட்களிடம் நீட்டுக்கத்தி ஒன்றைக் காட்டி, ஒரு ஆள் காசு, நகைகளைப் பறிக்கிற சம்பவங்கள் நடந்தது. இதைத் தடுக்க நாங்கள் கொஞ்சப் பொடியள் சேர்ந்து வேலிகளுக்குள்ளை நேற்றிரவு மறைந்து நின்றோம். அப்ப ஒருத்தர் றோட்டிலை இருட்டுக்குள்ளை மசிந்தினார். நாங்கள் அவரைப் பிடிச்சு சோதித்தோம். மடியிலை நீட்டுக் கத்தி ஒன்று வைத்திருந்தார்.''

''பிறகென்ன? பூசையைப் போட்டு பொலிஸிலை குடுக்க வேண்டியது தானே?'' குறுக்கிட்டார் மாஸ்டர்.

''அங்கேதான் மாஸ்டர் பிரச்சினை, மிரட்டி வழிப்பறி செய்யத்தானே கத்தி வைச்சிருந்தனி?'' என்று கேட்டால் 'ஆயுதத்தை வைத்திருப்பது வேறு; அதைப் பயன்படுத்துவது வேறு! நான் கத்தி வைத்திருந்ததுக்கு நீங்கள் பிடிக்கேலாது' என்று எங்களைக் குழப்பிப்போட்டான். நாங்களும் அவனை விட்டிட்டம்'' என்றான் டானியல்.

''உது என்ன போக்கிரித்தனமான வாதமாக இருக்கு. அவர் என்ன மடியிலை தொட்டுக் கும்புட கத்தியை வைச்சிருந்தவராமோ?''

''அந்தக் கேள்வியை அவனிட்டக் கேட்டனாங்கள். அதுக்கு அவன் சொன்ன பதிலைக் கேட்டு எங்களுக்கு தலை சுத்திப் போட்டுது'' டானியல் தொடர்ந்தான்.

''பல நாடுகள் தடை செய்துவிட்ட ஆயுதத்தை காசு கொடுத்து வாங்கி விட்டு, அதைப் பயன்படுத்தவில்லை; சும்மா வைத்திருக்கிறோம் என்று அரசாங்கம் சொல்லுது, அது போலத்தான் இதுவும் என்று அவன் சொன்னதைக் கேட்டிட்டுப் போய் கட்டிலில் விழுந்த கனபேர் இன்னும் எழும்பவில்லை'' நவரசங்களையும் கலந்த குரலில் சொன்னான் டானியல்.

''அப்ப அந்தக் கள்ளன் விஷயம் தெரிஞ்சவன் தான்'' என்றார் அதுவரை அமைதியாக இருந்த விநாசியர்.

''கள்ளனைப் பாராட்டிறது சரியில்லை விநாசியர்'' என்றார் மாஸ்டர்.

''அவனைவிட மோசமான ஆட்களை விட்டுப்போட்டு, அவனை மட்டும் எப்படி மாஸ்டர் தண்டிக்கிறது'' பூடகமாகப் பேசினான் லோகன்.

விஷயம் விளங்காததால் அப்பாவியாக விழித்த மாஸ்டருக்கு உதவிக்கு வந்தாள் சின்னாச்சி,

''எல்லைப் படையைச் சந்தித்து விட்டு, தலைவர்களோடை பேசியதாக கதை விட்ட மாதிரி, விஷயம் தெரியவில்லை என்பதற்காக, மாஸ்டரை இந்தக் குழப்புக் குழப்பக் கூடாது'' பொய்க் கோபம் காட்டினாள் சின்னாச்சி,

சிரித்தபடியே விநாசியர் விஷயத்துக்கு வந்தார்.

''ஓ—ஏ ஸ்மெல் என்ற றொக்கெட் லோஞ்ஜர்களை இலங்கை இராணுவம் ரஷ்யாவிடமிருந்து வாங்கியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன''

''ஆயுதம் வாங்காமல் விட்டாத்தானே புதினம், ஆயுதம் வாங்கிறது. சகஜம் தானே.'' குறுக்கிட்டார் மாஸ்டர்.

''ரஷ்யாவில் உற்பத்தியான றொக்கெட் லோஞ்ஜர்கள் எரிவூட்டும் இரசாயன வெடிப்பு முனைகளை கொண்டவை. இவை தீப்பிழம் பாக வெடிக்கும் போது ஏற்படும் இர சாயனத் தாக்கங் களைக் கருதி அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் ஆகிய நாடுகள் இந்த ரக ஆயுதத்தைத் தடை செய்துள்ளன.

அப்படித் தடை விதிக்கப்பட்ட ஆயுதங்களை வாங்கியது ஏன் என்று கேள்வி இப்ப எழுந்துள்ளது.

யுத்தம் இன்னமும் தொடர்வதற்கு, இராணுவத்துக்கு ஆயுதங்கள் வாங்குவதில் இடம்பெறும் ஊழல்களில் லாபம் அடையும் பெரும் கைகளே காரணம் என்று செய்திகள் ஏற்கெனவே வெளியாகியிருக்கும் போது, தடை செய்யப்பட்ட ஆயுதங்களை கொமிஷன் காசுக்கு ஆசைப்பட்டுத்தான் வாங்கியிருக்கினம் என்று கருதப்படுகுது'' சொல்லி முடித்தார் விநாசியர்.

''இந்தக் கதைக்கும் கள்ளனின் வாதத்துக்கும் சம்பந்தமில்லையே?'' சந்தேகத்துடன் கேட்டார் மாஸ்டர்.

''தடை செய்யப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்துவது சட்ட விரோதம் என்றால், அவற்றை இலங்கை இராணுவம் ஏன் வாங்கியது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணாரத்னவிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர், 'ஆயுதங்களை வைத்திருப்பது வேறு; பயன்படுத்துவது என்பது வேறு, அணு ஆயுதங்கள் போன்றவற்றை சில நாடுகள் வைத்திருக்கின்றன. அது போலத்தான்' என்று கூறியுள்ளார்'' முடித்தான் லோகன்.

''அணுகுண்டு வைத்திருக்கிற நாடுகள் அவற்றைத் தாங்களே உருவாக்குகின்றன, பரிசோதித்துப் பார்க்கின்றன. ஆனால் இது இன்னொரு நாட்டிலிருந்து எல்லோ வாங்கப்பட்டிருக்கு. அதுவும் பொருளாதார நெருக்கடிக்குள் நாடு இருக்கும் சந்தர்ப்பத்தில், தேவையில்லாமல் வடிவு பார்க்கவே ஆயுதம் வாங்கினம்?'' விஷயம் புரிந்து விட்ட உற்சாகத்துடன் சொன்னார் மாஸ்டர்.

''சோவியத் ஒன்றியம் பிளவுபட்ட பின்னர் ரஷ்யாவுக்கும் பொருளாதாரக் கஷ்டம். எப்படியாவது பணம் வந் தால் சரி என்று ரஷ்யா இருக்கிறது. இந்த நிலையைப் பயன்படுத்தி, ஆயுதம் வாங்குகிறவை கொமிஷன் கூட வேணும் என்று மல்லுக்கட்டி தங்கடை பொக்கெற்றுகளை நிரப்புவது வழக்கம்'' என்றான் டானியல்.

''ஏன் பொம்பிளைப் பேர்ஸும் நிரம்பியிருக்குமெல்லே'' குத்திக்காட்டினாள் சின்னாச்சி.

''ஒரு அரசாங்கம் தன்னுடைய தேவைக்குத்தானே ஆயுதங்களை வாங்குது. பிறகு ஏன் ஆயுதங்களை விற்பவர்கள் கொமிஷன் கொடுக்கினம் என்றுதான் விளங்கேல்லை'' கேட்டார் மாஸ்டர்.

''இன்று வளர்ந்த நாடுகள் விதம் விதமாக ஆயுதங்களை உற்பத்தி செய்கின்றன. அவற்றை விற்றுக் காசாக்க கீழைத் தேய நாடுகள்தான் சந்தையாக உள்ளன. அதற்காக உள்நாட்டுப் போர்களை முடிவில்லாமல் தொடரச் செய்ய என்ன திருகுதாளம் எல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் ஆயுத உற்பத்தியாளர்கள் செய்கின்றார்கள்.

''அதோட விற்பனைப் போட்டி காரணமாக ஒரே ரக ஆயுதங்களில் தங்கடை ஆயுதத்தை வாங்க வைக்க வேண்டிய அவசியமும் அவைக்கு இருக்கு. இதுக்கு பல வழிகளை அவை கையாள்கின்றன.

''முதலில் அரசுப் படைகளுக்கு எங்கடை ஆயுதத்தை வாங்கினால், உங்களுக்கு ரகசியமாக இவ்வளவு கொமிஷன் தருவம் என்று ஆயுதம் வாங்கும் நாட்டின் மேல் மட்டத்துக்குத் தூண்டில் போடுவினம். நாட்டைப் பற்றிக் கவலைப்படாத அரசியல்வாதிகள் அந்தத் தூண்டிலில் இலகுவாகச் சிக்குவினம். நாட்டைக் காப்பாற்ற ஆயுதம் வாங்குவதாகச் சொல்லி, சுவிஸ் வங்கிகளில் உள்ள தங்கடை ரகசியக் கணக்குகளில் வரவை ஏற்றுவினம்'' விளக்கினான் லோகன். ''இந்தியாவில் 'போபர்ஸ்' பீரங்கிகள் வாங்கியதில் பல கோடி ரூபா லாபம் அடைந்ததாக ராஜீவ் காந்தி மேலேயும் குற்றஞ்சாட்டப்பட்டது. அந்த வழக்கு இன்னமும் நிலுவையில் இருக்கு'' ஞாபகப்படுத்தினாள் சின்னாச்சி.

''யுத்தம் முடிவுக்கு வந்தால் தங்கடை விற்பனையும் நின்று விடும் என்பதால், அந்த நாட்டில் சமாதானம் நிலவுவதில் தங்களுக்கு அக்கறை இருப்பதுபோல் காட்டிக்கொண்டு, அமைதி முயற்சிகளை குழப்பிவிடும் கைங்கரியத்தை ஆயுத உற்பத்தி நாடுகள் செய்யத் தவறுவதில்லை'' என்று விநாசியர் தொடர்ந்தார்.

''ஒரு நாட்டில் விடுதலைக்காகப் போராடுபவர்கள் இலட்சியத்தை அடைந்து விடும் நிலை ஏற்பட்டால், தாங்கள் ஏதோ அமைதிக் கடவுள்கள் போல் வேஷம் போட்டுக்கொண்டு, விடுதலை இயக்கத்தைத் தடை செய்வது உட்பட பல வழிகளிலும் முடக்கி, இலட்சியத்தை அவர்கள் அடைய விடாமல் ஆயுத உற்பத்தி நாடுகள் முட்டுக் கட்டை போடுகின்றன.

''இதை சமயோசிதமாகச் சமாளித்து, விடுதலை இயக்கங்கள் அமைதி வழியில் தீர்வு காண முன் வந்து விட்டால், ஆயுதபேரத்தில் கொமிஷன் வாங்கி குறிப்பிட்ட அரசியல்வாதிகள் மூலம் சமாதானக் கதவுகளை மூடும் வேலையை ஆயுத உற்பத்தியாளர்கள் செய்வினம்.

''தங்கடை பிள்ளைகள் வெளிநாட்டிலை படிக்கவும், உள்நாட்டிலை அரசாங்கக் கொண்ராக்டுகள் முதல் அத்தனை வேலைகளையும் பார்த்துக் கோடிகோடியாகச் சம்பாதிக்கவும் வழி செய்யும் அரசியல்வாதிகள் அப்பாவி இளை ஞர்களிடையே இனத்துவேஷத்தைத் தூண்டிவிட்டு போர்முனையில் பலிக்கடாக்களாக்கி விடுகின்றனர்.

''ஆயுத பேரத்தில் கோடி கோடியாக கொமிஷன் வாங்கி சுகப்பட்டுப் போன இத்தகைய அரசியல்வாதிகள், ஆயுத உற்பத்தியாளர்களின் மகுடிக்கு ஆடி போர் முடிவுக்கு வந்து விடாத வகையில் நஞ்சைக் கக்குவார்கள்.'' கால்களை மாற்றிப் போட்டபடி விநாசியர் கூறி முடித்தார்.

அதனைத் தொடர்ந்து மற்றவர்கள் எழுந்து நடந்தனர்.

தேரடி கலைந்தது.

—ஏகலைவன்

# ராசி பலன்

**26.08.2001 முதல் 01.09.2001 வரை**
**சோதிடர் பொ.சந்திரன்.**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

சூரியன், செவ்வாய், சுக்கிரனால் பெருத்த நன்மையுண்டு. ராகு, கேதுவால் ஓர் அளவு நன்மையுண்டு. பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். சகோதரச் சிறப்பு இருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். மன அமைதி இருக்காது. எடுத்த செயல் தாமதமாக நிறைவேறும். சிலசமயம் தடைப்படலாம். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் ஓர் அளவு முன்னேற்றம் இருக்கும்.

**இடபம்: கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

புதன், சனி, குரு, சூரியனால் பேராதரவு உண்டு. கேதுவால் ஓர் அளவு நன்மையுண்டு. பணம் இருக்கும், கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த கருமங்கள் தடைப்படலாம் அல்லது தாமதமாக நிறைவேறும். வீடு, வாகனம் இலாபம் தரும். புத்திரச் சிறப்பு உண்டு. திருமண யோகம் உண்டு. வெளிநாட்டுப் பிரயாணம் அமையும். தொழில் துறையில் போதிய முன்னேற்றம் இல்லை.

**மிதுனம் : மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

சனி, சுக்கிரன், புதனால் நன்மையுண்டு. சூரியன், சந்திரனால் ஓர் அளவு நன்மையுண்டு. பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். எடுத்த செயல் இலகுவில் முடியும். வீடு, வாகனம் இலாபம் தரும். சகோதரச் சிறப்பு உண்டு. குழந்தைகளின் செயற்பாடு திருப்தி தரும். மன அமைதியுண்டு. உடல் ஆரோக்கியம் உண்டு. தொழில் துறையில் பெரிதாக முன்னேற்றம் இருக்காது.

**கடகம் : புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

சூரியன், கேது, சனியால் நன்மையுண்டு. செவ்வாய், புதன், ராகுவால் ஓர் அளவு நன்மையுண்டு. பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரச் சிறப்பு உண்டு. எடுத்த கருமங்கள் தாமதமாக நிறைவேறும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். மன அமைதி இருக்கும். உடல் ஆரோக்கியம் உண்டு. தொழில் துறையில் சில எதிர்ப்புகள் தோன்றலாம். நண்பர்களால் தொல்லை இருக்கும்.

**சிங்கம் : மகம், பூரம், உத்தரம் 1**

சூரியன், புதன், குருவால் நன்மை இருக்கும். ராகு, சனியால் ஓர் அளவு நன்மை இருக்கும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். எடுத்த கருமங்கள் இலகுவில் நிறைவேறும். திருமண வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் நன்று. தொழில் துறையில் பெரிதாக முன்னேற்றம் இருக்காது. நண்பர்களால் உதவி இருக்கும்.

**கன்னி : உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2**

புதன், சனி, சுக்கிரனால் நன்மையுண்டு. சூரியன், ர்ராகுவால் ஓர் அளவு நன்மையுண்டு. பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். புத்திரச் சிறப்பு இருக்கும். எடுத்த கருமங்கள் இலகுவில் நிறைவேறும். மன அமைதி இருக்கும். உடல் ஆரோக்கியம் உண்டு. தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. வசதியான இடமாற்றம் உண்டு.

**துலாம் : சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3**

சுக்கிரன், குரு, சூரியனால் நன்மையுண்டு. புதன், கேது, ராகு, சனியால் ஓர் அளவு நன்மையுண்டு. பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். எடுத்த கருமங்கள் இலகுவில் நிறைவேறும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். மன அமைதி இருக்காது. உடல் ஆரோக்கியம் உண்டு. தொழில் துறை முன்னேறும். நண்பர்களால் உதவியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. திருமண யோகம் உண்டு.

**விருச்சிகம் : விசாகம் 4, அனுஷம், கேட்டை**

சுக்கிரன், சூரியன், புதனால் நன்மையுண்டு. செவ்வாய், ராகுவால் ஓர் அளவு நன்மையுண்டு. பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்காது. மன அமைதி இல்லை. எடுத்த கருமங்கள் தாமதமாக நிறைவேறும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். உடல் ஆரோக்கியம் உண்டு. தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. வசதியான இடமாற்றம் உண்டு. நண்பர்களால் உதவியுண்டு.

**தனு : மூலம், பூராடம், உத்தராடம் 1.**

குரு, சூரியன், புதனால் நன்மை உண்டு. சனி, சந்திரனால் ஓர் அளவு நன்மையுண்டு. பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். மன அமைதி இருக்காது. எடுத்த செயல் இலகுவில் நிறைவேறும். வீடு, வாகனம் இலாபம் தரும். திருமண யோகம் உண்டு, பிரயாண யோகம் உண்டு. தொழில் துறை முன்னேற்றம் உண்டு. பதவி உயர்வு உண்டு. உடல் ஆரோக்கியம் சிறிது பாதிக்கலாம்.

**மகரம் : உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2.**

சனி, சுக்கிரன், புதனால் நன்மையுண்டு. ராகு, கேதுவால் ஓர் அளவு நன்மையுண்டு. பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். எடுத்த காரியம் தாமதமாகலாம். ஆனால் வெற்றியாக நிறைவேறும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் உண்டு. நண்பர்களால் செலவு ஏற்படலாம்.

**கும்பம் : அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3**

குரு, சூரியன், கேதுவால் நன்மை இருக்கும். சனி, புதனால் ஓர் அளவு நன்மை இருக்கும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். எடுத்த கரு மங்களை இலகுவில் முடிக்கலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். சகோதரச் சிறப்பு உண்டு. புத்திரச் சிறப்பு உண்டு. திருமண யோகம் உண்டு. உடல் ஆரோக்கியம் நன்று. தொழில் யோகம் உண்டு. நண்பர்களால் உதவியுண்டு.

**மீனம் : பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி**

சனி, சுக்கிரன், புதனால் நன்மையுண்டு. குரு, செவ்வாய், கேதுவால் ஓர் அளவு நன்மையுண்டு. பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். எடுத்த கருமம் இலகுவில் நிறைவேறும். வீடு, வாகனம் லாபம் தரும். உடல் ஆரோக்கியம் உண்டு. திருமணபலன் உண்டு. மன அமைதி இருக்காது. தொழில் துறையில் ஓர் அளவு முன்னேற்றம் உண்டு. நண்பர்களால் உதவியுண்டு. புத்திரச் சிறப்பு இருக்கும்.

# இளம் சந்ததியை எட்டப்பர் கூட்டமாக்க எதிரி முயற்சி!

## கூலிப்பணிக் கூவல்களுக்கு அடிபணிய வேண்டாம் எனப் புலிகள் எச்சரிக்கை

'தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறை' என்ற பெயரில் கடந்தவாரம் குடாநாட்டில் பரவலாக விநியோகிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் மக்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்திருக்கின்றன.

''யாழ். மண் எதிரியிடம் இருந்து மீட்கப்படும் நாள் வெகு தொலைவில் இல்லை'' என்ற செய்தியையும் —

தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிராகச் செயற்படும் தேச விரோதக் கும்பல்கள், தனி நபர்கள் ஆகியோருக்கு எச்சரிக்கைகளை விடுக்கும் வகையிலும் — காணப்படும் அந்தத் துண்டுப் பிரசுரங்கள் பொது இடங்களில் ஒட்டப்பட்டிருந்தன.

சில பொது நிறுவனங்களுக்கும் அரச அதிகாரிகளுக்கும் அவர்கள் சார்ந்த அலுவலகங்களுக்கும் இவை அனுப்பப்பட்டிருந்தன.

இந்தப் பிரசுரங்களில் ஒன்று யாழ். பத்திரிகையிலும் பிரசுரமாகியிருக்கிறது.

'ச. இளையநம்பி' என்பவரின் ஒப்பத்துடன் புலிகளின் அரசியல் துறை இந்தப் பிரசுரங்களைப் பலருக்கும் அனுப்பி வைத்திருக்கிறது.

அண்மைக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் புலிகளின் உள்ளூர் அரசியல் செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்ட இயக்கப் பொறுப்பாளர்கள் பலர் படையணியிடம் சிக்கி உயிரிழந்துள்ளனர். அதன் பின் தற்போது உள்ளூர் அரசியல் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக 'இளைய நம்பி' என்பவர் நியமிக்கப்பட்டிருப்பதாகத் தகவல்.

### எச்சரிக்கைப் பிரசுரம்

'ஓயாத அலைகள்' நடவடிக்கையைக் கைவிட்ட பின்னர் யாழ். குடாநாட்டைக் கைப்பற்றப் போவதாகப் புலிகள் துண்டுப் பிரசுரங்கள் மூலம் மீண்டும் விடுத்திருக்கும் இந்த அறிவிப்பை யாழ். படைத்தரப்பும் மிகுந்த எச்சரிக்கை உணர்வோடு கவனத்தில் எடுத்திருக்கக்கூடும்.

ஆனால் புலிகளின் பிரசுரங்களில் அழுத்திக் கூறப்பட்டிருக்கும் ஏனைய விடயங்கள் பலருக்கும் வயிற்றில் புளி கரைத்திருக்கக்கூடும்.

'குடாநாட்டு மக்களுக்கு நீண்ட மடல்' என்னும் தலைப்பில் வெளியாகியிருக்கும் பிரசுரம் குடாநாட்டு இளைஞர் சமூகத்தை விளித்து வெளியிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

''குடாநாட்டின் கொந்தளிப்பான இக்காலகட்டத்தில் வாழும் நீங்கள் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டிய நிலையில் காணப்படுகிறீர்கள். சிங்களப் பேரின வாதிகளின் ஆக்கிரமிப்பு ஒருபுறம் நடைபெற்றுக்கொண்டிருக்க மறுபுறம் இரத்தம் சொரிந்து பல்லாயிரம் மாவீரர்கள் உருவாக்கி வரும் புரட்சித் தீயை ஊதி அணைக்கும் முயற்சியில் தேசவிரோதிகள் முழுமூச்சுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

"எமது இளம் சந்ததியினரின் சுதந்திர வேட்கையைத் திசைதிருப்ப அவர்கள் கடுமையாக முயற்சிக்கின்றனர். இதனைச் செயற்படுத்த சமுர்த்தி அலுவலர், அபிவிருத்தித் தொண்டர்கள் போன்று இன்னும் பல பெயர்களில் ஓர் எட்டப்பர் கூட்டத்தை உருவாக்க பிரயாசைப்படுகின்றனர்.

''அடக்கப்பட்ட சமுதாயத்தில் புரட்சி என்பது மாணவர்கள் ஊடாகவே சமூகத்துக்குப் பரவுகிறது. எழுச்சி கொண்ட மாணவர்களை சில துரோகிகளின் காலில் விழத்தூண்டுகின்றனர். அது பயனளிக்காதபோது கல்வி நிலையங்களைத் தொடர்ந்து மூடப்போவதாக எச்சரிக்கின்றனர். சிலர் தேச விரோதிகளை அழைத்துவந்து கல்வி நிறுவனங்களில் அரசியல் நடத்துகின்றனர். துரோகிகளுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு கொட்டமடிக்கின்றனர்.

''தேசத் துரோகம் என்பது வெறுமனே எமது உறுப்பினர்களைக் காட்டிக்கொடுப்பது மட்டுமல்ல. இந்த மண்ணை எதிரிக்கு விற்றுவிடத் துடிக்கும் தேசவிரோதிகளுக்குத் துணைபோவதன் பெயரும் தேசத் துரோகமாகும். சில அரச அதிகாரிகள் கூட தமது கடமைகளை மறந்து தேச விரோதிகளின் அமைப்பாளர்கள் போலச் செயற்படுவதை நாம் அறிவோம்''




— இப்படி அந்தப் பிரசுரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

'அன்பான யாழ். குடாநாட்டு மக்களே' என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டிருக்கும் மற்றொரு பிரசுரம் அரசுடன் இயங்கும் தமிழ்க் கட்சி ஒன்றின் நடவடிக்கைகளைப் பெயர் குறிப்பிட்டுக் கடுமையாகச் சாடி உள்ளது.

வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் நடவடிக்கைகளையும் புலிகள் கடுமையாக விமர்சித்திருக்கின்றனர்.

பொலிஸ் உதவியாளர்கள் என்ற பெயரில் போக்குவரத்துக் கண்காணிப்பு உதவியாளர்களாக இளைஞர்களைச் சேர்க்கும் திட்டத்தையும் புலிகள் தமது பிரசுரத்தில் சுட்டிக்காட்டியிருக் கின் றனர்.

''அரசினதும் இராணுவத்தினரதும் அடிவருடிகளாகச் செயற்படும் ஈ.பி.டி.பியினர் உதவிப் பொலிஸ் படை என்னும் போர்வையில் இளைஞர்களைத் திரட்டும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். இவர்களின் இத்தேசவிரோத நடவடிக்கைகளுக்குத் துணை போகாது விழிப்புடன் இருக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இந்தியப் படையின் ஆக்கிரமிப்புக் காலத்தில் தேசவிரோதக்குழுக்களால் 'தமிழ் தேசிய இராணுவம்' என்னும் பெயரில் பல இளைஞர்கள் திரட்டப்பட்டு அநியாயமாக அழிக்கப்பட்டதை இந்த நேரத்தில் உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருவது மிகப் பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறோம்.

''வேலை வாய்ப்பு என்ற போர்வையில் சிங்கள இராணுவத்தின் கைக்கூலிகளாக எமது இளைஞர்களைச் சிக்க வைப்பதே டக்ளஸின் இன்றைய நாடகம். டக்ளஸ் தப்பியோடும்போது அவரும் அவரது கூட்டமும் தப்பிவிடும். அப்பாவிச் சகோதரர்களாகிய நீங்கள்தான் பெரும் அழிவைச் சந்திக்க நேரிடும்'' என்று அப்பிரசுரத்தில் புலிகள் அறிவுறுத்தி இருக்கின்றனர்.

### புகைத்தல் பழக்கம் அதிகரிப்பு

குடாநாட்டில் 'ரீன் ஏஜ்' பராயத்தினரிடையே சிகரட் பிடிக்கும் பழக்கம் அதிகரித்து வருவதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. பெரும் எண்ணிக்கையில் பாடசாலை மாணவர்களும் இந்தப் பழக்கத்துக்கு அடிமையாகி வருகின்றனர்.

குடாநாட்டின் இளைய தலைமுறை எதிர்கொள்ளும் பெரும் சமூகச் சீரழிவுகளில் ஒன்றாய் இந்தப் புகைத்தல் விவகாரமும் மாறி வருகிறது.

யாழ் நகருக்கு ரியூசன் வகுப்புகளுக்காக வரும் மாணவர்கள் நகரில் மறைவிடங்களில் மட்டுமன்றி வெட்டவெளிச்சத்திலும் கூட கையில் சிகரெட் கொள்ளியுடன் கூடி நிற்பதைக் காண முடிகிறது.

மற்றவர்களுக்குத் தெரியாமல் ஒளித்துப் புகைப்பவர்களுக்கும் இந்தப் பழக்கத்தை முதல் முறையாகக் கற்றுக் கொள்பவர்களுக்கும் வசதியான இடமாக மாறியிருப்பவை நகரின் திரை அரங்குகள்.

மினி சினிமா அரங்குகளையும், சினிமா தியேட்டர்களையும் நிறைத்திருக்கும் இளைய தலைமுறையினர் அங்கெல்லாம் தொடராகச் சிகரெட்டுக்களைப் புகைத்துத் தள்ளுகின்றனர். மூடப்பட்ட திரை அரங்குகளின் உள்ளே சிகரெட் புகை, மூட்டம் போல் பரவி நிறைத்துக் கொள்கிறது. இதனால் புகைப்பவர்கள் மட்டுமன்றி அங்கு படம் பார்க்கச் செல்லும் ஏனையோரும் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருவதைத் தினமும் காணமுடிகின்றது.

'புகைத்தல் தவிர்க்கப்பட்டுள்ளது' என்ற சிவப்பு வர்ண அறிவிப்புக்கள் திரை அரங்குகளில் வெறும் சம்பிரதாய அறிவிப்புகளாகத் தொங்கவிடப்பட்டுள்ள போதும் உள்ளே என்னமோ சிகரெட் புகை திரையரங்குகளைத் தேவலோகமாக மாற்றிவிடுகின்றது. இது போன்ற பல வசதி வாய்ப்புக்கள் புகைத்தலைத் தூண்டுபவையாக இருக்கின்றன.

யுத்தம் தீவிரமடைந்த கட்டங்களில் கூட குடாநாட்டில் சிகரெட்டுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதே இல்லை. தட்டுப்பாடு என்றால் அது விலையை அதிகரிப்பதற்கான செயற்கைத் தட்டுப்பாடே தவிர சிகரெட்டுக்கு ஒரு போதும் குறைவு இருந்ததில்லை. யாழ் சிகரெட் பிரியர்களைப் போரின் தாக்கம் ஒரு போதும் பாதித்ததே இல்லை.

சிகரெட் விநியோகத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் இருந்தாலும் கூட அங்கீகரிக்கப்படாத பல வழிகள் ஊடாக மேல்நாட்டு சிகரெட் வகைளும் கூட குடாநாட்டை வந்தடைந்து விடுகின்றன.

இளைய தலைமுறையினரிடையே அதிகரித்துவரும் சிகரெட் மோகம் அதன் விற்பனையில் திடீர் அதிகரிப்பை ஏற்படுத்தி இருப்பதாக ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

—வலிகாமத்தான்

# அரசுக்கு உயிர் ஊசலாடுகிறது ஜனாதிபதி அவசர கைவைத்தியம்

நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடர் அடுத்த மாதம் 7ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட இருக்கின்றது. கூட்டத்தொடரை ஜனாதிபதி சந்திரிகா அன்று காலை 10 மணிக்கு ஆரம்பித்து வைத்து உரையாற்றுவார்.

நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஆரம்பம் அரசைப் பொறுத்தவரை ஒரு கோலாகல நிகழ்ச்சி ஆகும். இவ்வளவு காலமும் அது அவ்வாறே நடைபெற்று வந்துள்ளது.

ஆனால் இன்னும் இரண்டு வாரங்களில் நடைபெறவிருக்கும் அந்த நிகழ்ச்சி முன்னரைப் போன்று கோலாகலமாக அமையுமா? இல்லாது போனால் அலங்கோலமாக முடிந்து விடுமா?

### அரசு எதிர்நோக்கும் சவால்

நாடாளுமன்ற ஒத்திவைப்புக்கு அரசு எதிர்நோக்கிய சவால்கள், காரணங்கள் இன்னமும் தீர்க்கப்படவில்லை. நாடாளுமன்றத்தில் தான் இழந்த பெரும்பான்மைப் பலத்தை மீண்டும் பெற அரசு செய்த முயற்சிகளும் வெற்றி பெறவில்லை. எதிர்க்கட்சியின் பலம் தொடர்ந்து 115 ஆகவே இருந்து வருகிறது.

ஐ.தே.கவை இணைத்துக் கொண்டு தேசிய நல்லிணக்க அரசா அல்லது ஜே.வி.பியின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு நடத்திகாண் அரசா? இதிலெதைத் தெரிவு செய்வது, எப்படி தெரிவு செய்வது? என்பதை அறியாமல் ஜனாதிபதி திண்டாடிக்கொண்டிருக்கிறார்.

ஐ.தே.கவை இணைத்துக் கொள்ள முடிவு செய்தால் அதற்காக அரசு பெரிய 'விலை'யைக் கொடுக்கநேரிடும். பிரதமர் பதவி, சரிசமமாக அமைச்சரவைப் பதவிகள் என்று அடுத்தடுத்து கோரிக்கைகளை ஐ.தே.க முன்வைத்துக் கொண்டிருக்கின்றது. ருக்மன் சேனநாயகாவும் பி ஐ.தே.க சார்பில் அரசுத்தலைவர்களுடன் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார். ஆனால் இணக்கம் ஏற்படவில்லை.

ஜே.வி.பி தலைவர்களும் ஜனாதிபதியுடன் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர். ஐ.தே.கவைப்போல ஜே.வி.பி பதவிகளைக் கேட்கவில்லை. பொ.ஐ.மு அமைச்சரவைப் பதவிகளைக் குறைக்குமாறே ஜே.வி.பியினர் கேட்டனர். ஐந்து ஆணைக்குழுக்களை உடனடியாக அமைக்குமாறு கோரினர். மக்கள் மீது ஏற்றப்பட்டுள்ள வாழ்க்கைச் செலவு சுமையைக் குறைக்க வேண்டும் என்றனர்.

இந்த இரண்டு கட்சிகளுடனான பேரப் பேச்சில் ஜே.வி.பியுடனான பேரப் பேச்சே ஜனாதிபதிக்கு மிகவும் பிடித்துள்ளது. ஜனாதிபதி இதை வெளிப்படையாகவே கூறியுள்ளார்.

சிறுபான்மைக் கட்சிகள் நிபந்தனைகளை முன்வைக்கின்றன என்று அமைச்சர்கள் சிலர் முன்னர் குற்றஞ்சாட்டினர். அரசுக்கு நெருக்குதல் கொடுக்கிறார்கள் என்று முஸ்லிம் காங்கிரஸ் மீது சீறி விழுந்தார்கள். இறுதியில் மு.கா தலைவர் ரவூப் ஹக்கீமை அமைச்சர் பதவியில் இருந்து வெளியேற்றினர்.

இன்றோ அரசின் முதுகெலும்பை முறிக்கும் அளவுக்கு ஜே.வி.பி நிபந்தனைகளை முன்வைத்துள்ளது.

ஜே.வி.பியின் நிபந்தனைகளுக்கு இணங்கினால் சிறைக் கைதியாவோம் என்று அமைச்சர்கள் சிலர் அச்சம் தெரிவிக்கின்றனர்.

### ஜே.வி.பிக்கு ஜனாதிபதி நற்சான்றிதழ்

ஜனாதிபதியோ ஐ.தே.கவைக் காட்டிலும் ஜே.வி.பியுடன் பேச்சுவார்த்தை நடத்துவது இலேசானது என்று நற்சான்றிதழ் வழங்குகிறார்.

காலம் ஓடிக் கொண்டிருக்கிறது. அடுத்த சில நாட்களுக்குள் ஜனாதிபதி தீர்மானங்களை மேற்கொண்டாக வேண்டும். ஜே.வி.பி நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வதா அல்லது ஐ.தே.க கோரிக்கைகளின்படி நடப்பதா?

ஒத்திவைக்கப்பட்டுள்ள சர்வஜன வாக்கெடுப்பை ரத்துச் செய்யும்படி ஜே.வி.பியும் கோரி வருகின்றது. தாங்கள் விதித்த நிபந்தனைகளை அரசு ஏற்றுக் கொள்ளாவிடின் அரசைப் பதவி கவிழ்ப்போம் என்று அதன் தலைவர்கள் கூறிவருகின்றனர்.

ஆகஸ்ட் 21ஆம் திகதி நடைபெறவிருந்த சர்வஜன வாக்கெடுப்பை ஏற்கனவே ஜனாதிபதி ஒத்திவைத்துள்ளார்.

சில பொருள்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளார். பிரதியமைச்சர்களின் பதவி விலகல் கடிதங்களை வாங்கிக் கையோடு வைத்திருக்கின்றார். அமைச்சர்கள் சிலர் தாமும் பதவி விலகல் கடிதங்களை கையளிக்கப்போவதாக அறிவித்துள்ளனர்.

### கவிழ்க்க — காப்பாற்ற எத்தனம்

ஜனாதிபதி அரசைக் காப்பாற்ற ஒரு புறத்தில் இவ்வாறு தயாராகிக்கொண்டிருக்கிறார். எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்றுகூடி அரசைக் கவிழ்க்க மறுபுறத்தில் தயாராக இருக்கின்றன.

ஊசலாடிக்கொண்டிருக்கும் அரசின் உயிரைக் காக்க ஜனாதிபதி செய்துகொண்டிருக்கும் கைவைத்தியம் பலனளிக்குமா என்பது சில தினங்களில் தெரிந்துவிடும்.

நாடாளுமன்றம் உடனடியாகக் கூட்டப்பட வேண்டும் என்று எல்லா எதிர்க்கட்சிகளும் கோரி வருகின்றன. ஆனால் அதற்கான சாத்தியம் இருப்பதாகத் தெரியவில்லை. ஜே.வி.பியினதோ அல்லது ஐ.தே.கவினதோ ஆதரவு குறித்துத் தீர்மானிக்கப்படுவதற்கு முன் நாடாளுமன்றத்தைக் கூட்டுவது அரசியல் தற்கொலைக்கு ஒப்பானதாகும் என்பதை ஜனாதிபதி அறிவார்.

எனவே செப்டெம்பர் 7ஆம் திகதியே நாடாளுமன்றம் கூடும். அந்தக் கூட்டத்தில் அரசாங்கம் பழைய அரசாங்கமாக இருக்க முடியாது. நல்ல பிள்ளையாக நடந்து கொள்ளப்போகும் அரசாங்கமாகவே இருக்க முடியும்.

ஜே.வி.பி அரசுக்கு வழங்க முன்வந்துள்ள ஆதரவு தற்காலிகமானதாகவே இருக்கும். ஆபத்தான கட்டத்தில் உள்ள நோயாளிக்கு வழங்கும் பிராண வாயுவே அந்த ஆதரவு. பொ.ஐ.முன்னணி அரசு ஜே.வி.பியின் ஆதரவைப் பெற்று ஆட்சியைத் தொடர ஜனாதிபதிக்கு பதவி மக்கள் ஆணை உண்டா?

— அவதானி

# இந்திய சுதந்திர தின வைபவம்



வைபவத்தில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினர்.



இந்தியத் தூதுவர் கோபாலகிருஷ்ண காந்தி கொடி வணக்கம்


**NEW DHIVIYA JEWELLERS**

கலை நயத்துடன் தங்கம், வைரம், நவரத்னம் பதித்த அழகிய டிசைன்களில் நகைகளை உங்கள் மனம் கவர்விதத்தில் தெரிவு செய்ய வெள்ளவத்தையில் ஒரே இடம்.

42-C, Galle Road, Wellawatte, Colombo-06. Tel : 508501, 505065

SPECIALIST IN 22KT GOLD JEWELLERY

**மிருனாஸ் சுப்பர்**

வீட்டிற்கு தேவையான சகல விதமான மளிகைப் பொருட்கள், இறைச்சி வகைகள், ஐஸ்கிறீம், சொக்லெட், பால்மா, சமையலுக்கான அனைத்து தேவைகளுக்கும்

நம்பிக்கையுடன் நாடுங்கள்

MIRUNA'S SUPER

342, Aluthmawatha Road, Colombo-15.
Tel: 525147 Fax: 075-364298
E-mail: miruna@sltnet.lk

**NEW DHIVIYA JEWELLERS**

கலை நயத்துடன் தங்கம், வைரம், நவரத்னம் பதித்த அழகிய டிசைன்களில் நகைகளை உங்கள் மனம் கவர்விதத்தில் தெரிவு செய்ய வெள்ளவத்தையில் ஒரே இடம்.

42-C, Galle Road, Wellawatte, Colombo-06. Tel : 508501, 505065

SPECIALIST IN 22KT GOLD JEWELLERY

ஆரோக்கிய வாழ்வின் உற்ற நண்பன்

கருஞ்சீரக எண்ணை
கருஞ்சீரக குளிகை

Baraka®

நீங்கள் நீரிழிவு நோயால் அவதிப்படுபவரா? அல்லது உடலில் அதிக கொலஸ்ரோல் இருப்பதால் கவலைப் படுகிறீர்களா? கவலைவேண்டாம்...... பராகாவைப் பாவித்து பயனடையுங்கள்.


நாடு முழுவதிலும் உள்ள எல்லா பாமசிகளிலும் கிடைக்கிறது

**EXPOLANKA COMMODITIES (PVT) LTD.**

No 11A, Mile Post Avenue, Colombo-03, Sri Lanka. Fax:676546,
E-mail : expocom@sri.lanka.net
Web site : www.barakaoil.com

Stockists:
* Siva Narumanab Poonga, Jaffna. Tel: 021-2567
* Rasaiah Medical, Vavuniya. Tel: 024-20118
* Super Stores, Kinniya. Tel: 026-36245
* Bowatta medical, Kandy. Tel: 08-222804

ஆயுர் வேத திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றது.



**வேகமாக மாறிவரும் உலகில்...**

ஒரு மணிநேரத்திற்குள் வங்கிக் கடனைப் பெறமுடியுமானால் எவ்வளவு வசதி! NSBயில் வைப்புக் கணக்கு வைத்திருப்பவர்கள் வைப்புத் தொகையில் 90% வரையிலான தொகையை இவ்விதம் பெற்றுக்கொள்ள முடியும்.

ஸ்பீட் லோன்... உங்களுக்கு முற்றிலும் உகந்தது. எந்தவொரு தேவைக்கும் நீங்கள் இக்கடனைப் பெறமுடியும்.

இதற்காக நீங்கள் செலுத்தவேண்டிய வருடாந்த வட்டி உங்கள் வைப்புத் தொகைக்கு வங்கியினால் வழங்கப்படும் வட்டியை விட 2.5% மட்டுமே அதிகமானது. அதே சமயத்தில் உங்கள் வைப்புக்கான வட்டியை வங்கி தொடர்ந்து உங்களுக்கு வழங்கும்.

இக்கடனைப் பெற விரும்பினால் அண்மையில் உள்ள NSB கிளை அல்லது தபால் வங்கிக் கிளையின் முகாமையாளரைச் சந்திக்கவும். விண்ணப்பித்த ஒரு மணிநேரத்தில் கடனைப் பெறுவீர்கள்!

ஸ்பீட் லோன்
வைப்புகளிலிருந்து உடனடிக் கடன்

NSB